விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 312 புரட்டாதி 18ஆம் நாள் வியாழக்கிழமை 04 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

குருப்பெயர்ச்சி பலன்கள் - 2018
பக் - 22

மகாவலி எல் வலயத்தில்

## சிங்களக் குடியேற்றங்கள் நடந்ததை ஏற்ற மைத்திரி

அவர் அனுமதி இன்றி பணிகளை முன்னெடுக்கவும் தடை



யாழ்ப்பாணம், ஒக். 4
மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிகள் வழங்கியமை எனக்குத் தெரியாது. உடனடியாக அங்கு முன்னெடுக்கப்படும் >> 25

## காணி விடுவிப்பை ஆராய புதிய குழு ஒன்று நியமனம்

வடக்கு - கிழக்கு ஆளுநர்கள் தலைமையில்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 4
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள மக்களின் காணிகள் மக்களிடமே ஒப்படைக்கப்படவேண்டும். இந்தச் செயன்முறை டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும். இந்த விடயங்களை முன்னெடுப்பதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்கள் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது. >> 25

## வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு இன்று

சம்பிரதாய அமர்வு 23ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஒக். 4
வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு இன்று நடைபெறவுள்ளது. தீர்மான வரைவுகள், கேள்விகள், குறைநிரப்பு பாதீடு என்பன இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறும் >> 24

## ஏனையோருக்கு வழங்கிய சலுகை எனக்கும் வேண்டும்

அடம்பிடித்தார் விக்னேஸ்வரன்
நிராகரித்தது அமைச்சரவை

கொழும்பு, ஒக். 4
வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு, ஏனைய மாகாண முதலமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை போன்று, தீர்வையற்ற வாகனம் வழங்கப்பட வேண்டும் என்று, அமைச்சர் பைசர் முஸ்தபா முன்வைத்திருந்த அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையினால், >> 25

## 7 லட்சத்துக்கு அதிகமான வழக்குகள் தேங்கியுள்ளன

சொல்கிறார் நீதி அமைச்சர்
தலதா அத்துகோரள

கொழும்பு, ஒக். 4
வழக்குகள் பிற்போடப்படுவது தொடர்பில் எங்களால் திருப்தியடைய முடியாது. ஏழு இலட்சத்துக்கும் அதிகமான வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கிக்கிடக்கின்றன. இவ்வாறு >> 25

## விமல் எம்.பி. அணியின் வருகையால் வெடுக்குநாரி மலையில் பரபரப்பு

முல்லைத்தீவு,ஒக். 4
தொல்பொருள் திணைக்களம் ஆதி சிவன் கோயிலில் வழிபடுவதற்குத் தமிழர்களுக்கு அனுமதி வழங்க மறுப்பதால் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் வெடுக்குநாரி மலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் >> 25

கடலட்டை பிடிப்போரை

## 48 மணித்தியாலங்களுக்குள் வெளியேறுமாறு பணிப்பு

பிரதேச செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் பருத்தித்துறை நீதிமன்றப் பகுதிக்குள் தங்கியிருந்து கடலட்டை பிடிப்பவர்களை 48 மணி நேரத்தில் வெளியேறுமாறு பிரதேச செயலர் பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளார்.
வடமராட்சி கிழக்கில் தங்கி நின்று கடலட்டை தொழிலில் ஈடுபடும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த >> 25

அரசியல் கைதிகள் விவகாரம்:

## மைத்திரி - கூட்டமைப்பு சந்திப்பு நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 4
அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் தீர்மானம் எடுத்து விடுவிப்பது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்று இடம்பெறவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் நடைபெறவில்லை. வடக்கு கிழக்கு அபிவிருத்திச் செயலணியின் கூட்டம் தாமதமாக முடிவடைந்ததால் >> 06

யாழ். பொலிஸ் நிலைய

## பெருங்குற்றப் பிரிவினர் கூண்டோடு இடமாற்றம்

ஒருவருக்கு உடனடிப் பணி நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 4
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பெருங்குற்றப் பிரிவில் பணியாற்றிய 17 பொலிஸாருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. சார்ஜன் தரத்தைச் சேர்ந்த பொலிஸார் ஒருவர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரியாக, இலுப்பைக்கடவை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி >> 25

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை வெளிவரும்

கொழும்பு, ஒக். 4
2018 ஆம் ஆண்டுக்கான 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள், நாளை வெளியிடப்படவுள்ளதாக, இலங்கைப் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, >> 25

## கொலைச் சதி குறித்து மைத்திரிக்குத் தெரியும்

கூறுகிறார் மகிந்த

கொழும்பு, ஒக். 4
தன்னையும், தனது சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ச ஆகியோரைக் கொலை செய்ய முயற்சித்த விவகாரம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வுக்கு பல விடயங்கள் தெரிந்திருக்கும்.
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
விஜயராம >> 06

## ஜமைத்திரிபால கொலைச் சதி: மகிந்த, கோத்தாவுக்கு தொடர்பு?

*ராஜித சேனாரத்ன பரபரப்பு தகவல்*

கொழும்பு, ஒக். 4
அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவைக் கொலை செய்ய முயன்ற விவகாரத்தில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோ-ருக்கு தொடர்பு இருப்பதாக, அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
அரச தலைவர் கொலைச் சதி குறித்துப் புதிய >> 06

## பாலியாற்று நீரை குடாநாட்டுக்கு கொண்டுவரும் தீர்மான வரைவு

வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 4
யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மன்னார் மாவட்டத்தின் பாலியாற்றிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டு வரும் யோசனையை உள்ளடக்கிய தீர்மான வரைவு மாகாண சபையின் இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.
யாழ்ப்பாண மாவட்டத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இரணைமடுவிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் யோசனை ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டது. இரணைமடு விவசாயிகளின் எதிர்ப் >> 25

# பொலிஸ் மா அதிபரை பதவி விலக்க முடியும்

## ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 4
பொலிஸ் மா அதிபரை அரசமைப்புக் குழுவால் பதவி நீக்க முடியும் என்று அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

கேள்வி : அமைச்சரவை கூட்டத்தின் போது அரச தலைவர், பொலிஸ் மா அதிபர் தொடர்பாக கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு இருந்தாரா?

பதில் : விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள பொலிஸ் சேவையை எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்றே அரச தலைவர் கூறினார்.

கேள்வி : பண மோசடி தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு எதிராக நீதி அமைச்சு விசாரணைகளை முன்னெடுக்கின்றதா?

பதில் : இல்லை. இது தொடர்பில் எனக்கும் எதுவும் தெரியாது.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் கயந்த கருணாதிலக்க, ஆம் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன, என்றார்.

கேள்வி : நாட்டில் குற்றங்கள் இடம்பெறவில்லை என்று மைத்திரி வெளிநாட்டில் கூறினாரா?

பதில் : அரச தலைவர் அவ்வாறு கூறவில்லை. நாட்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளனவா அல்லது குறைந்துள்ளனவா என்று அவர் கூறவில்லை. ஒவ்வொரு நாளும் குற்றங்கள் பதிவாகின்றன. அவற்றை குறைப்பதற்கு உடனடியாக தகுந்த நவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

கேள்வி : பொலிஸ் மறுசீரமைப்புக்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

பதில் : காலம் தொடர்பில் என்னால் பதில் கூறமுடியாது.

கேள்வி : பொலிஸ் மா அதிபருக்கு எதிராக பலதரப்புக்களிடமிருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவரை பதவி நீக்குவதற்கான அனுகுமுறைகள் கையாளப்படுகின்றதா?

பதில் : இல்லை. அவ்வாறு எந்த அணுகுமுறையும் இல்லை. விசாரணைகள் இடம்பெற்று கொண்டிருக்கின்றன. பொலிஸ் மா அதிபரை பதவி நீக்கும் அதிகாரம் அரசமைப்புக் குழுவிடமே உள்ளது. எம்மால் எதனையும் கூறமுடியாது என்றார். (5)

# 5 ஆயிரம் கிலோ நெற்கொள்வனவு

## அரசு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 4
சிறு போகத்தில் விவசாயி ஒருவரிடமிருந்து ஆகக் கூடியது 5 ஆயிரம் கிலோ நெல்லைக் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அரிசிக்காக நியாயமான சந்தை விலையொன்றை முன்னெடுப்பதன் மூலம் விவசாயிகளுக்கும் நுக்வோருக்கும் உதவி வழங்கும் நோக்கிலேயே இந்தச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சருமான மலிக் சமரவிக்கிரம ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (5)

# தமிழன் குண்டு வெடித்து விவசாயி காயம்!

முல்லைத்தீவு, ஒக். 4
முல்லைத்தீவு கேப்பாபுலவு பிலக்குடியிருப்பில் உழவியந்திரத்தைப் பயன்படுத்தி காணியை உழுதபோது நிலத்தில் புதைந்து கிடந்த தமிழன் குண்டு வெடித்ததில் குடும்பத் தலைவர் காயமடைந்துள்ளர்.

அரியராசா ஜெகன் (வயது40) என்பவரே, நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

குண்டு வெடித்து கையிலும், இடுப்பிலும் காலிலும் சிறு சிதறு துண்டுகள் தாக்கியுள்ளன. (5,ரி3)

# காரை நகரில் உல்லாச விடுதி அமைப்பதற்கு எதிராக மனு

## நேற்றுப் பிரதேச செயலரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4
காரைநகரில் உல்லாச விடுதி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மனு நேற்றுப் பிரதேச செயலரிடம் பொது மக்களால் கையளிக்கப்பட்டது. இளைஞர்கள், பொதுமக்கள் ஒன்றுதிரண்டு இந்தக் கையெழுத்துக்களைச் சேகரித்திருந்தனர்.

காரைநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உல்லாசவிடுதிக்குஎதிராகச் சைவமகாசபையின் தலைவர் மருத்துவர் நந்தகுமாரால் ஊர்காவற்றுறை நீதிம ன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் விடுதிப் பணிகளைத் தொடர்வதற்குத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே காரைநகரில் உல்லாச விடுதிக்கு அனுமதியளிக்கவேண்டாம் என்று வலியுறுத்திக் கையெழுத்துச் சேகரிப்பதில் அந்தப் பகுதி இளைஞர்கள் ஈடுபட்டனர். அவர்களின் மனுவைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலர், விடயத்தை மாவட்டச் செயலருக்குத் தெரியப்படுத்தி விரைவில் ஒரு காத்திரமான பதிலைத் தருவதாக உறுதியளித்தார் என்று இளைஞர்கள் தெரிவித்தனர்.

காரைநகர் வலந்தைச் சந்திப் பகுதியில் சிவனின் சிலை ஒன்று அமைப்பதற்கு ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த இடம் உல்லாசவிடுதி அமைப்பதற்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்தே அங்கு 'உல்லாச விடுதி வேண்டாம் என்கிற எதிர்ப்புக் கிளம்பியிள்ளது. (உ7)

# வவுனியாவில் அரச பேருந்துகள்நேற்று சிறு பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம் ஒக் 4
வவுனியா அரச பேருந்துகள் நேற்று மதியம் 12 மணியிலிருந்து சில மணிநேரங்கள் பணிப்புறகணிப்பில் ஈடுபட்டனர்.

வெளிமாகாண சேவையில் ஈடுபடும் பேருந்துகள் வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்குள் செல்வதற்குத் தடைவிதிக்கபட்டுள்ளது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற வவுனியர் சாலைக்கு சொந்தமான அரச பேருந்து வவுனியா புதிய பேருந்துநிலையத்திற்குள் சென்று பயணிகளை ஏற்றியதாக தெரிவித்து குறித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனரை வவுனியா பொலிஸார் நேற்றையதினம் விசாரணைக்கு அழைத்திருந்தனர்.

குறித்த சாரதி மற்றும் நடத்துனர் விசாரணைக்கு அழைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா சாலைக்கு சொந்தமான அரச பேருந்துகள் நேற்று சிறிது நேரம் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டன. எனினும் கைதுசெய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் விடுவித்ததன் பின்பு பேருந்துசேவை வழமைக்கு திரும்பியது.

கடந்த வாரம் முதல் வெளி மாகாணங்களிற்கு சேவையில் ஈடுபடும் சகலபேருந்துகளும் புதிய பேருந்துநிலையத்திற்குள் நுளைவதற்கோ அல்லது பேருந்து நிலையம் முன்பாக தரித்துநிற்பதற்கோ தடைவிதிக்கபட்டுள்ளமை குறிப்பிட தக்கது. எனினும் வவுனியாசாலைக்கு சொந்தமான பேருந்துகள் புதியபேருந்து நிலையத்திற்குள் செல்லமுடியாது தடைவிதித்திருப்பதானது அநீதியான செயற்பாடென அரச பேருந்து சேவைத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். (உ7,110)

*அத்துமீறிய*

# இந்தியப் படகுகளை விடுவித்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஒக். 4
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்தியப் படகுகள் இரண்டை விடுவிக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

திருத்தங்களுடன் அண்மையில் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி தடைச் சட்டத்தின் கீழ் பிடிபட்ட படகுகளை அரசுடமையாக்க மன்று உத்தரவிட்டிருந்தது.

ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி இந்தியாவின் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பழனி ஆகியோருக்குச் சொந்தமான 4 நாட்டுப் படகுகளை கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர்.

இரண்டு நாட்டுப் படகுகளின் உரிமையாளர்கள் வழக்கில் முன்னிலையாகினர். இருவரின் படகுகள் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. படகின் உரிமையாளர்கள் தமது படகுகள் நாட்டுப்படகு வகையை சேர்ந்தவை எனவும் றோலர் படகுகளே நீண்ட தூரம் பயணிக்கக் கூடிய நிலையில் இவை தவறுதலாகவே எல்லை தாண்டியதாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இவற்றினை ஆராய்ந்த நீதிபதி, இனிமேல் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடக் கூடாது என்று எச்சரித்து இரண்டு படகுகளையும் விடுவித்து உத்தரவிட்டார்.

எஞ்சிய இரு படகுகளில் ஓர் படகின் உரிமையாளர் அற்றோனித் தத்துவத்தை வழங்கியிருந்த நிலையில் அதனை நிராகரித்த மன்று, உரிமையாளரை நேரில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டது. (5,105)

# திருட்டுக் குற்றச்சாட்டில் இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம்,ஒக் 4
புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் சந்தியில் அமைத்துள்ள தொலைபேசி விற்பனைக் கடையில் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் உள்பட இரண்டு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தொலைபேசி மற்றும் இலத்திரனியல் பொருள் விற்பனைக்கடையில் கடந்த வாரம் ஒன்பது தொலைபேசிகள், ஒலிபரப்புச் சாதனம், மூன்று கெட்போன்கள் போன்ற பல்வேறு பொருள்கள் திருடப்பட்டன. கடையின் உரிமையாளர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்திரபால வழிகாட்டலின் கீழ் குற்றத்தடுப்பு 3 பிரிவு பொலிஸ் அதிகாரி அல்விஸ் தலைமையில் நடந்த விசாரணையில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா மெனிக்பாம் பகுதியில் தொலைபேசிகளை விற்பனை செய்த பெண் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கடந்த இரண்டாம் திகதி கைது செய்யப்பட்டார். அவரிடம் நடந்த விசாரணையில் உடையார்கட்டு வெள்ளப்பள்ளத்தினைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே தொலைபேசிகளை அவரிடம் கொடுத்து விற்பனை செய்து தருமாறு கூறியது தெரியவந்துள்ளது. அந்த இளைஞனும் கைது செய்யப்பட்டார்.

இருவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ7,ரி3)

# என் மீதான குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது

## அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 4
வெளிநாட்டு வங்கிக் கணக்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினரின் கணக்குக்கு ஆயிரத்து 500 இலட்சம் ரூபா பணம் வைப்பிட்டுள்ளமை தொடர்பாக என்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு பொய்யானதாகும் என்று நீர்ப்பாசன் மற்றும் நீர் வளங்கள் மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

இடர்முகாமைத்துவ அமைச்சில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் ஒருசில மக்கள் பிரதிநிதிகள் செய்யும் ஊழல்களுக்காக மொத்த உறுப்பினர்களின் மீதும் குற்றம் சுமத்த முடியாது. வெளிநாட்டு வங்கிக் கணக்கிலிருந்து பணம் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் யாராக இருந்தாலும் அவர்களுக்கான அதியுச்ச தண்டனை பெற்றுக் கொடுக்கப்படவேண்டும். வெளிநாட்டுவங்கி கணக்கொன்றிலிருந்து எனது கணக்குக்கு பணம் வரவேண்டியதற்கான அவசியமும் இல்லை. அவ்வாறான வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களில் நான் ஈடுபடவுமில்லை என்றார். (5)

# வழிப்பறித்திருடன் வசமாக மாட்டினார்



தென்மராட்சி,ஒக்.4

**தென்மராட்சி பிரதேசத்தில் ஈருருளியில் செல்லும் பெண்களின் கைப்பைகளை வெவ்வேறு உந்துருளிகளில் பயணித்து அபகரித்துச் சென்ற, நாவற்குழி தச்சன்தோப்பைச் சேர்ந்த 23 வயதுடைய நபரை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.**

இவரிடமிருந்து 2 உந்துருளிகள், 19 ஆயிரம் ரூபா பணம், 18 அலைபேசிகள், கைப்பைகள், வங்கிப் புத்தகங்கள், தேசிய அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் போன்றவற்றை சந்தேக நபர் வீட்டிலிருந்து கைப்பற்றியுள்ளனர்.

வரணியில் சகோதரனின் உந்துருளி திருத்தும் நிலையத்தில் பணியாற்றும் இவர், மதிய உணவுக்காக வீட்டுக்கு வருவதற்கு திருத்தத்திற்கு கொண்டு வரப்படும் உந்துருளிகளில் பயணித்து, திருட்டுக்களை மேற்கொண்டமை தெரிய வந்துள்ளது. கடந்த முதலாம் திகதி பகல் மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்த அரச அலுவலரின் ஈருருளியின் கூடைக்குள் வைக்கப் பட்டிருந்த கைப்பையை அபகரித்துச் சென்ற போது, அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணிகளின் உதவியுடன் அடையாளம் காணப்பட்டு அதற்கு முன்னர் நடைபெற்ற கைப்பைகள் அபகரிப்பு சம்பவங்களுடன் ஒப்பிடுகையில் ஒரே ஆளாக வழிப்பறியில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவரைக் கைது செய்த பொலிஸார் நாவற்குழி தச்சன்தோப்பில் உள்ள வீட்டில் சோதனை நடாத்தியபோது வழிப்பறியில் திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய முதன்மைப் பொறுப்பதிகாரி எஸ்.பி.விக்கிரசிங்கவின் வழிநடத்தலில் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி உப பரிசோதகர் ஏ.பி.வி;ஜயக்கோன், உப பரிசோதகர் இந்து பிரதீபன், மாவட்டப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஆர்.பிரதீப் மற்றும் நா.விஜிதரன் ஆகியோர் தலைமையில் பொலிஸ் அலுவலர்களான நிசாந்த பண்டார ரத்நாயக்கா, சுரேஷ் புவனச்சந்திரன், நவரத்தினம் தினேஸ் ரங்க, ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் குழுக்களாகச் செயற்பட்டு, வழிப்பறிக் கொள்ளையனைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் சாவகச்சேரிப் பகுதியில் டச் சாலை, கற்குழி ஒழுங்கை, மகளிர் கல்லூரிச் சாலை, கல்லடிமூட்டுச் சாலை, போன்ற இடங்களில் ஈருருளியில் சென்ற 8 பெண்களிடம் வழிப்பறிகளை மேற்கொண்டமை தெரியவந்துள்ளது. இந்த வழிப்பறி சம்பவங்களுடன் தொடர்புடைய நபருக்கு மூன்று இடங்களில் பணம் மற்றும் அலைபேசிகள் உள்ளிட்ட பொருள்கள் வழிப்பறி மேற்கொண்டமை தொடர்பாகத் தனித்தனியாக மூன்று குற்றச்சாட்டுக்களுடன் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர் .வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(9)

# அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து பண்டத்தரிப்பில் கவனவீர்ப்புப் போராட்டம்

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் பண்டத்தரிப்பு சந்தியில் சுற்றுவட்டத்துக்:கு அருகில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலைக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

குறுகிய கால மறுவாழ்வு வழங்கியாவது, தங்களை விரைவில் விடுதலை செய்ய வேண்டும் என்ற, கோரிக்கையை முன்வைத்து கடந்த மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் அநுராதபுரம் சிறைச்சாலையில் எட்டு அரசியல் கைதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட உணவு ஒறுப்புப் போராட்டமானது,

தற்போது அனைத்து சிறைகளிலும் உள்ள அரசியல் கைதிகளும் இணைந்து முன்னெடுக்கும் பெரும் போராட்டமாக விரிவடைந்துள்ள சூழலில், அவர்களின் கோரிக்கைகள் அரசால்;

நிறைவேற்றப்படவேண்டும், வருடக்கணக்காக முறையான விசாரணையோ அல்லது விடுதலையோ இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த அரசியல் கைதிகளின் உயிர்களைக் காக்கவேண்டும், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகின்ற யாழ். மாவட்ட பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களையும், மனிதநேயமுள்ள சமூக செயற்பாட்டாளர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுத்துள்ளனர்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முல்லையில் பெரும் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு ,ஒக் .4

சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தி நாளை , முல்லைத்தீவு நகரில் பெரும் கவனவீர்ப்பு பேரணி ஒன்றும் மனு கையளிக்கும் நிகழ்வு ஒன்றும் நடைபெறவுள்ளதாக வன்னிக் குறோஸ் பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் நீண்டகாலமாக எதுவித விசாரணைகளும் இன்றிச் சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினை விரைவுபடுத்தக் கோரியும்.

ஆண்டுக் கணக்கில் சிறையில் வாடும் 137 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினை பெற்றுக்கொடுத்து அவர்கள் குடும்பத்துடன் இணைந்து கொள்வதற்கும் ,

நல்லிணக்க அரசின் இழுத்தடிப்பு செயற்பாட்டினை கண்டித்தும், அரசின் நழுவல் போக்கினையும் நயவஞ்சகத் தனத்தையும் பன்னாட்டுக்கு எடுத்துக்காட்டவும், அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்கவும் கோரி ,மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலத்திற்கு முன்பாக நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேரணிக்கான போக்குவரத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வன்னிக்குறோஸ் பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

(ரி 3)

## தமிழத் தேசியக் கூட்டமைப்பினர்

# அரசை கவிழ்த்து விட்டு பதவி விலக வேண்டும்

யாழ்ப்பாணம,; ஓக்.4

தமிழ்த் தேசியக் கூட்;டமைப்பு அரசியல் கைதிகள் விடயத்தில் ஆக்கபூர்வமான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அல்லது தற்போதைய அரசை கவிழ்த்து விட்டு தாங்களும் பதவிகளில் இருந்து விலகிச் செல்ல வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் வி.ஆனந்த சங்கரி தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் கூட்;டமைப்பினர் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அல்லது இந்த அரசை உட்னடியாக கவிழ்க்க வேண்டும். இதனை செய்துவிட்டு கூட்டமைப்பில் உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவியை விட்டெறிந்து விட்டு செல்லுங்கள். தமிழ் மக்கள் தமக்கான தலைமையை அவர்களே தெரிவு செய்வார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களில், ஆயுள்த் தண்டனை அல்லது குறுகியகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள். தங்கள் சிறைக் காலத்தில் ஒழுக்கமாக இருந்தால், இருவாரங்கள் வீடுகளுக்கு சென்று வரக்கூடிய ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளன. இப்போதைய நீதி அமைச்சருக்கு தெரியுமா என்று எனக்கு தெரியவில்லை. மேலும் இந்த சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளவர்களை அரச தலைவர் மன்னிப்பில் விடுதலை செய்யமுடியும்.

அரசியல் கைதிகள் விடயத்தில் கூட்டமைப்பில் இருந்து சம்பந்தனும், சுமந்திரனும் மட்டுமே அரசுடன் பேசுகின்றனர். ஏன் இவர்கள் இருவரும்தான் சட்டம் தெரிந்தவர்களா? ஏன் ஏனையவர்கள் கலந்துரையாடலுக்கு செல்வதில்லை. அரசியல் கைதிகள் தொடர்பில் சட்டமா அதிபர் போன்றவர்களுடனான சந்திப்பில் ஏன் சம்பந்தன் கலந்து கொள்வதில்லை ? காளி கோயில் திருவிழாவுக்கு போய்விட்டாரா? கைதிகளின் விடயம் திருவிழா போல அல்ல. அங்கு உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. எனவே அனைத்துத் தரப்பும் இணைந்து இந்த விடயத்துக்கு தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(8)

# சட்டவிரோதமான மதுபான விற்பனையாளர்கள் கைது

யாழ்ப்பாணம்.ஒக்.4

.யாழ்ப்பாணம் சின்னக்கடை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானங்களை விற்பனை செய்த நபர்களை யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.






மதுவொழிப்பு தினமான நேற்றைய தினம் மதுபான சாலைகள் மூடப்பட்டு உள்ளன. இந்த நிலையில் , யாழப்பாணம். சின்னக்கடை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்கப்படு வதாக தமிழத்; தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர்களான வை.கிருபாகரன் , ஜெ. ரஜிவ்காந், ஜெனன் மற்றும் ம.மயூரன் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அதனை அடுத்து உறுப்பினர்கள், சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்கப்படுவதாக கூறப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன் போது மாநகர சபையின் வரி அறவீட்டு உத்தியோகத்தர்களும் உடன் இருந்துள்ளனர்.

அதன் பின்னர் சட்டவிரோதமான முறையில்.மதுபானம் விற்பனை செய்த நபரை பிடித்ததுடன், அவரிடம் இருந்து 250 மில்லி லீற்றருடைய 13 சாராயப் போத்தல்களையும் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட சாராய போத்தல்களையும் பிடிபட்ட நபரையும் யாழ்ப்பாண பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

(37)



சாவகச்சேரி நகரசபை எட்டாம் வட்டாரம் நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி ஆகிய பகுதிகளில் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவனின் ஏற்பாட்டில் 8 புதிய மின் விளக்குகள் அண்மையில் பொருத்தப்பட்டன. (ம-159,9)

# அதிபர் இல்லாமல் இயங்குகிறது முத்துக்குமாரசாமி மகா வித்தி.

**யாழ்ப்பாணம், ஒக். 4**

**கைதடியிலுள்ளஒரேயொருஉயர்தரப்பாடசாலையானகைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் கடந்த சில மாதங்களாக அதிபர் இல்லாத நிலையில் இயங்கி வருகிறது.**

மேற்படி பாடசாலையில் இதுவரை காலமும் கடமையாற்றிய அதிபர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார். இதையடுத்து உபஅதிபரே பாடசாலை நிர்வா கத்தை நடத்தி வந்தார். உபஅதிபரும் அண்மையில் வேறொரு பாடசாலைக்கு அதிபராகநியமனம்பெற்றுச்சென்றுவிட்டார். இதையடுத்தே குறித்த பாடசாலை அதிபர்கள் இல்லாமல் இயங்கி வருகிறது.

இது தொடர்பாக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, "குறித்த பாடசாலை'1சி'தரத்தல்உள்ளபாடசாலைஆகும். இந்த பாடசாலைக்கான அதிபர் நியமனத்தை மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது. அந்தவகையில் அதிபருக்கான விண்ணப்பம் கோரப்பட்டு அவர்களுக்கான நேர்முகத் தேர்வும் நடைபெற்றுள்ளது. எனவேஇன்னும்சிலதினங்களில்அந்தப்பாடசாலைக்கு அதிபர்நியமிக்கப்படுவார்"-என்றார். (ம-8,288)

## கொடிகாமம் வித்தியின் பரிசளிப்புவிழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 4

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல்2மணிக்குவித்தியாலய ஞானம் அரங்கில் வித்தியாலய அதிபர் ப.தர்மபூபதி தலைமையில்நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில்தலைமைவிருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி கே. சயந்தன், சிறப்புவிருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர்அ.பிறேமதாஸ், மதிப்புறு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் ந.இராசவிசாகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-159,9)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட பகுதியில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. அதன் ஒரு பகுதியாக பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் வழிகாட்டல் குழு கூட்டம் பருத்தித்துறை நகரசபையில் பருத்தித்துறை நகரசபை தவிசாளர் யோசப் இருதயராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ம)

## கூட்டுறவின் அரவணைப்பு கடன் திட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம்பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின்கிராமியவங்கிஊடான 'கூட்டுறவின் அரவணைப்பு கடன் திட்டம்' இன்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

சங்கத்தின்தலைவர்என்.எஸ்.சத்தியதாசன்தலைமையில்நடைபெறும் இந்த நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கடன் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார்.

இந்தக் கடன் திட்டம் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் முதற் கட்டமாக கூட்டுறவின் அரவணைப்புக் கடன் திட்டத்திற்கு விண்ணப்பித்த முப்பது பயனாளிகளுக்கு கடன் பத்திரங்கள் வழங்கி வைக்கப்படும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் செ.ஜெகநாதன் தெரிவித்தார். (ம-17)

## ஆன்மிகஉரைகள்

யாழ்ப்பாணம்சின்மயாமிஷன் அனுசரணையுடன் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள கிருஷ்ணாத்மானந்தாசுவாமிகளின் ஆன்மிகச் சொற்பொழிவு இன்று தொடக்கம் 3 தினங்கள் மாலை 6 மணிக்கு நல்லூர் சிறிதுர்க்காமணிமண்டபத்தில்நடைபெறவுள்ளது. நாளை "அறிவியலும்சாஸ்திரமும்", நாளைமறுதினம் "நிகழ்காலத்தில் வாழும் கலை " எதிர்வரும் 6ஆம் திகதி "வெற்றியின் ரகசியம்" ஆகியவைதொடர்பில்சொற்பொழிவு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9,159)

### கூட்டுறவின் அரவணைப்புக் கடன் திட்டத்தின் கீழ்

# நுண் நிதிக் கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குகடன்

யாழ்ப்பாணம், ஒக். 4

கூட்டுறவின் அரவணைப்புக் கடன் திட்டத்தின் கீழ், நுண் நிதிக் கடன்திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கடன் திட்டம் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கிராமியமட்டங்களில்இதுதொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுஎன்றுவடக்குமாகாணகூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

கூட்டுறவுக்கிராமியவங்கிகள்சிக்கனக்கடன்வழங்கும்கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றின் ஊடானநுண்நிதிக்கடனால்பாதிக்கப்பட்டவர்களுக்கான கடன்கள் குறைந்தவட்டியுடன்வழங்கப்படுகின்றன. பெண்களில் 75 வீதமானவர்களுக்கும் இளையோர்களில் 25 வீதமானவர்களுக்கும் இந்த அடிப்படையில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக்கடன் திட்டம் தொடர்பாக முதற் கட்டமாக யாழ்ப்பாண மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கனக் கடன் வழங்கும் சங்கங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் அலுவலகங்கள், சமுக அபிவிருத்திஅலுவலகங்கள்போன்றவற்றுக்குத் துண்டு அறிக்கைகள், பதாகைகள் என்பன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவற்றை சங்கங்கள்தமதுகிளைநிலையங்களில் காட்சிப்படுத்தி இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்தக்கடன் திட்டங்களுக்கு விண்ணப்பிப்போருக்குஅவற்றைவிரைவாகவழங்கிவைக்கவும்சங்கங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்-என்றார். (ம-17)



## உயிராபத்து அறிவுறுத்தல் இல்லாத சிகரெட் விற்பனை செய்தமைக்காக கடை உரிமையாளருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஒக். 4

புகைத்தல் சம்பந்தமான எச்சரிக்கைப் படமில்லாத சிகரெட்டை விற்பனைக்குவைத்திருந்தஉணவகஉரிமையாளருக்குநீதிவான் 3ஆயிரம்ரூபாதண்டம்விதித்தார்.

காரைநகர் துறைமுகத்திற்கு முன்பாகவுள்ள உணவகத்தை சோதனைக்குட்படுத்தியபொதுச்சுகாதாரப்பரிசோதகர்ம.ஜெயபிரதீப்அங்கு புகைத்தல் சம்பந்தமான எச்சரிக்கைப் படம் பொறிக்கப்படாத சிகரெட்பைக்கற்றுக்கள்இருந்தமையைஅவதானித்ததைஅடுத்துஊர்காவற்றுறைநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையையடுத்து நீதிவான் 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (ம-115)

## ஆசிரியர் தின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 4

**அருணோதயா**

யாழ்ப்பாணம், அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் பன்னாட்டு ஆசிரியர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. கல்லூரியின் மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆசிரியர்களுக்கான மைதானப் போட்டிகளுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுபிற்பகல்ஒருமணியளவில் கல்லூரியின் மாணவ மன்றத் தலைவர் சாருதன்தலைமையில்மதிப்புறுத்தல்நிகழ்வுகள்நடைபெறும்.

**கச்சாய் அ.த.க பாடசாலை**

கச்சாய் அ.த.க பாடசாலையில் பன்னாடடு ஆசிரியர் தினம் நாளை வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலையின் தலைமை மண்டபத்தில்பாடசாலையின் முதல்வர்காசிநாதர்குணசிங்கம்தலைமையில்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விருந்தி னர்களாகக் கவிஞர் தம்பிப்பிள்ளை நாகேஸ்வரன்,ஓய்வுநிலைப்பிரதிஅதிபர் சின்னத்தம்பிமுத்துப்பிள்ளையும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**போக்கட்டி அ.த.க.பா.**

கொடிகாமம் போக்கட்டி அரசியனர்தமிழ்க்கலவன்பாடசாலையில்பன்னாட்டுஆசிரியர் தினநிகழ்வுகள்நாளைவெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.


பாடசாலைமுதல்வர்தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் காலை 10 மணி தொடக்கம் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக த் தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும்சிறப்புவிருந்தி னராகத் தென்மராட்சிக் கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மதிதரனும் கலந்து கொள்

## இந்தப் பருவமழைக் காலத்தில்

# 15 லட்சம் போத்தல்களில் விற்பனைக்கு கள் தயார்!

யாழ்ப்பாணம், ஒக். 4

பருவமழை தற்போது ஆரம்பமாகியுள்ளதால் போத்தல் கள்ளின் விற்பனை யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. பருவ மழை முடிவடையும் வரை சுமார் 15 லட்சம் போத்தல் கள் விற்பனையாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவித்தாவது

தற்போது மாரி காலம் ஆரம்பமாகியுள்ளதால் பனை, தென்னை மரங்களில் கள்ளின் உற்பத்திகள் குறைந்தே காணப்படும். இந்தப் பருவபெயர்ச்சி கால நிலைகளின் போது போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளையே விற்பனை செய்வதில் சங்கங்கள் கூடுதலாக ஈடுபட்டு வருகின்றன. கூடுதலான சங்கங்கள் பாதுகாப்பான முறையில் நீண்ட நாள்களுக்கு பயன்படுத்தக் கூடியவாறு போத்தல்களில் கள்ளை அடைத்துச் சேமித்து வைத்துள்ளன.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும் எமது உள்ளூர் உற்பத்தியான போத்தல் கள்ளை சந்தைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். யாழ்ப்பாண மாவட்ட போத்தல் கள்ளுக்கு வெளி மாவட்டங்களில் அதிக கிராக்கி கடந்த காலங்களில் இருந்தது. இந்தப் போகத்தில் போத்தல் கள்ளை வெளி மாவட்டத்தில் சந்தைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-17)




## மயானங்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் அளவெட்டி தெற்கில் அமைந்துள்ள கொட்டுப்பனை இந்து மயானம், அளவெட்டி மேற்கு, தம்மளை இந்து மயாணம் ஆகிய இரு மயாணங்களும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர் க.மயூரதனின் கோரிக்கைக்கு அமைவாக வலிவடக்கு பிரதேச சபையினரால் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டன. (ம-63)

## தென்மராட்சியில் நடைபெற்ற

# அரச தலைவர் பணியில் 7,000 பயனாளிகள் பயன்

சாவகச்சேரி, ஒக். 4

தென்மராட்சி பிரதேச மக்களுக்கு கடந்த 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அரச தலைவர் உத்தியோக பூர்வப் பணி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வழங்கப்பட்ட 8 ஆயிரத்து 796 விண்ணப்பங்களில் 7 ஆயிரத்து 124 விண்ணப்பங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன எனப் பிரதேச செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடமாடும் சேவையில் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பார்வையில் குறைபாடு காணப்பட்ட ,883 பேருக்கு ,மாற்று வலுவுள்ளோர் தேசிய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. அத்துடன் பிரதேச சமுர்த்தி அலகினரால் சுயதொழில் உதவிக் கடனாக 4 பயனாளிகளுக்கு 11 லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டது. தேசிய அடையாள அட்டைக்கு 694 பேரும் முதியோர் அடையாள அட்டைக்கு 12 பேரும் விண்ணப்பித்திருந்தனர்.

இதேவேளை மோட்டார் வாகன சாரதிய அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு நடத்தப்பட்ட பரீட்சையில் 170 பேர் சித்தி பெற்றுள்ளனர். அத்துடன் 17 வாகனங்களுக்கு வாகனப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. பிறப்பு இறப்பு விவாகப் பதிவு சான்றிதழ்களுக்கு ஆயிரத்து 242 பேரும், காலங்கடந்த பிறப்பு இறப்பு சான்றிதழுக்கு 91 பேரும், திருமணப் பதிவுக்கு 18 பேரும் விண்ணப்பித்திருந்தனர். அரச காணிகளில் குடியமர்ந்துள்ள 30 குடும்பங்களுக்குக் காணி உருத்தாவணங்கள் வழங்கப்பட்டன. 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் 5 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டன.

மேலும் வாழ்வாதார உதவிகளாக 7 பயனாளிகளுக்கு 2 லட்சத்து 4 ஆயிரம் ரூபாவும் கடற்றொழிலாளர் குடும்பங்கள் மலகூடம் அமைக்க 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் மாற்றுத் திறனாளிகளுக்கானமலகூடம்அமைக்க 4 பயனாளிகளுக்கு தலா ஒரு லட்சத்து 98 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

அத்துடன் நடமாடும் சேவையில் 51 பேருக்கு பற்சிகிச்சையும் 160 பேருக்கு பொலிஸாரால் முறைப்பாட்டு அறிக்கைகளும் சாரதிய அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்த 303 பேருக்கு மருத்துவ அறிக்கையும் 52 பேருக்கு கடவுச்சீட்டுக்கான விண்ணப்பப் படிவங்களும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையால் 155 பேருக்கு மருத்துவ சேவைகளும்மருத்துவஆலோசனைகளும் வழங்கப்பட்டன எனப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு

## தென்மராட்சி பிரதேசத்தில் நெற்செய்கை விதைப்புகள்

தென்மராட்சி, ஒக். 4

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை விதைப்புகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வாரம் பெய்த மழையைத் தொடர்ந்தே நெல் விதைப்புக்கான ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொண்ட நெற்செய்கையாளர்கள் தற்போது நெல்விதைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தினமும் காலை தொடக்கம் பெருமளவு உழவு இயந்திரங்களின் உதவியுடன் விதைப்புகள் இடம்பெற்று வருகின்றன என கமக்கார அமைப்புகள் தெரிவித்தன. (ம9)





# முச்சக்கர வண்டிகளால் பயணிகள் அசௌகரியம்

வலி.தென்மேற்கு, ஓக. 4

மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன்பாகவுள்ள பேருந்துத் தரிப்பு நிலையத்தில் முச்சக்கர வண்டிகள் நிறுத்தப்படுவதால் பேருந்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

மானிப்பாய் பட்டினத்தில் மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன்பாக யாழ்ப்பாணத்திலிருந்து சண்டிலிப்பாய், காரைநகர் செல்லும் பேருந்துகளுக்கான பேருந்துத் தரிப்பு நிலையம் அமைந்துள்ளது. மேற்படி சந்தைக்கு வரும் மக்கள் மட்டுமல்லாமல் ஏனைய மக்களும் இந்த பஸ்தரிப்பு நிலையத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் பஸ்தரிப்பு நிலையத்தில் முச்சக்கர வண்டிகள் மாறிமாறி நிறுத்தப்பட்டு வருகின்றமையால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். சில சமயங்களில் பேருந்துகள் அவ்விடத்தில் நிறுத்தப்படாமல் தூர இடங்களில் நிறுத்தப்படுகின்றன. இது குறித்துக் கவலை தெரிவித்துள்ள பொதுமக்கள், முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்யுமாறு பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர். (ம-115)

# அரசதலைவர் உத்தியோகபூர்வப் பணியால் 1,800 பேர் காரைநகரில் பயன்

காரைநகரில் இடம்பெற்ற 'அரச தலைவர் உத்தியோகபூர்வப் பணி' நடமாடும் சேவையில் சுமார் ஆயிரத்து 800 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். காரைநகர் இந்துக் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4.30 மணி வரை இந்தப் பணிகள் இடம்பெற்றன.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன், திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ந.வேதநாயகன், அரச உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அன்றைய தினம் சாரதி அனுமதிப் பத்திரம் பெறல், சாரதி அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பெயர் மாற்றம் சம்பந்தமான விடயங்கள், காணி உறுதி, சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் காணி உறுதி பெற்றுக்கொள்ளல், சாவுச் சான்றிதழ் பெறல், காலந் தாழ்த்திய பிறப்பு, விவாக, இறப்புப் பதிவுகள் மற்றும் வீட்டுக் கடன் வசதிகள், முதியோர் அடையாள அட்டை வழங்கல், சமுர்த்திக் கொடுப்பனவு, மதத்தலங்களைப் புத்துயிரூட்டல், காணி உரிமம் சம்பந்தமான பிரச்சினைகள், கல்விக் கருத்தரங்குகள், மற்றும் கல்விப் புலமைப் பரிசில்கள் வழங்கல், தென்னங் கன்றுகள் மற்றும் வேறு மரக் கன்றுகள் வழங்கல், இலவச மருத்துவச் சேவை, மூக்குக் கண்ணாடி வழங்கல், கிராமப்புறப் பாதைகள் அபிவிருத்தி தொடர்பான திட்டங்களுக்குத் தீர்வு காணல் உள்ளிட்ட ஏராளமான மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

குறிப்பாக 248 பேருக்குப் புதிய அடையாள அட்டைகளும் 349 பேருக்குச் சாரதி அனுமதிப் பத்திரமும் 97 பேருக்கு முதியோர் அடையாள அட்டையும் வழங்க நடவடிக்கை எடுத்ததுடன் 682 பேருக்கு மூக்குக் கண்ணாடியும் 500 பேருக்குப் பழமரக் கன்றுகளும் வழங்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகளும்அன்றைய தினம் வழங்கப்பட்டது. (ம-250)

## உழவு, இயந்திரத்துடன் உந்துருளி மோதி விபத்து

தென்மராட்சி,ஒக்.4
உழவு ,இயந்திரத்துடன் உந்துருளி மோதியதில் அதில் பயணித்த 26 வயதுடைய நபருக்குக் காலில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ,இரவு ஏ-32 சாலையில் கேரதீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
பூநகரி கறுக்காய்த்தீவைச் சேர்ந்த மகாலிங்கம் மயூரதன் (வயது- 26) என்பவர் உந்துருளியில் சென்ற வேளையில் முன்னால்ச்சென்ற உழவு இயந்திரப்பெட்டியுடன் மோதுண்டு காயமடைந்தார்.
இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது (9)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

முல்லைத்தீவு ,ஒக் .4
இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் முல்லைத் தீவுக் கிளையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.
மாங்குளம் வீதி முல்லைத்தீவில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி அதிகார சபையில், கற்கை நெறியினை நிறைவு செய்த ஒரு தொகுதி மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.
இதில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளதுடன், பயிற்சியினை நிறைவு செய்த மாணவர்களுக்குச் சான்றிழ்களையும் வழங்கிவைத்தார். (ரி -3)

## மைத்திரிபால...

தகவல்கள் கிடைத்துள்ளது. விசாரணையின் போதே மேலதிக தகவல்கள் தெரியவந்துள்ளன. விசாரணைகள் முழுமையாக முடியும் வரை அரசு மேலதிக தகவல்கள் எதனையும் வெளியிடப்போவதில்லை.
ஊழலுக்கு எதிரான அமைப்பின் இயக்குநர் நாமல் குமாரவுக்கும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடல்கள் குறித்துப் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேபோன்று நாமல்குமார முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவுடன் உரையாடியமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.
அரசு விசாரணைகளில் தலையிடாது. அதற்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படாது - என்றார். (5)

## மைத்திரி...

இந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை என்று தெரியவருகின்றது.
அநுராதபுரம் மற்றும் மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் வழக்குகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் சட்டமா அதிபருடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தப்பட்டது. தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே முடிவு எடுக்க முடியும் என்பதால், அவருடன் சந்திப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டது.
வடக்கு - கிழக்கு அபிவிருத்திச் செயலணியின் கூட்டம் முடிவடைந்த பின்னர் இந்தச் சந்திப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. செயலணியின் கூட்டம் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகி இரவு 6 மணியளவிலேயே முடிவடைந்தது.
'அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் விரிவாக ஆராய வேண்டும். உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்பில் நான் அறிந்துள்ளேன். சட்டமா அதிபர் உள்ளிட்ட எல்லோரையும் அழைத்துச் சந்திப்போம். விரைவில் சந்திப்புக்கு நேரம் தருகின்றேன்' என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் தெரிவித்துள்ளார். (5)

## கொலைச் சதி...

மாவத்தையில் உள்ள முன்னாள் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சி தலைவர்களின் சந்திப்பின் பின்னர் முன்னாள் அரச தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் விவகாரம், கொலைச் சதி குறித்து அரசு மௌனத்தை கடைப்பிடிப்பது போன்ற விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டது.
அரசு எங்கள் மீது அவதூறு குற்றச்சாட்டுகளை சுமத்துவதை தவிர வேறு எதனையும் செய்யாது. கொலைச் சதி முயற்சி குறித்து மைத்திரிபால சிறிசேனவுக்கு பல விடயங்கள் தெரிந்திருக்கும் என்றார்.
மேலும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைத்துவத்தை ஏற்பதற்கு தயார் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (5)

# வீதி மின் விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கும் பச்சிலைப்பள்ளி

## பிரதேச மக்கள் அதிருப்தி

கிளிநொச்சி, ஒக் . 4
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பல கிராமங்களுக்கு ,வீதி மின் விளக்குகள் இன்மையினால் கிராமங்கள் இருளில் மூழ்குவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இயக்கச்சி ஏ-9 பாதைக்கு வடக்குப் பக்கமாக உள்ள கிராமங்களான, கோயில் வயல்,சங்கத்தார் வயல், பனிக்கையடி,காளிகோயிலடி மற்றும் வை .எம் .சி. ஏ .கிராமம் அதனை அண்டிய பகுதிகளான மாசார், சோரன்பற்று, ஆகிய கிராமங்களும், அதனை அண்டிய கிராமங்களிலும் உள்ள வீதிகளில், வீதி மின் விளக்குகள் மிகக் குறைந்தளவிலேயே பொருத்தப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.
அவ்வாறு காணப்படும் மின்விளக்குகளுள்,அனேகமானவை செயலிழந்தே காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.
மிகவும் பின்தங்கிய கிராமங்களில் புல், பூண்டுகள், மரஞ் செடிகொடிகள், நிறைந்த கிராமங்களாகக் காணப்படுவதனால். இரவு வேளைகளில் மக்கள் அவசர தேவைகளுக்கும் வீதிக்கோ அல்லது ஒழுங்கைக்கோ வருவதற்கு அஞ்சுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.
யாழ். மாவட்டத்தின் அதிகமான பகுதிகளில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வரும் நிலையில், ஏன் எமது ஊர்களுக்கும் வீதி மின் விளக்குகள் பொருத்தப்படக் கூடாது?. எமது கிராமங்கள் ஒளியூட்டப்படக் கூடாது? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
வருவதும் மாரி காலம் ஆகையால் முழுமையாக மழை தொடங்குவதற்கு முன்னர் எங்கள் கிராமங்களையும் இருளிலிருந்து காப்பாற்ற பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் நட வடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர்.
இது தொடர்பாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தவிசாளரிடம் கேட்ட போது :
உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களத்தால் 2 மில்லியன் ரூபா இத்திட்டங்களுக்காக ஒதுக்கீடுசெய்யப் பட்டுள்ளது.
இரண்டு மாதங்களுக்குள். மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்கான மின் விளக்குகள் முழுமையாகச் செய்து கொடுக்கப்படும் -என்றார். (70)




## நல்லொழுக்க தினம் கடைப்பிடிப்பு

வடமராட்சி,ஒக்.4
சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் 'மது, புகை, போதைப்பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன்வருவோம்' என்ற தொனிப்பொருளில் கொடிவார நிகழ்வை நிறுவன உத்தியோகத்தர்கள், நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் இணைந்து செயற்படுத்தினர். நேற்றுக் கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபனுக்கு நிறுவன தலைவர் மு.இரவீந்திரனால் சம்பிரதாய முறையில் கொடிகள் வழங்கி வைத்து ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து நெல்லியடிப் பிரதேச வியாபாரநிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடம் கொடிகள் வழங்கப் பட்டு பன்னாட்டு நல்லொழுக்க தினம் நினைவு கூறப்பட்டது.

## வவுனியாவுக்கு தென்பகுதி உத்தியோகத்தர்கள் நல்லெண்ணப் பயணம்



அரச கரும மொழிகள் அமைச்சின் அனுசரணையில், தமிழ் மொழி கற்கை நெறியை மேற்கொண்டு வரும் குளியாப்பிட்டி, நிக்கோகட்டி போன்ற மருத்துவமனைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் நேற்று நல்லெண்ணப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வவுனியாவுக்கு சென்றுள்ளனர் .
அரச் கரும மொழிகள் அமைச்சின்தமிழ்மொழிக் கற்கை நெறியினை மேற்கொண்டு வரும் 40 தென் பகுதி மருத்துவமனை உத்தியோகத்தர்களின் நல்லெண்ணப் பயணத்தின் போது வவுனியாவிலுள்ள தமிழர்களின் வாழ்வியல் கலை கலாசாரம் போன்றவற்றை அறிந்துகொள்ளும் அதேவேளையில், இந்து ஆலயங்களின் மரபுமுறைமை, பூர்வீகத்தமிழ்க் கிராமங்கள், வியாபாரநிலையங்கள், தமிழர்களின் பாரம்பரிய அம்மாச்சி உணவகம், போன்றவற்றிற்குப் பயணம் மேற்கொண்டு தமிழர்களின் வாழ்வியல் தொடர்பான விடயங்களை கேட்டறிந்து கொண்டனர். காலை முதல் மாலை வரை ஒருநாள் பயணமாக வவுனியாவுக்கு வந்துள்ள தென்பகுதி உத்தியோகத்தர்கள், தமிழர்களின் பல்வேறு பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்வையிட்டு சென்றுள்ளனர்.



## இத்தாலியில் 35 இளையோருக்கு உறுதிப்பூசுதல் மன்னார் மறைமாவட்ட ஆயரால் வழங்கிவைப்பு

மன்னார் .ஒக் .4
மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இத்தாலிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
இத்தாலியின் பலெர்மோ ஆன்மீகத் தளத்தைச் சேர்ந்த சுமார் 35 இளையோருக்கு உறுதிப்பூசுதல்எனும்திருவருட்சாதனத்தை கடந்த 30 ஆம் திகதி வழங்கினார்.
குறித்த சிறப்புத் திருப்பலியில் பலெர்மோ அமதிகள் குழுமத்தின் முதல்வர் அதிரியானோ அமதி, மற்றும் அருட்பணி. பீற்றர் இராஜநாயகம் அமதி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(56)

# மாகாணசபை உறுப்பினரின் பேச்சுக்கு வடமாகாண அழகக ச. சம்மேளன கண்டனம்

**யாழ்ப்பாணம்,ஒக்.4**

**கடந்த மாகாண சபை அமர்வில் மாகாணசபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ் தமது தொழிலாளர்களை இழிவுபடுத்திப் பேசியதாகத் தெரிவித்து, வடக்குமாகாண அழகக சங்கம் தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

'வேலியே பயிரை மேய்வது போல' எமக்காக எம்மால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண சபைக் கூட்டத்தில் எம் தமிழ் மக்களுக்கான அபிவிருத்தி தொடர்பாகக் கூடி முடிவெடுக்க வேண்டிய கூட்டங்களில் அவர்களது மறு முகங்களை எமக்கு காட்டி நிற்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற மாகாண சபைக் கூட்டத்தில் சிவக்கொழுந்து அகிலதாஸ் 'சலூன் சென்று உடுப்பு அயன் பண்ணவா? லோன்றியில் சென்று முடி வெட்டவா? ' என எமது தொழிலாளர்களை இழிவுபடுத்தும் முகமாக உரையாடியுள்ளார்.

எமக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய உறுப்பினர்களே எமது தொழிலாளர்களை கேவலப்படுத்தியுள்ளனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மாகாண சபைக் கூட்டங்களில் அபிவிருத்தியைப் பற்றிக் கதைப்பதா? அல்லது பிற சமூகங்களை இழிவுபடுத்துவதா?

எமது தமிழ் பேசும் உறவுகளே சாதிய அடிப்படைக் கொள்கை கொண்டவர்களாக இருக்கும் இவர்களா எமது பாதுகாவலர்கள்? இப்படிப்பட்ட செயற்பாடுகளை எமது நிறுவனம் வன்மையாகக் கண்டிக்கிறது. என அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (110)



## முதியோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

கிளிநொச்சி.ஒக் .4

முதியோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி செல்வாநகரில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது.

செல்வாநகரில் வசிக்கும் மூத்தோருக்கு மதிப்பளிக்கும் நோக்குடன் , கிராம மட்ட அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், அந்தக் கிராமத்தில் உள்ள மூத்தோர் , அழைத்து வரப்பட்டு மதிப்பளிக்கப்பட்டதுடன், நிகழ்வுகளும் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் சமூக சேவைகள் திணைக்களம் உள்ளிட்ட அரச மற்றும் நிறுவனங்கள் சார் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




## முதியோர் தின நிகழ்வு

பூநகரி.ஒக் .4

பூநகரி பிரதேச செயலக முதியோர் தின நிகழ்வு நேற்று முன்தினம் முழங்காவில் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் யோ.கிரிஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பூநகரிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஐயம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரனும் கலந்து கொண்டனர். (9)



## அபிவிருத்தியைப்போல் அரசியல் தீர்வும் முக்கியம்

கிளிநொச்சி .ஒக் .4

பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது எமக்கு எவ்வளவு முக்கியமோ அதைவிட எமக்கு அரசியல் தீர்வு முக்கியம். ஏனெனில் ஒரு நிலையான தீர்வு இல்லாமல் நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தி அரசியல் சூழலில் பாதகமான மாற்றம் ஏற்ப்பட்டால் அழிந்துவிடும் ஆகவே நாம் பிரதேச அபிவிருத்தியை ஏற்ப்படுத்துகின்ற அதேநேரம் அரசியல் தீர்வை பெறுவதற்கும் முயற்சிக்கவேண்டும் என்று பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி தொடர்பான ஆராய்வு கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

பவ்ரல் அமைப்பினது ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அனைத்து வட்டாரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பொது அமைப்புக்கள் மற்றும் பவ்ரல் நிறுவன தொண்டர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இங்கு கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மேலும் தெரிவித்தார். பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது எமக்கு எவ்வளவு முக்கியமோ அதைவிட எமக்கு அரசியல் தீர்வு முக்கியம். ஏனெனில் ஒரு நிலையான தீர்வு இல்லாமல் நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தி அரசியல் சூழலில் பாதகமான மாற்றம் ஏற்பட்டால் அழிந்துவிடும் ,ஆகவே நாம் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துகின்ற அதேநேரம் அரசியல் தீர்வைப் பெறுவதற்கும் முயற்சிக்கவேண்டும் - என்றார்.

இங்கு பிரதேச அபிவிருத்திகளை மக்கள் பங்கேற்புடன் மேற்கொள்வது மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளின் வினைத்திறனை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இங்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் பவ்ரல் அமைப்பின் திட்ட பணிப்பாளர் சிறீதரன் மற்றும் சபைச் செயலர் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச வட்டாரத்தின் பிரதிநிதிகள் எனப் பலர்

## விளையாட்டு முற்றம் திறந்து வைப்பு

வவுனியா,ஒக்.4

வவுனியா மகாறம்பைக்குளத்தில் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுத்திறனை அதிகரிக்கும் நோக்கோடு சரஸ்வதி முன்பள்ளியில் விளையாட்டு முற்றம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டில் ஐந்து இலட்சம் ரூபா செலவில் இந்த விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டு, வட மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சியும் இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வுக்கு வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் மற்றும் முன்னாள் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி அருள்வேல்நாயகி, மற்றும் பெற்றோர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

முன்பள்ளியின் ஏனைய தேவைகளுக்காக மாகாணசபை நிதியிலிருந்து நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வில் கருத்துத் தெரிவித்த மாகாணசபை உறுப்பினர்: முன்பள்ளி ஆசிரியர்களை மாகாணசபை உள்ளீர்த்து அவர்களுக்கான சம்பளத்தை வழங்க முன்வரவேண்டும். இரண்டு தடவைகள் இது தொடர்பாக சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றேன். சுகாதாரத் தொண்டர்களின் பிரச்சினை பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட அழுத்தமே காரணமாக அமைந்தது. அதுபோல் முன்பள்ளி ஆசிரியர்களும் தங்களது கோரிக்கையை முன்னிறுத்தி மாகாணசபைக்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (110)



## வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பெற்றோர் தினநிகழ்வு

வவுனியா,ஒக் .4

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பெற்றோர் தின நிகழ்வு நேற்றுக் காலை கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.றம்சீன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் கலந்துகொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்திருந்தார்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களால் மீனவர் நடனம், பலூன் நடனம், மயில் நடனம்,மாணவர்களின் ஒயிலாட்டம் போன்றன நடைபெற்றிருந்தன.

நிகழ்வில் கலந்துகொண்டிருந்த விருந்தினர்களால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது .

நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான எம்.எஸ்.அப்துல் பாரி, ஏ.ஆர். எம்.லறீப், பி.எம்.பாயிஸ், மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. வி.தனுசா, ஆசிரிய ஆலோசகர் திருமதி. எ.குணசீலன், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (110)







# நாங்கள் அடிபட்டுக்கொண்டிருந்தாலும் கடமையிலிருந்து தவறியது கிடையாது!

## குற்றஞ்சாட்ட மத்திய அரசுக்கு அருகதையில்லை; வடக்கு விவசாய அமைச்சர் இப்படிக் கூறுகிறார்

**வவுனியா, ஒக். 4**

**மாகாணசபையினுள்ளும் முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. எமது சமூகத்தினுடைய சாபக்கேடு எங்களுக்குள்ளே நாங்கள் அடிபட்டுக்கொண்டுதான் இருப்போம். ஆனால் நாங்கள் செய்ய வேண்டிய கடமையில் இருந்து என்றும் தவறியது கிடையாது. மாகாணசபை குறித்துக் குற்றம் சொல்வதற்கு மத்திய அரசுக்கு எந்த அருகதையும் இல்லை.**

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்தார்.

வவுனியாவிலுள்ள கால்நடை அபிவிருத்தித் திணைக்களப் பயிற்சி நிலையத்தில் ஒன்பது மில்லின் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பிராந்திய பயிற்சி நிலைய கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வவுனியா மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி தபோதினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணசபையைப் பொறுத்தவரை அபிவிருத்திகள் நடைபெறவில்லை என்றும் மத்திய அரசு ஒதுக்குகின்ற நிதி திருப்பி அனுப்பப்படுகின்றது என்றும் பொய்யான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதே கருத்தை இலங்கை அரசதலைவரும் முன்வைத்துள்ளார்.

இவ்வாறான முறையில்தான் செலவழிக்க வேண்டும் என்று மத்திய அரசு ஒதுக்கும் நிதியில்தான் இங்கே அனைத்துக் கருமங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

மத்திய அரசு மாகாணசபைக்கு எவ்வாறு நிதியைச் செலவழிக்க வேண்டும் என்ற வகையில் நிதியைக் குறித்தொதுக்குகின்றது. இது சரியான ஒரு விடயமல்ல. மத்திய அரசு நிதியை ஒதுக்கவேண்டுமாயின் அங்குள்ள சூழ்நிலைக்கேற்ப, தேவைகளுக்கு ஏற்ப, மக்களுக்கு ஏற்ற வகையில் செலவழிக்க வேண்டும். இருக்கின்ற சொற்ப அதிகாரங்களையாவது பயன்படுத்தக்கூடிய முறையிலே மத்திய அரசு செயற்படாமல் பல அதிகாரங்களை மாகாணசபையில் இருந்து பறித்தெடுத்து விட்டு மாகாணசபை குறித்துக் குற்றம் சொல்வதற்கு மத்திய அரசுக்கு எந்த அருகதையும் இல்லை.

மாகாணசபையினுள்ளும் முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. எமது சமூகத்தினுடைய சாபக்கேடு எங்களுக்குள்ளே நாங்கள் அடிபட்டுக்கொண்டுதான் இருப்போம். ஆனால் நாங்கள் செய்ய வேண்டிய கடமையில் இருந்து என்றும் தவறியது கிடையாது. மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் மற்றும் கொடுக்கப்பட்ட நிதியின் மூலமாக உச்சப் பயனை அடைய வேண்டும் என்ற உறுதிப்பாட்டில் யாரும் தவறு செய்யவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் - என்றார்.

**கால்நடை**

ஒரு காலத்தில் வன்னிமக்கள் அதிகமான கால்நடைகளை வளர்த்து அதன் மூலமாக அதிக பயனைப் பெற்றனர்.

இன்றைய காலகட்டத்தில் கால்நடை வளர்ப்புக்கான சரியான வழிமுறைகள் இல்லாமையால் கூடுதலான மக்கள் கால்நடை வளர்ப்பைக் கைவிட்டுள்ளனர். விவசாய அழிவுகளின் காரணமாக மாடு, ஆடு வளர்ப்புக் குறைவடைந்து செல்கின்றது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பால் பெரும்பான்மையாகத் தனியார் நிறுவனங்கள் மூலமாக வேறு பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது. சொற்ப இலாபத்தையே பண்ணையாளர்கள் பெறுகின்றனர்.

இந்த நிலைக்கு முக்கிய காரணம், வழங்கப்படுகின்ற கால்நடைகளுக்கு மேச்சல் தரை இல்லாதமையே.

நீண்டகாலமாகப் பாரம்பரியமாக வளர்த்து வந்த எங்கள் பிரதேசத்திற்குரிய தரமான மாடுகளை இழந்திருப்பதும் ஒரு காரணம்.

தற்போது இந்த பிரதேசத்துக்குச் சம்மந்தமில்லாத இனங்கள் வளர்க்கப்படுகின்றன.

கடந்த காலங்களிலே, நாங்கள் எப்படியான வழிமுறைகளைப் பயன்படுத்தி கால்நடைகளைப் பெருக்க வேண்டும்? அதன் மூலமாக எப்படிப் பயன் பெற வேண்டும்? அதன்மூலம் எமது பிரதேசத்துக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை எப்படி பெற்றுக்கொள்ள முடியும்? இந்த பிரதேசத்துக்கு ஏற்றவகையிலே எவற்றை நாங்கள் தெரிவு செய்ய வேண்டும்? என்ற சரியான கொள்கை இல்லாத காரணத்தால் இன்று கால்நடைத்துறை நலிவடைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

மாகாண அமைச்சுப்பொறுப்பைப் பெற்று ஒரு வருடமாகிவிட்டது. அதற்குள் பல விடயங்கள் ஆரயப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தத் துறைக்கான கொள்கையை வகுக்க வேண்டும். கால்நடை மாத்திரமன்றி நீர்ப்பாசனம், விவசாயம் போன்றவற்றுக்கும் வடக்கு மாகாணத்துக்கு ஒரு கொள்கை வகுக்கப்பட வேண்டும். அதை உணர்ந்து பல நிபுணர்களை அழைத்து அவர்களின் உதவியுடன் விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி தொடர்பாகத் துறைசார்ந்த கொள்கையை வகுப்பதிலே இறுதியான ஒரு மைல்கல்வரை சென்றிருக்கின்றோம். அந்தக் கொள்கைகள் நிறைவேற்றப்படுகின்ற பட்சத்திலே இந்தத் திணைக்களங்களைக் கொண்டு நடத்தக்கூடியதாக இருக்கும். அதுவே எங்களது அசைக்க முடியாத நம்பிக்கை - என்றார். (4,110)

# தண்டனைக் காலம் நிறைவடைந்தும் கைதிகளை அரசு விடுவிக்கவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 4

மாலைதீவில் கைது செய்யப்பட்டு தண்டனைக் காலம் திறைவுற்றும் விடுவிக்கப்படாத கைதிகள் தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதன் அளித்த வாக்குறுதி காற்றில் பறந்ததாகவே உள்ளது என்று கைதியானா முத்துலிங்கம் யோகராசாவின் உறவுகள் தெரிவிக்கின்றனர்.

2007ஆம் ஆண்டு மே மாதம் மாலைதீவுக் கடற்பகுதியில் வைத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மாலைதீவில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான வழக்கு இடம்பெற்று தீர்ப்பளிக்கப்பட்டுள் ளது. இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்ட ஒட்டுசுட்டான், யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த மூவரும் மாலைதீவுச் சிறையில் தண்டனையை அனுபவித்தகாலத்தைவிட எஞ்சிய காலத்தை இலங்கைச் சிறையில் அனுபவிக்கவும் தண்டனைக் காலம் நிறைவடைந்த பின்னர் அவர்களை விடுவிக்குமாறும்கூறி மூவரையும் மாலைதீவு அரசு இலங்கை அரசிடம் கையளித்திருந்தது.

2016 மார்ச் மாதம் அவர்கள் கையளிக்கப்பட்டனர். எமது உறவுகளின் தண்டனைக் காலம் 2017ஆம் ஆண்டு நிறைவுற்றதாகவே நாம் அறிந்து அவர்களின் விடுதலைக்காகப் பல வழிகளிலும் முயன்றோம். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் எம்மை கொழும்புக்கு அழைத்துச் சென்று அப்போதைய சிறைச்சாலைகள் அமைச்சரான டி.எம்.சுவாமிநாதனைச் சந்திக்க ஏற்பாடு செய்து தந்தார்.

சந்திப்பு 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது எமது உறவுகளின் நிலமையைக் கேட்டறிந்த அமைச்சர் அதிகாரிகளிடம் தொடர்புகொண்டார். எமது உறவுகள் மூவரின் தண்டனைக் கோவைகள் அனைத்தும் மாலைதீவு மொழியில் உள்ளன. மொழி புரியாத தன்மை உள்ளது. அதனால் உடனடியாகக் குறித்த கோவைகளை அயலுறவு அமைச்சுக்கு அனுப்பி மொழி பெயர்க்கப்படும். அதன் அடிப்படையில் விடுதலை இடம்பெறும். இருப்பினும் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால் ஒரு வார விடுமுறையில் உடனடியாக விடுவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தார். தற்போது 7 மாதங்கள் கடந்துவிட்டன. எந்த முன்னேற்றமும் கிடையாது.

அயலுறவு அமைச்சுக்கு அனுப்பிய கோவையின் மொழி பெயர்ப்பின் நிலமை என்ன என்றும் தெரியாது. இருப்பினும் மொழிபெயர்ப்பில் 2019ஆம் ஆண்டே தண்டனை முடிவுறுவதாகத் தற்போது கூறுகின்றனர். எனவே எமக்கு உறுதியான நிலைப்பாட்டைச் சிறைச்சாலைகள் அமைச்சர் தெளிவாகக் கூறவேண்டும் - என்று கோரிக்கை விடுக்கின்றனர். (4,105)

# மன்னாரில் மழை பெய்தாலும் புதைகுழி அகழ்வுகள் தொடரும்

## சட்ட மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

மன்னாரில் மழை பெய்தாலும் புதைகுழி அகழ்வு பணி தொடரும் என்று அங்கு அகழ்வில் ஈடுபட்டுள்ள சட்ட மருத்துவ நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராசபக்ச தெரிவித்தார்.

மன்னார் சதொச கட்டுமானப் பணியின்போது கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழப்படுகின்றது. இதுவரை 154 மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன மழை பெய்தாலும் அகழ்வுப் பணி தொடரும் என்று சட்ட மருத்துவ நிபுணர் தெரிவித்தார்.

அந்தப் பகுதி முழுவதையும் மேற்புறமாக அகழ வேண்டிய தேவை உள்ளது. உள்ளூர் உற்பத்தி பொருள்களின் மூலம் பாதுகாப்பான முறையில் குறித்த வளாகத்தை மூட முடியாத நிலை காணப்படுகிறது. அதனால் வெளிநாடுகளில் இருந்து குறித்த பொருள்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று மேலும் தெரிவித்தார். (4,60)

# சுன்னாகம், நல்லூர்ப் பிரதேச சபைகள் நகர சபைகளாகத் தரம் உயர்கின்றன

## நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுன்னாகம், நல்லூர் ஆகிய இரு பிரதேச சபைகளும் நகர சபைகளாகத் தரம் உயர்தல் தொடர்பில் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் உத்தேச நகரசபைகளின் கணக்கெடுப்பு எல்லைகளை வரையறை செய்து அனுப்பி வைக்கும்படி மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் கடிதம் மூலமாகக் கோரியுள்ளார். அதற்கு அமைய தற்போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலரும் மாவட்ட எல்லை நிர்ணயக் குழுவின் தலைவருமான நா.வேதநாயகன் இது தொடர்பில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குக் கடிதம் மூலமாக அறிவித்துள்ளார்.

புதிய உள்ளூராட்சி அதிகார சபையை ஆரம்பிப்பது மற்றும் தற்போதுள்ள உள்ளூர் அதிகார சபையைத் தரம் உயர்த்துதல் தொடர்பில் மாகாண சபைகள், உள்ளூராட்சி, மத்திய அமைச்சும் வடக்கு மாகாண தலைமைச் செயலர் ஆகியோரின் கடிதம் சார்பாக ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தலைமையிலான 6 பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. இதன்பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 நகர சபைகளாகத் தரம் உயர்த்தக்கூடிய நல்லூர், மானிப்பாய், சுன்னாகம், காங்கேசந்துறை, நெல்லியடி ஆகியவையும் புதிய பிரதேச சபைகளாக வடமராட்சி கிழக்கு, வடமராட்சி தெற்குமேற்கு, பருத்தித்துறை, பண்டத்தரிப்பு, வலிகாமம் வடக்கு ஆகியவற்றையும் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவை பற்றிய தகவல்களை மாகாணசபையின் உள்ளூராட்சி அமைச்சுக்குச் சமர்ப்பிக்கும் வகையில் கடிதம் மூலமாக வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ. பத்திநாதனிடம் அவை கையளிக்கப்பட்டுள்ளன.

மேற்படி உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் உத்தேச நகர சபைகளின் கணக்கெடுப்பு எல்லைகள் வரையறை செய்து அனுப்பி வைக்கும்படி கேட்டதற்கிணங்க தற்போது எல்லைகளை வரையறை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று மாவட்டச் செயலர் வேதநாயகன் அறிவித்துள்ளார். (4,50)

# கிளிநொச்சி மருத்துவமனைகளில் சில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!

*காலம் முடியும்வரை காத்திருக்காதீர் என்று பணியாளர்களுக்கு அறிவுறுத்து*

*கிளிநொச்சி, ஒக். 3*

*கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச மருத்துவமனைகள் சிலவற்றில் மிக முக்கியமான சில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.*

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச மருத்துவமனைகளில் உயிர்காக்கும் மருந்துகள் உள்ளிட்ட சில மருந்துகள் இல்லை. இதனால் அடுத்துவரும் நாள்களில் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக உயிர்காக்கும் மருந்துகளின் காலாவதி திகதி முடிவடைந்துள்ளன. சில மருத்துவமனைகளில் இன்னும் ஒரு வாரத்தில் காலாவதித் திகதி முடிவடையவுள்ளன. இந்தநிலையில் அதற்கான மாற்று ஏற்பாடுகள் எவையும் இதுவரை செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறே வேறு சில மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

"மருந்துகளின் தட்டுப்பாடு என்பது ஏனைய மாவட்டங்களில் உள்ளது போன்றே காணப்படுகின்றது. குறிப்பாக உயிர்காக்கும் மருந்துகள் காலாவதித் திகதி பார்க்கப்பட்டு உரிய மருத்துவமனையினர் காலம் முடிவதற்கு முன்னர் அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் பட்சத்தில் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும். நேற்றுமுன்தினம் ஒரு மருத்துவமனையில் உயிர்காக்கும் மருந்தின் காலம் முடிவடைந்துள்ளதாக தெரிவித்தனர். அவ்வாறு காலம் முடிவடையும் வரை காத்திருக்காது. அதற்கு முன்னரே தெரிவித்தால் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்று" கிளிநொச்சி மாவட்டப் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (4.6)

## "சித்த மருத்துவ பஞ்ச கரும சிகிச்சைப் பிரிவு" யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வருகிறது

யாழ்ப்பாணம், ஒக். 4

வடக்கு மாகாணத்தில் சித்த மருத்துவ சிகிச்சை முறையைச் சிறப்பாக வழங்கும் நோக்கில் "சித்த மருத்துவ பஞ்ச கரும சிகிச்சைப் பிரிவு "யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

வடக்கு மாகாணத்தில் உள்ள சித்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்காக உள்நாட்டு வெளிநாட்டு நோயாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். அத்துடன் வெளிநாட்டு நோயாளர்கள் கட்டணம் செலுத்தி மேலதிக வசதிகளுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். அதனால் மாகாணத்தில் உள்ள மாவட்ட சித்த மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவு, விடுதிகளை ஆரம்பித்தல் தொடர்பான தீர்மான வரைவு 50ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. அதனை அமைச்சரவை ஏற்றுக்கொண்டு அவற்றைச் செயற்படுத்த அனுமதி வழங்கியது. அதற்கு அமைவாகச் சித்த மருத்துவத்தின் பிரிவுகளான யோகா உட்படப் பல்வேறு முறைகளையும் உள்ளடக்கிய சிகிச்சைப் பிரிவாக இது இருக்கும். இங்கு சிகிச்சைகளை வழங்குவதற்குத் தேர்ச்சி பெற்ற 2 மருத்துவ நிபுணர்கள் உள்ளனர். ஆகவே இது பலமான விடயமாக அமையும்.

இதற்கு அமைவாகச் சிறப்பான சிகிச்சைகளை வழங்கும் இந்தப் பிரிவு கொடிகாமத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. இரண்டு வருடங்களைக் கொண்ட திட்டமாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட 22 மில்லியன் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டு வருகிறது. இதனை அமைக்கும் வேலைகள் இரண்டு பிரிவாக இடம்பெற்று அடுத்த வருடம் இரண்டாம் பிரிவு வேலைகள் நிறைவு பெற்று பயன்பாட்டுக்கு வரும். முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கொடிகாமத்தில் சிச்சை முறை ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களில் இந்த சிகிச்சை முறை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

## கணித, விஞ்ஞான பாட வெற்றிடங்களை டிசெம்பர் மாதத்துக்குள் நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 3

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான பாட ஆசிரியர் வெற்றிடங்களை டிசெம்பர் மாதத்துக்குள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் இதனைத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்தில் கணித விஞ்ஞான பாடத்துக்கான ஆசிரியர்வெற்றிடங்கள் அதிகம்நிலவுகின்றன. மாணவர்கள் குறித்த பாடங்களில் ஜி.சி.ஈ. உயர்தரம் மற்றும் சாதாரண தரங்களில் கடந்த காலங்களில் சில மாணவர்கள் உயர் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தனர். ஆனாலும் சித்தியடையும் விகிதம் சுமார் 47 தொடக்கம் 60 வீதமாகக் காணப்படுகின்றது. ஆகவே அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் ஆசியர் பற்றாக்குறையும் ஒரு முக்கிய காரணம். ஆகவே வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் 440 கணித, விஞ்ஞான ஆசியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துறை சார்ந்த பட்டதாரிகளிடம் இருந்தும் இந்த வாரத்துக்குள் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. வடக்கில் நிலவும் மொத்த வெற்றிடங்களுக்கு அதிகமானவர்கள் விண்ணப்பித்திருந்தால் போட்டிப் பரீட்சை நடத்தப்படும். மொத்த வெற்றிடங்களுக்குக் குறைவான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டால் நேர்முகத் தேர்வின் மூலமாக உள்வாங்கப்படுவார்கள். இவ்வாறு நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று டிசெம்பர் மாத முதல் கிழமையில் அவர்களுக்கு நியமனங்கள் வழங்கக் கூடியதாக இருக்கும் - என்றார். (4.7)

## தேசிய புலனாய்வுப் பிரிவினர் 9 பேர் உடனடியாக இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 4

தேசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 9 அலுவலர்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நிலந்த ஜெயவர்த்தன அவர்களுக்கு இடமாற்றம் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.


வவுனியா, தம்புள்ள, செட்டிகுளம், யாழ்ப்பாணம், முழங்காவில், மல்லாவி, பொலநறுவை, பருத்தித்துறை ஆகிய நிலையங்களில் பணியாற்றிய புலனாய்வுத் துறையின் சார்ஜன்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்களே இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய சார்ஜன் பீ.வீரசிங்க செட்டிகுளம் பிரிவுக்கும், தம்புள்ள பிரிவில் பணியாற்றிய ஐ.ஜி. விமலசூரிய பருத்தித்துறைப் பிரிவுக்கும், செட்டிகுளம் பிரிவில் கடமையாற்றிய எச்.பி.ஹிட்டி பண்டாரநாயக்க வவுனியா பிரிவுக்கும், வவுனியா பிரிவில் பணியாற்றிய மற்றொரு அதிகாரி ரீ.ஈ.அபேயக்கோன் தலைமன்னார் பிரிவுக்கும், யாழ்ப்பாணப் பிரிவில் பணியாற்றிய ஏ.எஸ்.வீரசிங்க காங்கேசன்துறைப் பிரிவுக்கும் முழங்காவில் பிரிவில் பணியாற்றிய சீ.ஜி.திசாநாயக்கா மல்லாவி பிரிவுக்கும், மல்லாவிப் பிரிவில் பணியாற்றிய எம்.எம்.குமார ஹம்பாந்தோட்டைப் பிரிவுக்கும், பொலநறுவை பிரிவில் பணியாற்றிய டி.பி.பெமினிவத்த தம்புள்ள பிரிவுக்கும், பருத்தித்துறைப் பிரிவில் பணியாற்றிய எஸ்.எம்.ரத்னசிறி மல்லாவிப் பிரிவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (4.9)

## காரைநகர் வலந்தலைச் சந்தியில் உல்லாச விடுதி அமைப்பதற்கு நீதிமன்று இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் காரைநகர் வலந்தலைச் சந்தியில் அமைக்கப்படும் உல்லாச விடுதி அமைக்கும் பணிகளுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.



பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி நந்தகுமார் இடைக்காலத் தடை கோரும் மனுவை ஊர்காவற்றுறை நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

அது நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் நேற்றுப் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

உல்லாச விடுதி அமைக்கப்படவுள்ள பிரதேசத்துக்கு மிக அண்மித்த பகுதியில் பாடசாலைகள், ஆலயங்கள் உள்ளன. குறித்த பகுதி நன்னீர் தேக்கமாகக் காணப்படும் இடம். அதனடிப்படையில் குறித்த பகுதியில் உல்லாச விடுதி அமைக்கும் பணிக்குத் தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் கட்டட அமைப்புப் பணிகளுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

தடை உத்தரவு தொடர்பில் உரிய தரப்பினர்களுக்கு அறிவிக்குமாறும், கட்டடம் அமைக்கப்படவுள்ள இடத்தில் தடையுத்தரவு அறிவுறுத்தல் துண்டைக் காட்சிப்படுத்துமாறும் நீதிவான் கட்டளையிட்டார். (4,37)

## 6 கருத்திட்டங்களுக்கு விரைவில் அனுமதி

*அமைச்சின் செயலாளர் நடவடிக்கை*

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொருளாதார வலுவூட்டல் சமூக உட்கட்டுமானம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முன்வைத்த 6 கருத்திட்டங்களுக்கு விரைவில் அனுமதியளிக்கப்படவுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சு செயலாளர் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் இணுவில் பொதுநூலக முன்பள்ளி உட்கட்டுமானத்துக்கு 2 மில்லியன் ரூபா, சுழிபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க உட்கட்டுமானத்துக்கு 2 மில்லியன் ரூபா, சங்கத்தானை சனசமூக நிலைய பொதுநோக்கு கட்டட அமைப்புக்கு 1.4 மில்லியன் ரூபா, கச்சாய் கலைமகள் விளையாட்டுக்கழக உட்கட்டுமான அபிவிருத்திக்கு 3 மில்லியன் ரூபா, மாதகல் விநாயகர் விளையாட்டுக் கழக உட்கட்டுமான அபிவிருத்திக்கு ஒரு மில்லியன் ரூபா, அல்லாரை டெல்ற்ஸ் விளையாட்டுக் கழக உட்கட்டுமான அபிவிருத்திக்கு 0.55 மில்லியன் ரூபாவுமாக 6 கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு இடம்பெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் செயலாளர் மேற்படி 6 கருத்திட்டங்களுக்கான முன்மொழிவுப் பத்திரம், பொறியில் மதிப்பீடு என்பவற்றுடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனின் சிபார்சுடன் முன்னளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி 6 கருத்திட்டங்களும் ரிப் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளன. (4,50)

## அமைச்சர் சஜித் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 4

வீடமைப்பு நிமாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்குப் பயணிக்கவுள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மைத்த 29 வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே வருகின்றார்.

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மந்துவில் நாவலர் கோட்டப் பகுதியில் அமைக்கப்பட்ட 29 வீடுகள் இவ்வாறு கையளிக்கப்படவுள்ளன என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மு. ரவீந்திரன் அறிவித்துள்ளார். அன்று நூல் ஒன்றும் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (4.50)

# உலக அழகிப் போட்டிகளை இலங்கையில் நடத்தத் திட்டம்

கொழும்பு, ஒக். 4
உலக அழகிப் போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்குரிய கவனமெடுப்புக்களை மேற்கொண்டு வருவதாக இலங்கைச் சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சு அறிவித்துள்ளது.
கடந்த மாதம் 30ஆம் திகதி உலக அழகி போட்டிகளை நடத்தும் நிறுவனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இலங்கைக்குப் பயணம் செய்திருந்தது.
இந்தக் குழுவானது எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் அல்லது 2021ஆம் ஆண்டில் உலக அழகிப்போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்குரிய சாதகமான நிலமைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே வருகை தந்தது.
இக்குழுவில் உலக அழகி நிறுவனத்தின் தலைவர் ஜூலியா ஈவ்லின் மோர்லி , உலக அழகி 2016 மற்றும் உலக அழகி நிறுவனத்தின் தூதர், ஸ்டீபனி மேரி டெல் வல்லே டயஸ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கும் இக்குழுவினருக்கும் இடையிலான சந்திப்பும் நடைபெற்றிருந்தது. இதன்போது இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் நிறுவனத்தின் தலைவர் டிஹான் செனவிரத்னவும் பங்கேற்றிருந்தார். (31)

## தமிழ்க் கட்சிகள் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்பான கலந்துரையாடல்

கிழக்குமாகாணசபைத் தேர்தலில் தமிழர்கள் சார்பில் அதிக உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தமிழ்க் கட்சிகள் இணைந்து அரசியல் கூட்டு அணியொன்றை உருவாக்கவுள்ளனர். அதர்க்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்க்றை கைச்சாத்திடுவது தொடர்பான கலந்துரையாடல் கொழும்பில் நாளை நடைபெறவுள்ளதாகக் கிழக்குத் தமிழர்ஒன்றியம் அறிவித்துள்ளது.
அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒருபொதுச் சின்னத்தின் கீழ் ஓரணியில் போட்டியிட இதுவரை 5 கட்சிகள் சம்மதித்துள்ளன.
தமிழர் விடுதலைக் கூட்டணி,தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி,ஈழமக்கள் ஜனநாயக் கட்சி,தமிழர் சமூக ஜனநாயகக்கட்சி,அகில இலங்கைத் தமிழர் மகா சபை ஆகிய கட்சிகளே ஒருபொதுச் சின்னத்தின் கீழ் ஓரணியில் போட்டியிட சம்மதித்துள்ளன.
இது தொடர்பில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அமைப்பாளரும் அதன் மாகாண இணைப்பாளர்களில் ஒருவருமான செங்கதிரோன் த.கோபால கிருஸ்ணன் தெரிவித்ததாவது:
இந்த முயற்சியின் முதற்கட்டமாக அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் கிழக்குத் தமிழர் ஒன்றியம் தனித்தனியே சந்தித்துப் பேசியது.
அடுத்த கட்டமாக கடந்த 22 ஆம் திகதி களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரிடத்தில் கூட்டிக் கலந்துரையாடினோம். இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் தீர்மானித்தபடி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைத் தயாரித்து அதன் நகல் வடிவத்தினை அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பிவைத்தோம். இந்த முயற்சியின் அடுத்த கட்டமாகவே நாளை கொழும்பில் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது. அதேவேளை இதுவரை தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்காத ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தங்கள் நிலைப்பாடுகளைத் தெரிவிக்க நல்லெண்ண அடிப்படையில் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை கடிதம் மூலம் காலஅவகாசம் வழங்கியுள்ளோம். அத்துடன் தேர்தல் திணைக்களத்தினால் இதுவரை அங்கீகரிக்கப்படாத தமிழ் அரசியல் கட்சிகளுடனும் மற்றும் தேசியக்கட்சிகளில் இணைந்துஅரசியல் செய்கின்ற தனிப்பட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடனும் எமதுமுயற்சிகளுக்கு அவர்களது ஆதரவையும் பெற்றுக்கொள்ளும் வகையில் விரைவில் நல்லெண்ணப் பேச்சுவார்த்தைகளைக் கிழக்குத் தமிழர்ஒன்றியம் மேற்கொள்ளவிருக்கிறது" என்று தெரிவித்தார்.

## நடுவர் சபை மேற்கொண்டு வரும் பணிகளுக்கு அரச தலைவர் பாராட்டு



கொழும்பு, ஒக் 4
ஐக்கியமானதோர் சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு தேசிய நடுவர் சபை அதிகாரிகள் மேற்கொண்டுவரும் பணி பாராட்டத்தக்கது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற 28ஆவது தேசிய நடுவர் தின தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நடுவர் சபை முறைமை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 28 வருடங்களாக தமது திறமைகளை அர்ப்பணித்து, தேசிய பணியை நிறைவேற்றிவரும் நடுவர் சபை தலைவர்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களையும் மதிப்பளிக்கும் முகமாக ஒவ்வொரு வருடமும் நடுவர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
நடுவர் சபையின் www.midiation.com என்ற இணையத்தளம் அரசதலைவரினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.
1991ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நடுவர் சபையில் சேவைக்காக தெரிவுசெய்யப்பட்டு இன்னும் தொடர்ந்து சேவை செய்துவரும் 7 நடுவர்கள் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர்.
அமைச்சர்களான தலதா அதுகோரள, விஜயபால ஹெட்டியாரச்சி, சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, நீதியமைச்சின் பதில் செயலாளர் பியுமந்தி பீரிஸ், மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஹெக்டர் யாப்பா, நடுவர் சபை ஆணைக்குழுவின் செயலாளர் ராஜினி அத்தபத்து ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

*மாகாண சபைத் தேர்தல்*

## கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு தலைமை அமைச்சர் வலியுறுத்து!



கொழும்பு, ஒக். 4
மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுக்க வேண்டிய தன் அவசியத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.
மாகாண சபை தேர்தல் தொடர்பில், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கடந்த வாரம் கூடி ஆராய்ந்தனர்.
இதன்போது பழைய விகிதாசார முறையின் கீழ் தேர்தலை நடத்த பெரும்பாலான கட்சிகள் உடன்பட்டன.
எனினும், புதிய கலப்பு முறையின் கீழ் தேர்தலை நடந்த வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.
கட்சிகளின் இந்த நிலைப்பாட்டை அமைச்சரவை க்கூட்டத்தில் தெளிவுபடுத்திய தலைமை அமைச்சர், எந்த முறையின் கீழ் தேர்தலை நடத்துவதாக இருந்தாலும் அதற்கு நாடாளுமன்ற அனுமதி அவசியம் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.
கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் ஏற்கனவே முடிவடைந்ததைத் தொடர்ந்து அவை கலைக்கப்பட்டு ஆளுநர் ஆட்சி இடம்பெறுகிறது.
அத்தோடு, வடக்கு, வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் பதவிக்காலம் இவ்வருட இறுதிக்குள் நிறைவடையவுள்ளது. இந்தநிலையில், தேர்தலை விரைந்து நடத்துமாறு பல்வேறு தரப்பினர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

## தேங்காய் பறித்த குரங்கினால் பறிபோனது மூதாட்டி உயிர்

குரங்கு பறித்து போட்ட தேங்காய் தலையில் விழுந்து வயோதிப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம்மாத்தளை, வட்டகொட ஹீலங்கமுவபிரதேசத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த 73 வயதான திலகா ரஞ்சனி குலரத்ன என்ற மூதாட்டியே உயிரிழந்தார்.
வீட்டுக்கு வெளியில் நின்றுள்ளார் மூதாட்டி அருகில் இருந்த தென்னை மரத்தில் குரங்கு இருந்துள்ளது. குரங்கு பறித்த தேங்காய் முதாட்டியின் தலையில் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அஸ்கிரிய, இராமயக்க, மல்வத்து பீட தேரர்களுடன் ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் சந்திப்பு

இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதியும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிழச்சித்திட்டத்தின் இலங்கைக்கான பொறுப்பதிகாரியுமான ஹனா சிங்கர் நேற்றுமுன்தினம் அஸ்கிரிய, இராமநாயக்கநிக்காய, மற்றும் மல்வத்து பீடங்களின் தலைமை தேரர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.
அஸ்கிரிய பீடத்துக்குச் சென்ற அவர் வரகாகொட சிறி ஞானரத்ன மகாநாயக்க தேரர், இராமநாயக்க நிக்காயாவின் நாபன்ன பிரேமசிறி தேரர், மல்வத்து பீடத்தின், அநுநாயக்க தேரர், காலாநிதி. நியன்கொட விஜித்த சிறிதேரர் ஆகியோரைச் சந்தித்தார்.
இதனையடுத்து ஐ.நா வதிவிடப்பிரதிநிதி கண்டி சிறி தலதாமளிக்கைக்கு சென்று வழிபாடுகளிலும் பங்கேற்றிருந்தார்.
அத்துடன் இந்த பயணத்தின் போது அங்குள்ள முஸ்லிம் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளையும் ஏனை மதத்தலைவர்களையும் அவர் சந்திப்பதற்கான நிகழ்ச்சி நிரலிடப்பட்டுள்ளதாக ஐ.நா.வதிவிடப்பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியாகப் பொறுப்பேற்ற பின்னர் ஹனா சிங்கர் செய்யும் முதல் பயணம் இதுவே. (31)

## ஜாலிய விக்கிரமசூரியவைக் கைது செய்வதற்கு மீண்டும் திறந்த பிடியாணை



கொழும்பு, ஒக். 4
அமெரிக்காவுக்கான இலங்கையின் 'முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த மீண்டும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது. மேலும் அவருடைய பிணைக்காக முன்னின்ற அவரின் மனைவி மற்றும் அவரின் உறவுக்கார சகோதரியையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு ஏற்கனவே நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.
இது ஜாலிய விக்கிரமசூரியவுக்கு எதிராகத் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 6ஆவது சந்தர்ப்பமாகும்.

# அரச தலைவர் படுகொலை சதிக்குப் பின்னால் சி.ஐ.ஏ, றோ!

## என்கிறார் பென்கமுவே நாலக தேரர்

கொழும்பு, ஒக். 4
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்காகத் தீட்டப்பட்டதாகக் கூறப்படும் சதி மற்றும் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரரின் கைது ஆகியவற்றின் பின்னால், அமெரிக்காவின் சி.ஐ.ஏ. இந்தியாவின் றோ ஆகிய புலனாய்வு அமைப்புகள் இருப்பதாக தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி, குற்றஞ்சாட்டியுள்ளது.
கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே முன்னணியின் தலைவர் பென்கமுவே நாலக தேரர் இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். எனினும், தனது குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்கள் எவற்றையும் அவர் இங்கு வெளிப்படுத்தியிருக்கவில்லை.
அந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மற்றைய தேரர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதை, தேரர்களாகிய எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கலகொட அத்தே ஞானசார தேரர், தொடர்ச்சியாக இந்த நாட்டுக்காக குரல்கொடுத்து வந்தார். இதனை ஏற்றுக்கொள்ளாத சிலரும் உள்ளனர். நாம், பௌத்த தர்ம போதனைகளின் அடிப்படையிலேயே செயற்படுகிறோம்.
இதனை முன்னிறுத்தியே நாம், ஞானசார தேரர் விடயத்தையும் பார்க்கிறோம்.
சட்டமா அதிபர் திணைக்களமும் பொலிஸாரும், பௌத்த தர்மத்துக்கு எதிராகவே செயற்படுகின்ற னர். இவ்வாறான தரப்பினர், நீதி மன்றத்துக்கு வழங்கிய தவறான தகவலின் பிரகாரமே, ஞானசாரதேரருக்கு எதிரான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. "தன்னைக் கொலை செய்ய முற்பட்டவருக்கே அரச தலைவர் பொதுமன்னிப்பு வழங்கும் போது, ஞானசாரதேரருக்கும் மன்னிப்பு வழங்க வேண்டும். றோ, சி.ஐ.ஏ புலனாய்வு முகவர்கள், தமது செயற்பாடுகளைச் சீராகச் செய்துகொண்டு தான் இருக்கிறார்கள். இது தான் அவர்களின் தன்மையாகும்.
அமெரிக்கத் தூதரகம், இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றால், இந்தப் புலனாய்வுப் பிரிவினரின் செயற்பாடுகள் மிகவும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. எமது நாட்டை வீழ்த்த வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும்" - என்றார்.

# மாவீரர் நாளன்று புலிகளை நினைவு கூர அனுமதிக்க முடியாது!


## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 4
மாவீரர் நாள் அன்று, வடக்கில் புலிகளை நினைவு கூர வேண்டாம் என்றும், உறவுகளை நினைவு கூரத் தடையில்லை எனவும், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து, தெரிவித்தார்.
மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பில், இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க தெரிவித்த கருத்துகள் தொடர்பில், மேலதிக விளக்கம் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
போர் காலத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர, வடக்கு வாழ். தமிழ் மக்களுக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. ஆனால், மாவீரர் நாள் என்ற பேரில் புலிகளை நினைவு கூருவதை அனுமதிக்க முடியாது என்பதே இராணுவத்தின் உறுதியான நிலைப்பாடாக உள்ளது.
குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, பன்னாட்டு ரீதியிலும் உள்நாட்டிலும் தடைசெய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.
எனவே, அவ்வாறான அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூருவதை அனுமதிக்க முடியாது" - என்றார்.

# திலீபன் நினைவுகூரப்பட்டதால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தில்லை

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 4**
**விடுதலைப்புலிகள் அமைப்பின் தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தைக் கொண்டாடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதன் காரணமாக அரச பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிப்பதை நிராகரிப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.**

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
தீலிபனின் நோக்கம் என்னவாகயிருந்தாலும் அவர் விடுதலைப்புலிகள் சார்பிலேயே உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தார்.
திலீபனை நினைவுகூறுவதன் மூலம் விடுதலைப்புலிகளுக்குப் புத்துயிர் அளிக்க முடியாது.
போர் முடிவடைந்து ஒரு தசாப்தத்தின் பின்னரும் அரசு இன்னமும் வடபகுதி மக்களின் மனங்களை வெல்லவில்லை.
விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டாலும் வடபகுதி மக்களைத் தோற்கடிக்கப்பட்டவர்களாக அரசு கருதக் கூடாது. தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான அனைத்து வழிகளிலும் உதவவேண்டும். சாதாரண மக்களின் அபிலாசைகளை அரசியல் நோக்கங்களுடன் இணைத்துப் பார்க்கக் கூடாது .
இதேவேளை, அடுத்த அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் க்ட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜேவிபியும் பொதுக்கூட்டணியை அமைப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன.
முன்னர் அமைச்சர் சரத் பொன்சேகாவிற்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இவர்கள் ஆதரவளித்திருந்தனர்.
இதன் மூலமாக அவர்கள் மீண்டும் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன - என்றார்.

# இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களில் மறைமுக நிகழ்ச்சிநிரல் இல்லை

## சீனத்தூதரகம் கூறுகிறது

கொழும்பு, ஒக். 4
இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களில் மறைமுகமான நிகழ்ச்சி நிரல் எதனையும் கொண்டிருக்கவில்லை எனச் சீனாவின் இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.
கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்திக்குப் பதில் அளித்துள்ள சீனத்தூதரகம், "இலங்கையுடன் தாம் சிறப்பான உறவைப் பேணிவருவதுடன் முன்னெடுக்கப் பட்டுவரும் திட்டங்கள் எந்தவிதமான நிபந்தனைகளையும் கொண்டிருக்கவில்லை" என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.
இராஜதந்திர உறவுகள் இலங்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இலங்கையில் அதிகாரத்தில் இருந்த அரசுகளுடன் சிறப்பான உறவைப் பேணிவந்துள்ளது. இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான யதார்த்த பூர்வமான திட்டங்களை சீனா முன்னெடுத்துள்ளதுடன் இலங்கையின் பொருளாதர மற்றும் சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச்செய்துள்ளதாகச் சீனத்தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் சீனாவின் ஆக்கிரமிப்பை மேற்குலக நாடுகளின் தூதரகங்கள் உன்னிப்பாக அவதானிப்பதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இதில் மறைமுக நிகழ்ச்சிநிரல் இருக்கின்றதான எனவும் அவர்கள் ஆராய்ந்து வருவதாக அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

# சீனாவின் மூலோபாய முதலீடுகள் பேரழிவுகளை ஏற்படுத்தும்

## ஜப்பானுக்கான அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 4
சீனா மூலோபாய முதலீடுகள் மூலம் பேரழிவுகளை ஏற்படுத்த முடியும். அதற்கு இலங்கை போன்ற நாடுகள் உதாரணமாக இருப்பதாக ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதுவர் வில்லியம் எவ் ஹகேற்றி தெரிவித்தார்.
சீனாவின் ஒரு பாதை ஒரு அணைத் திட்டம் தொடர் பாக, ஜப்பானிய ஊடகம் ஒன்றுக்கு, கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சீனாவின் மூலோபாய முதலீடுகள் சந்தை நோக்கத்தைக் கொண்டதல்ல. இது நிலையற்ற கடன்மட்டத்தைக் கொண்டு வரும்.இதன் மூலம் பேரழிவுகளை ஏற்படுத்த முடியும். மலேசியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளை உதா ரணங்களாக நாம் பார்த்திருக்கிறோம்." என்றார்.

# நோர்வே பயணமான ரணில் லண்டனுக்கும் செல்கிறார்

கொழும்பு, ஒக். 4
இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே மற்றும் லண்டன் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
நேற்று முன்தினம் இரவு அவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் இருந்து ஒஸ்லோவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
தலைமை அமைச்சருடன், அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹேஷா விதானகே, கவிந்த ஜெயவர்த்தன ஆகியோரும், நோர்வேக்குப் செல்லவுள்ளனர்.
இந்தப் பயணத்தின் போது, நோர்வே தலைமை அமைச்சர் எர்னா சோல்பேர்க், நோர்வேயின் மேல்சபை தலைவர் ரோன் வில்ஹெல்ம்சென், அயலுறவு அமைச்சர் இனே றிக்சென் சொறெய்ட் ஆகியோரையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.
நோர்வே பயணத்தை முடித்துக் கொண்டு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, லண்டனுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எந்த அடிப்படையில் மாவீரர் தினத்துக்கு மட்டும் தடை?

தமிழ் மக்கள் போரில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு நினைவஞ்சலி செலுத்த முடியும். அதில் எந்தத் தவறும் இல்லை. போர் வெற்றி தனிநபர் சார்ந்தது அல்ல. வடக்கில் மீண்டும் பிரிவினைவாத செயற்பாடுகள் தலை தூக்குவ தாகக்கூறும் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. எனினும் மாவீரர் நாள் அல்லது புலிகளை நினைவுகூரும் எந்த நிகழ்வும் நடத்தப்படக்கூடாது. அவ்வாறு ஏதேனும் பிரிவினைவாதச் செயற்பாடுகள் இடம்பெறும் என்றால் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கையின் இராணுவத் தளபதி மகேஸ்சேனநாயக்க. அனுராதபுரத்தில் இடம்பெற்ற இராணுவ நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசியபோது அவர் இதைத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் வரவுள்ள நிலையில் இராணுவத் தளபதியின் கருத்து முக்கியத்துவமானது. இராணுவத்தளபதி ஓர் அரச அதிகாரி. அவர் ஓர் அரசியல்வாதியல்லர். எனவே அவர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுக்கருத்துத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர். சட்டத்தின் முன்பாக அனைவரையும் சமமாக நடத்துவதற்கும் கடமைப்பட்டவர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் மாவீரர் நாளை நினைவுகூரக்கூடாது என்று கூறிய அவர் ஜே.வி.பியினரின் சித்திரை வீரர்கள் தினத்தையோ, ஏனைய தமிழ் இயக்கங்கள் கடைப்பிடிக்கும் தத்தமது வீரர்கள் தினத்தையோ தடைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தவும் இல்லை கருத்துரைக்கவும் இல்லை. ஆக, அவர் ஒரேயொரு இயக்கத்தின் நிகழ்வை மட்டுமே தடைசெய்யவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

ஜே.வி.பியும் ஏனைய தமிழ் இயக்கங்களும்கூட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் போன்றே கொழும்பு அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி வன்முறை வழியில் போரிட்டவர்கள்தான். 1971 சித்திரை மாதக் கிளர்ச்சியில் கொல்லப்பட்ட தமது சகாக்களின் ஞாபகமாக சித்திரை வீரர்கள் தினத்தைக் கடைப்பிடிக்கிறது ஜே.வி.பி. அதேபோன்று தனிநாடு கேட்டு அரச படைகளுக்கு எதிராகப் போரைத் தொடர்ந்த புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி. போன்ற தமிழ்க் கட்சிகள் பலவும் அந்தப் போரில் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்களை நினைவுகூர்ந்து நிகழ்வுகளை நடத்துகின்றன.

அவற்றுக்கெல்லாம் தடை விதிக்காதபோது எந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் தினத்துக்கு மட்டும் தடைவிதிக்கப்படவேண்டும் என்று இராணுவத்தளபதி வலியுறுத்துகின்றார்? புலிகள் இயக்கம் களத்தில் தான் மடியும் வரையும் அரசை எதிர்த்துப் போராடியது, மற்றைய இயக்கங்கள் அதை இடைவழியில் கைவிட்டு அரசுடன் சேர்ந்துகொண்டன என்கிற காரணத்தால் இத்தகைய நிலைப்பாட்டை இராணுவத் தளபதி எடுக்கிறாரா?


புலிகள் இயக்கம் இலங்கையில் தடைசெய்யப்பட்டிருக்கிறது, ஏனைய தமிழ் இயக்கங்களுக்கு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது, ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்பட்டு அவர்கள் மக்களாட்சி அரசியலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் எனவே அவர்களின் வீரர்கள் தினங்கள் அனுமதிக்கப்படக்கூடியவை என்று காரணம் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. மன்னிப்பு உயிரோடு இருப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. அரச படைகளுக்கு எதிராகப் போரிட்டு இறந்தவர்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுவதாக அறிவிக்கப்படவில்லை. அப்படியிருக்கும்போது, அவர்களை நினைவுகூர முடியும் ஆனால் புலிகளின் மாவீரர்களை மட்டும் நினைவுகூர முடியாது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க வாதம் அல்ல.

மற்றைய எல்லா நிகழ்வுகளையும்விட புலிகளின் மாவீரர் தினங்களுக்குத்தன்னெழுச்சியாகத்திரளும் மக்கள் எண்ணிக்கையைப் பார்த்து அச்சம்கொள்ளும் அரச இயந்திரத்தின் கருத்தாகவே இராணுவத் தளபதியின் கருத்தை இங்கு நோக்கவேண்டியிருக்கிறது. இதே காரணத்தினாலேயே மாவீரர் தினத்தை நடத்த அனுமதிக்கக்கூடாது என்கிற வலியுறுத்தல் சிங்கள, பௌத்த தேசியவாதத்தின் பக்கம் இருந்து தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது.



# வடக்கு மாகாணசபையின் ஆயுள்காலம் பயனுள்ளதாக அமைந்ததா?

இந்துமதி




வடக்கு மாகாணா சபையின் ஆயுள்காலம் முடிவடையவுள்ள நிலையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக அது சாதித்தவற்றை ஒரு கணம் நினைத்துப் பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும் என நம்பலாம்.

1987ஆம்ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டன. இரண்டு மாகாணங்களுக்கும் பொதுவானதொரு மாகாணசபையே அமைக்கப்பட்டது. இதனால் வடபகுதி மக்கள் மாகாண சபையுடன் தொடர்பான தமது விடயங்களைக் கவனிப்பதற்கு திருகோணமலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் காணப்பட்டனர். ஏனென்றால் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் தலைமை அலுவலகம் திருகோணமலையிலேயே அமைந்திருந்தது.

பின்னர் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டு இரண்டு மாகாணங்கள் ஆகின. ஆனால் கிழக்கு மாகாண சபைக்கு மட்டுமே தேர்தல் இடம்பெற்றது. வடக்கில் இடம்பெறவில்லை. பின்னர் ஒருவாறு 2013ஆம் ஆண்டு வடக்கிலும் மாகாணசபைத் தேர்தல் இடம்பெற்றது. மக்கள் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் தேர்தலில் ஆர்வத்துடன் வாக்களித்தனர். கூட்டமைப்பு மிகப்பெரிய வெற்றியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

### மக்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்

மாகாணசபையின் மூலமாகத் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென மக்கள் பெரிதும் நம்பினார்கள். உயர் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியில் அமர்ந்ததால் அந்த நம்பிக்கை மேலும் அதிகரித்தது.

ஆனால் மக்களின் நம்பிக்கை வடக்கு மாகாண சபையால் நிறைவேறியதா? என்பதை மக்கள்தான் கூறவேண்டும். போர் ஓய்ந்ததன்பின்னர் வடக்கு மக்கள் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அடாவடிக் குழுக்களின் அட்டகாசம், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், வெளிமாவட்ட மீனவர்களின் சட்டவிரோதச் செயற்பாடுகள், படையினரின் நில அபகரிப்பு, அதிகரித்துச் செல்லும் வேலையின்மை, விவசாயிகள் பிரச்சினை, நிலத்தடி நீரில் மாசு கலந்தமை, மக்களின் பொருளாதார ரீதியிலான பாதிப்பு இவ்வாறு மக்களின் பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் இவற்றுக்கெல்லாம் தீர்வு காண்பதற்குரிய வலுவை வடக்கு மாகாணசபை கொண்டிருக்கவில்லை.

அதுமட்டுமல்லாது சகல கட்சியைச் சேர்ந்தவர்களும் தமக்குள் முரண்படுவதிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தனர். அமைச்சர்களின் பதவி நீக்கமும், முதலமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானமும் மாகாண சபைக்குள் பெரும் பிரளயத்தையே ஏற்படுத்தி விட்டன. மாகாண சபையின் ஆளும் தரப்பான கூட்டமைப்பின் ஒற்றுமையையும் இது தோலுரித்துக் காட்டிவிட்டது. குறிப்பிட்டதொரு அமைச்சருக்கு எதிராக ஊழல் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட நிலையில், ஏனைய அமைச்சர்களையும் பதவி நீக்கியதன் மூலமாக முதலமைச்சர் பெரும் தவறைப் புரிந்துள்ளார்.

தற்போது நீதிமன்றப் படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார். இதுமட்டுமல்லாது மாகாண அமைச்சரவை செயலிழந்தும் உள்ளது. இந்த நிலையில் மக்களின் பிரச்சினைகளுக்கு மாகாணசபையில் எவ்வாறு தீர்வைக் காண முடியும்?


### இறுதியாகப் பளைக் காற்றாலை விவகாரம்

பளையில் காற்றாலை மூலமாக மின்சாரம் தயாரிப்பதற்கு நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கியதில் ஊழல் நிகழ்ந்துள்ளதாகத் கூறப்படுகின்றது. இதனால் மாகாணசபைக்கு அதிக நிதியிழப்பு ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. தற்போது அந்தக் குறிப்பிட்ட நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான தீர்மானம் மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர்கள் தமது இனத்தின் விடுதலைக்காவே ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். பல்லாயிரக்கணக்கில் தமது உயிர்களை இழந்தனர். ஏராளமானவர்கள் தமது அங்கங்களை இழந்து நடைப்பிணங்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தியாகங்களைத் தமிழினம் இருக்கும் வரையில் மறந்துவிட முடியாது.

ஆனால் மாகாணசபை உறுப்பினர்களிடம் இந்த மனப்பாங்கு உள்ளதா? என்பதைக் கூற முடியவில்லை. தீர்வையற்ற வாகன இறக்குமதிக்குரிய கொடுப்பனவு போதாதென அவர்கள் அடம்பிடித்த செயற்பாடு ஒன்றே அவர்களை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. இத்தகையவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொள்வார்கள் என நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

வடக்கு மாகாண சபையால் மக்களுக்கு உதவ முடியவில்லை என்ற உண்மையை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். விழாக்களிலும், நிகழ்வுகளிலும் கலந்துகொள்வதுதான் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் முதலமைச்சரின் கடமைகளல்ல. அவர்கள் பிரதிபலன் பார்க்காது மக்கள் சேவகர்களாக மாறும் போதுதான் மக்களுக்கு உண்மையான சேவைகளை ஆற்றமுடியும்.




வடக்கு மாகாணசபை மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதுதான் உண்மை. இது சிலருக்குக் கசப்பான விடயமாக இருக்கலாம். பதவி ஆசைகளை விடுத்து, அடுத்த மாகாண சபையாவது உருப்படியாக இயங்குமென எதிர்பார்ப்போம்.

# கருணாநிதியின் நேசத்துக்குரிய தமிழ்ப் போராளிக் குழுவாக விடுதலைப் புலிகள் இருந்ததில்லை

தேவநாயகம் தேவானந்த்

**தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-41**

எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின் 1989ஆம்ஆண்டுதமிழகத்தில் தி.மு.க மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. தமிழக முதல்வராக மீண்டும்கருணாநிதிபொறுப்பேற்கிறார். அப்போது இலங்கையில் தமிழர் பகுதியில் 'இந்திய அமைதிப் படை'க்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும்இடையே போர்நடைபெற்றுக்கொண்டிருந்தகாலகட்டம். இந்தியாவில்மத்தியில்வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு ஆட்சி அமைத்தது. தி.மு.காவும் அதில் அங்கம் வகித்தது. வி.பி.சிங் தலைமைஅமைச்சரானதும், கருணாநிதியின் அழுத்தம்காரணமாகவும் இலங்கையின் அப்போதைய அரச தலைவர் பிரேமதாசாவின் நிலைப்பாடு காரணமாகவும் இலங்கையில் இருந்து இந்திய 'அமைதிப் படை'யை வெளியேற்றுவதற்குஉத்தரவிட்டார். 1990ஆம்ஆண்டு மார்ச்மாதம் இலங்கையில் இருந்து இந்திய 'அமைதிப்படை'வெளியேறியது.



### இராணுவத்தை வரவேற்காத கருணாநிதி

இலங்கையிலிருந்துவெளியேறிச்சென்னைத் துறைமுகத்தைச் சென்றடைந்த இந்திய 'அமைதிப் படை'யை, அதாவது இந்திய இறையாண்மையைக் கட்டிக் காக்கும் இராணுவத்தை அந்த நாட்டின் ஒரு மாநில முதல்வராக இருந்தும் வரவேற்க முடியாது என்று கருணாநிதி வெளிப்படையாகவே அறிவித்தார். இது இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஏனென்றால் எம்.ஜி.ஆர். இருந்த காலம்வரை அவர்தான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் ஆதரவாளராக இருந்தார். ஆனால் கருணாநிதியோ விடுதலைப் புலிகளைத்தவிர இதர ஆயுதக் குழுக்களோடும் நெருக்கமானவராக இருந்தார். இதனால் அவர் தமிழீழ விடுதலையைப் பற்றிப்பேசினாலும்விடுதலைப் புலிகளுக்கு எதிரானவராகவே கருதப்பட்டார். இந்த நிலையில் திடீரென விடுதலைப் புலிகள் ஆதரவு நிலையை அவர் மேற்கொண்டது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. சென்னைக்கு வந்த அமைதிப் படையை வரவேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும் கருணாநிதி மறுத்துவிட்டார். இந்த விவகாரம் தமிழக சட்டசபையிலும் எதிரொலித்தது. காங்கிரஸ்கட்சிஉறுப்பினர்களும்அவர்களதுகூட்டணிக்கட்சியான அனைத்திந்திய அ.தி.மு.காவினரும் அமைதிப் படையை வரவேற்காத கருணாநிதியின் தேசப்பற்றுக் குறித்துக் கேள்வி எழுப்புகின்றனர். தேசத்துரோகம் என்றார்கள். ஆனால் கருணாநிதி அமைதிப் படையை விமர்சித்துப் பேசினார். இதனால்இந்தியத்தேசியக்காங்கிரஸ், அ.தி.மு.க அமைச்சர்கள் சட்டசபையிலிருந்துவெளிநடப்புச்செய்கின்றனர்.



### புலிகள் தான் மக்கள் மக்கள் தான் புலிகள்

தமிழக ஊடகங்களும் கருணாநிதி அமைதிப் படையை வரவேற்காமை குறித்துவிமர்சித்தன. தி.மு.காவின் கூட்டணிக் கட்சியான சி.பி.ஐ(எம்) கருணாநிதி இந்திய இராணுவத்தைக் அவமதித்துவிட்டார் என்று கூறியது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் கருணாநிதியின்நேசத்துக்குரியதமிழ்ப் போராளிக் குழுவாக இருந்ததில்லை. அதே வேளை புலிகளும் அவர்களை ஆதரிக்கும் ஈழத் தமிழர்களும் ஒன்றாகப்பார்க்கப்பட்டார்கள். இதனால்புலிகள் தான் மக்கள் மக்கள் தான் புலிகள் என்ற அர்த்தமும் கற்பிக்கப்பட்டது எனலாம். புலிகள்கருணாநிதியைமதிக்கவில்லை என்ற வருத்தம் அவருக்கு எப்போதும் இருந்தது. ஏனெனில் கருணாநிதியின் அரசியல் எதிரியாக இருந்த, மறைந்த எம்.ஜி.ஆருடன்தான் அவர்கள் மிக நெருக்கமாக இருந்தனர்.

### அன்ரன் பாலசிங்கம் கருணாநிதி பேச்சு

1989ஆம் ஆண்டில் தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் விடுதலைப் புலிகளுக்கும் கருணாநிதிக்கும் இடையே பேச்சுகள் நடைபெற்றன. குறிப்பாக விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கருணாநிதி இடையேயான பேச்சுவார்த்தைமுக்கியமானது. இதைத் தொடர்ந்தேவிடுதலைப்புலிகளுடனான கருத்து வேறுபாடுகளைக் களைந்து விட்டு அவர்களுடன் இணைந்து ஓர் இணக்கமான அரசியல் சூழலை உருவாக்குவதற்குக் கருணாநிதி முயற்சிகளை மேற்கொண்டார்.

இதனால் இலங்கையின் வடகிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள்உள்ளிட்ட ஈ.பி.ஆர்.எல்.எப்தலைவர்கள்பலரும்கருணாநிதியின் பாரபட்சம் குறித்து இந்திய அரசிடம் முறைப்பாடு அளித்திருந்தனர். இந்தக் காலத்தில்திருச்சியில்நடைபெற்றதி.மு.க மாநாட்டில்தான் தி.மு.காவின் நிலைப்பாடுஅப்படியேமாறிப்போனது. கருணாநிதியின்மருமகனும்மத்திய அமைச்சருமான முரசொலி மாறன், விடுதலைப் புலிகளின்வீரத்தைப்பாராட்டி, 'அமைதிப் படை'க்கு எதிரான போர் நடவடிக்கைகளைப்பாராட்டிதீர்மானத்தைவாசித்தார். கருணாநிதியின் இந்த விடுதலைப் புலிகள் திடீர் ஆதரவு நிலைப்பாட்டுக்கு என்ன காரணம் என்பது புதிராக இருந்தது என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் இலங்கை அதிபர் பிரேமதாசாவுடனானபேச்சுக்களில்முன்னேற்றம் ஏற்படாமல் பேச்சுக்கள் தோல்வியடைந்தன. பின்னர், 1990ஆம்ஆண்டுஜனவரி 10ஆம்திகதியளவில்இலங்கைஇராணுவம் மற்றும் புலிகளிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டது. (தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# பனைகள் ஏன் எரிகின்றன...?

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நான் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகிறேன். தினமும் மாலை 5.30க்குப் பிறகு யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குத் திரும்புவது வழமை. இப்போது மழை தூறல்போட ஆரம்பித்திருக்கிறது. ஆனால், கடந்த சில மாதங்களாக நீடித்த கடும் வெயில் காரணமாகத் தீவுப்பகுதிகளில் வறட்சி அதிகரித்திருந்தது. தீவுப் பகுதியில் சிறியளவிலாவது படர்ந்திருக்கின்ற பசுமைகளும் இந்தக் கடும் வெயில் காரணமாக வாடி, வதங்கி, காய்ந்து மூச்சு இழுத்துக் கொண்டிருந்தன. சில உயிர் மாய்த்து விட்டதும் தெரிந்தது. ஆனால், தரையின் ஆழம் வரைக்கும் வேர் விட்டு நீரை உறிஞ்சக்கூடிய ஆற்றலுள்ள பனைகள் மாத்திரம் அதைத் தாக்குப் பிடித்துக் கொண்டு நின்றன. மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை முதன்மை வீதியின் இருமருங்கிலும் செறிவாக இருக்கின்ற பனை மரச் சோலையைப் பற்றி விவரிக்க வார்த்தைகள் இல்லை. நீண்டு நிமிர்ந்து கம்பீரமாக நிற்கும் அவை இப்போது சில நாள்களாக மாலையானதும் பற்றி எரியத் தொடங்கி விடுகின்றன.

கடும் வெயில் காரணமாக அவை பற்றி எரிகின்றனவா? அல்லது யாரேனும் பனைகளைப் பற்ற வைக்கிறார்களா? என்பது தெரியவில்லை. எது எப்படியிருப்பினும் குறிப்பிட்ட வீதி மருங்கில் குவிந்து கிடக்கின்ற பனை வளத்தைப் பாதுகாப்பதற்கு உரியவர்கள் அக்கறை செலுத்தினால் நல்லது. கடும் வெயில் காரணமாக அவை எரிவதனால் மதியமளவில் எரியத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், தினமும் மாலை, இருட்டுப் படும் நேரத்திலேயே அவை எரியத் தொடங்குகின்றன.

இவ்வாறு எரியும்போது பனையடிவாரங்களில் மண்டியுள்ள பற்றைகள் வெயிலில் நன்றாக உலர்ந்து கிடப்பதால் வெகுவாக எரிகின்றன. உயரம் குறைந்த, உலர்ந்த ஓலைகள் தாங்கிய வடலிப் பருவப் பனைகளும் எரிகின்றன.

உயரமான பனைகள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. அத்தோடு ஓரளவுக்காவது இந்த நெருப்பைத் தாங்கி மீண்டும் மூச்செடுத்து விடுகின்ற தைரியம் பனைகளுக்கு இருக்கிறது.

அண்மையில் கவனித்த சம்பவம் இது. அதிசயம் என்று சொன்னாலும் தகும். முதல் நாள் மாலையில் பெரும் பனைத் தொகுதி ஒன்று பற்றி எரிந்து கொண்டிருந்தது. பார்த்த நான் கவலையுடன் வீடு சென்றேன். மறுநாள் காலையில் வேலைக்கு வரும்போது மழை இருட்டிவிட்டிருந்தது. தூறல்இலேசாகவிழுந்துகொண்டிருந்தது. அவ்விடத்தில் வந்தபோதுதான் கவனித்தேன்.

முதல் நாள் பற்றி எரிந்த பனங்கூடலைச் சுற்றி வளைத்து, அதில் முகாமிட்டவாறு மழை வாரிக் கொட்டிக் கொண்டிருந்தது. நான் நனையவில்லை. ஆனால், மனதோ மழையில் மிதந்து கொண்டிருந்தது.

பாரதி



# இந்தோனேசியாவில் சுனாமி ஆயிரத்து350 பேர் சாவு!

## இடரைத் தொடர்ந்து கொள்ளைகள்

ஜகார்த்தா.ஒக்.4

இந்தோனேசியாவின் சிலாவேசித் தீவில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 350 ஆக உயர்ந்துள்ளது. இந்தோனேசியாவின் சிலாவேசித் தீவில் கடந்த 29ஆம் திகதி நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அங்குள்ள கடற்கரை நகரமான பலுவைச் சுனாமி தாக்கியது.



இதனால் அந்த நகரம் கிட்டத்தட்ட அழிந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்தச் சுனாமி இடரின் காரணமாகச் சாவடைந்தவர்களின் தொகை ஆயிரத்து 350பேராக அதிகரித்துள்ளது. அங்கு இருந்த பெரும்பாலான வீடுகள், கட்டடங்கள், விடுதிகள், வணிக வளாகங்கள் என அனைத்தும் இடிந்து தரை மட்டமாகின. வீடுகள் இன்றித் தவிக்கும் மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சாப்பிட உணவும், குடிக்க தண்ணீரும் இன்றி மக்கள் தவிக்கின்றனர். எனவே வணிக வளாகங்கள் மற்றும் கடைகளை உடைத்து உணவுப் பொருள்களை மக்கள் கொள்ளையடித்து வருகின்றனர்.

கனிணிகள், பணம் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் சூறையாடப்படுகின்றன.

அதைத் தடுப்பதற்காகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. பொது மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் பொலிஸ் பாதுகாப்புடன் வழங்கப்படுகின்றன. அவை போதுமான அளவு இல்லாததால் வணிக வளாகங்களைப் பொது மக்கள் தொடர்ந்தும் கொள்ளை அடித்து வருகின்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பொலிசார் வானத்தை நோக்கித் துப்பாக்கி சூடு மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசுகின்றனர்.

சுனாமி தாக்குதலில் பாதித்த பலு நகரில் நடைபெறும் மீட்புப் பணியில் இராணுவமும், பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன. தோண்டத்தோண்ட சடலங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. அதே நேரத்தில் இடிபாடுகளுக்கு உள்ளே சிக்கித் தவிப்பவர்களும் மீட்கப்பட்டு வருகின்றனர். உயிருடன் சிக்கித் தவிப்பவர்களை மீட்பதில் தீவிர முனைப்புக் காட்டப்படுகிறது. இயந்திரங்கள் மூலம் கம்பிகளும், இடிபாடுகளும் அகற்றப்பட்டு வருகின்றன. மீட்புப் பணிக்குக் கூடுதல் பொலிஸ் அதிகாரிகளை ஈடுபடுத்துமாறு அந்த நாட்டு அதிபர் ஜோகோ விட்டோபோ உத்தரவிட்டுள்ளார். இடிபாடுகளில் இருந்து தொடர்ந்து சடலங்கள் அகற்றப்பட்டு வருகின்றன. இதனால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.



### சுனாமி தாக்கிய பகுதியில்

# எரிமலை வெடிப்பு!

பசிபிக் நெருப்பு வளையம் என்று அழைக்கப்படும் எரிமலைகள் நிரம்பிய பகுதியில் உள்ள நாடே இந்தோனேசியா. அங்கு சிறியதும் பெரியதுமான 120க்கும் மேற்பட்ட எரிமலைகள் உயிர்ப்புடன் இருக்கின்றன.

இந்தோனேசியாவில் சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சுலவேசித் தீவில் எரிமலை வெடித்துச் சாம்பலைக் கக்கத் தொடங்கியிருக்கின்றது. இதனால் அந்தப் பகுதிப் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் இடம்பெற்ற சாவுகள் அதிகரித்து வரும் நிலையில், சுனாமியின் தாக்கத்தில் இருந்து மக்கள் மீள்வதற்குள், சுலவேசித் தீவில் உள்ள ஒரு எரிமலை (மவுண்ட் சோபூடன்) நேற்றுக் காலை வெடித்துச் சிதறிக் கடும் சீற்றத்துடன் சாம்பலைக் கக்கத் தொடங்கி உள்ளது. எந்த நேரத்திலும் நெருப்புக் குழம்பு வெளிப்படும் அபாயம் உள்ளது. எரிமலையில் இருந்து வெளிவரும் புகையானது வானில் 6ஆயிரம் மீற்றர் உயரத்துக்குப் பரவி உள்ளது. இந்தச் சாம்பல் விமான இயந்திரங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அந்தப் பகுதியில் விமானங்களை இயக்குவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், எரிமலைக்கு அருகில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம் என்றும், சாம்பல் தாக்கத்தில் இருந்து தப்பிப்பதற்காக முகமூடிகள் அணிந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் எரிமலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொது மக்களை வெளியேற்றுவது தொடர்பான உத்தரவுகள் எதையும் அரசு உடனடியாகப் பிறப்பிக்கவில்லை.



# ஈராக்கின் புதிய அதிபராக பார்ஹம் சாலிஹ்



பக்தாத்.ஒக்.4

ஈராக்கின் புதிய அதிபராக அந்த நாட்டின் மூத்த அரசியல்வாதியான பார்ஹம் சாலிஹ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மூத்த மிதவாத அரசியல்வாதியாக அறியப்பட்ட சாலிஹ், அந்த நாட்டின் இரண்டு முக்கிய கட்சிகளிடையே நடந்த வாக்கெடுப்புகளின் இறுதியில் அதிபர் வேட்பாளராக வெற்றி பெற்றிருக்கிறார்.

குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சி மற்றும் குர்திஸ்தான் தேசப்பற்று சங்கம் ஆகியவற்றுக்கிடையே நடந்த முரண்பாடு காரணமாக வாக்கெடுப்பில் தாமதம் ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகினாலும், இறுதியில் பார்ஹம் சாலிஹ் அதிபராகியிருக்கிறார். 58 வயதான இவர் குர்திஷ் மிதவாத அரசியல்வாதி ஆவார். பிரிட்டனில் பொறியியல் கல்வி பயின்றவர். மேலும் ஈராக்கின் குர்திஸ் மாகாணத்தின் தலைமை அமைச்சராகவும், ஈராக் கூட்டாட்சி அரசின் துணைத்தலைமை அமைச்சராகவும் இருந்திருக்கிறார்.

**ஈராக் அரசு**

2003ஆம் ஆண்டு ஈராக்கில் அமெரிக்கப் படைகளால் சதாம் உசைனின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு, அந்த நாட்டில் உள்ள மூன்று இனவாதக் குழுக்கள் (ஷியா, சன்னி, குர்து) அதிகாரத்தைப் பகிர்ந்து வருகின்றன. இவற்றில் அதிகாரமிக்க பதவியான தலைமை அமைச்சர் பதவியை ஷியா பிரிவைச் சேர்ந்தவர்களும், நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவியைச் சன்னி பிரிவினரும், அதிபர் பதவியைக் குர்து இனத்தைச் சேர்ந்தவர்களும் வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# கர்ப்பப்பைப் புற்றுநோயை ஒழிக்கும் நோக்கில் ஆஸ்திரேலியா அரசு அதிரடிச் செயற்பாடு

சிட்னி.ஒக்.4
கர்ப்பப்பைப் புற்றுநோய் பெண்களைப் பெருமளவில் பாதித்து உயிரைப் பறிக்கிறது. வளர்ந்து வரும், ஏழை நாடுகளில் இந்த நோயால் பாதிக்கப்படுகின்ற 10 பெண்களில் 9பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை ஆண்டுக்கு 1 லட்சம் பெண்கள் கர்ப்பபை; புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வந்தனர். இது பன்னாட்டு அளவில் 50வீதம் ஆகும். எனவே இந்த நோயை ஒழிப்பதற்கு அங்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2022ஆம் ஆண்டுக்குள் கர்ப்பபை; புற்றுநோயை முற்றிலுமாக ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2007ஆம் ஆண்டு முதல் கர்ப்பப்பைப் புற்றுநோயை ஏற்படுத்தும் 'எச்.பி.வி' வைரசைக் கட்டுப்படுத்தும் தடுப்பு ஊசி மருந்து பெண் குழந்தைகளுக்குப் போடப்பட்டு வருகிறது. கடந்த 1991ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் 2007ஆம் ஆண்டில் இருந்து தான் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 'எச்.பி.வி.' வைரஸ் தடுப்பு மருந்து பயன்படுத்தப்பட்டு வருவதால் ஆஸ்திரேலியாவில் தற்போது பெண்களுக்குக் கர்ப்பப்பைப் புற்றுநோய்த் தாக்குதல் மிகவும் குறைந்துவிட்டது. தற்போது 1 லட்சம் பெண்களில் 6 பேரை மட்டுமே கர்ப்பபை புற்றுநோய் தாக்குகிறது. எனவே வருகிற 2022ம் ஆண்டுக்குள் ஆஸ்திரேலியாவில் இந்த நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


**நோய்க் காரணி**

இந்த நோய் 'எச்.பி.வி.' (கியூமன்). என்ற வைரஸ்களால் ஏற்படுகிறது. இத்தகைய வைரஸ் 100 விதங்களில் உள்ளன. அந்த வைரஸ் தாக்கிய பெண்களுக்கு ஆரம்பத்தில் நோயின் பாதிப்புத் தெரியாது. அதற்கான அறிகுறிகளும் தென்படாது. பின்னர் தான் வெளியாகி உயிரைப் பறிக்கிறது.




# இயற்பியலுக்கான நோபல் பரிசு அமெரிக்கா, பிரான்ஸ், கனடா விஞ்ஞானிகளுக்கு

ஸ்டொக்ஹோம்.ஒக்.4
சுவீடனில் உள்ள நோபல் பரிசுக்குழுவினர் 2018ஆம் ஆண்டின் இயற்பியலுக்கான நோபல் பரிசை அமெரிக்கா, பிரான்ஸ், கனடா விஞ்ஞானிகளுக்கு தரப்போவதாக அறிவித்துள்ளனர். இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றன. அந்த வகையில், 2018ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு சுவீடனின் தலைநகர் ஸ்டொக்ஹோமில் அறிவிக்கப்பட்டு வருகிறது. 2018 மருத்துவத்துக்கான நோபல் பரிசு புற்றுநோய் சிகிச்சையில் புதிய பாதையைத் திறந்த ஜேம்ஸ் பி.அலிசன், டசூகு ஹோஞ்சோ ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இயற்பியலுக்கான நோபல் பரிசு லேசர் பிசிக்ஸ் பிரிவில் பல்வேறு புதிய கண்டுபிடிப்புகளைச் செய்த அமெரிக்க இயற்பியலாளர் ஆர்தர் ஆஷ்கின், பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி ஜெரார்டு மோரோ, கனடா நாட்டின் பெண் விஞ்ஞானி டோனா ஸ்டிரிக்லான்ட் ஆகியோருக்குக் கூட்டாக விருது வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கண்ணாடி இழையில் (ஒப்ரிகல் டீஸர்ஸ்) புதிய கண்டுபிடிப்புகளைச் செய்ததற்காக அமெரிக்க இயற்பியலாளர் ஆர்தர் ஆஷ்கினுக்கு நோபல் பரிசின் பாதித் தொகை வழங்கப்பட்டது. கனடா நாட்டு பெண் விஞ்ஞானி டோனா ஸ்டிரிக்லான்ட், பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி ஜெரார்டு மோரா ஆகியோருக்கு லேசர் கற்றை மிக, மிக, நுண்ணிய அளவில் உருவாக்கியதற்காகப் பாதியளவு பரிசு வழங்கப்பட்டது. இந்த 3 விஞ்ஞானிகளும் கண்டுபிடித்த லேசர் தொழில்நுட்பத்தின் மூலம் எதிர்காலத்தில் உலகில் கோடிக்கணக்கான மக்களுக்கு எளிதாகக் கண் அறுவைசிகிச்சை செய்ய முடியும். அதற்கான தொழில்நுட்பத்தையும் எளிதாக உருவாக்கலாம் என்றும் கூறப்படுகிறது.




# "இரண்டு வாரங்கள் பதவியில் நீடிக்க முடியுமா?"
## சவூதி மன்னருக்கு ட்ரம்ப் சவால்

நியூயோர்க்.ஒக்.4
நாங்கள் இல்லாமல் சவூதி அரேபிய மன்னரால் இரண்டு கிழமைக்குக் கூடப் பதவியில் நீடிக்க முடியாது என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பேசியுள்ளது புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. 'சவூதி அரேபியா பல ஆண்டுகாலமாக அமெரிக்காவின் நட்பு நாடாக இருந்து வருகிறது. மேற்காசியாவில் மட்டுமின்றி உலக அளவில் பல்வேறு பிரச்சினைகளிலும் அமெரிக்காவுடன் கரம் கோர்த்துச் செயல்பட்டு வருகிறது.



ஆனால் கச்சா எண்ணெய் விவகாரத்தில் சவூதி அரேபியா கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளது கவலையளிக்கிறது. அந்த நாட்டின் பாதுகாப்புக்கு முழுப் பொறுப்பையும் அமெரிக்கா எடுத்துக் கொண்டுள்ளது. அமெரிக்கா இல்லாமல் சவூதி அரேபியாவால் நாட்டைப் பாதுகாக்க முடியாது. நாங்கள் இல்லாமல் அந்த நாடு நீடித்து இருக்க முடியாது. சவூதி மன்னர் சல்மான் பின் அப்துலஸிஸ் எனக்கு நல்ல நண்பர் தான். ஆனால் அமெரிக்கா இல்லாமல் இரண்டு வாரங்களுக்கு கூட அவரால் சவுதி மன்னர் பதவியில் நீடிக்க முடியாது' என ட்ரம்ப் பேசியுள்ளார்.


**பின்னணி**

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன. ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. ஈரானைத் தனிமைப்படுத்தும் முயற்சியாக, அந்த நாட்டிடம் இருந்து கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கும் மற்ற நாடுகளுக்கு அமெரிக்கா தடை விதித்து வருகிறது. இதனால் ஈரானில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெயில் 40சதவீதம் முடங்கியுள்ளது. இதன் காரணமாக, பன்னாட்டுச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்து வருகிறது.

ஈரான் நாட்டின் கச்சா எண்ணெய் பன்னாட்டுச் சந்தைக்கு வர முடியாத சூழலில் அந்த இழப்பை ஈடுகட்ட, சவூதி அரேபியா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் கூடுதலாகக் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்ய வேண்டும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வேண்டுகோள் விடுத்தார். இந்த வேண்டுகோளை சவூதி அரேபிய ஏற்றுக் கொள்ள மறுத்திருந்தது. இந்த நிலையிலேயே சவால் விடும் வகையிலான ட்ரம்பின் இந்தப் பேச்சு வெளிவந்திருக்கிறது.

# அமெரிக்க அயலுறவுத் துறைச் செயலர் வடகொரியத் தலைவரைச் சந்திக்கிறார்

வோசிங்டன்.ஒக்.4
அமெரிக்காவின் அயலுறவுத் துறைச் செயலரான மைக் பாம்பியோ, அடுத்த ஞாயிறன்று வடகொரியாவின் தலைவர் கிம் ஜோங் உன்னைச் சந்தித்துப் பேசவுள்ளார். உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி வடகொரியா பலமுறை அணுகுண்டுகளையும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் பல ஏவுகணைகளையும் பரிசோதித்ததால் அமெரிக்காவின் கோபத்துக்கு ஆளாகிப் பொருளாதாரத் தடைகளைச் சந்தித்தது. இதையடுத்து, தென்கொரியா எடுத்த முயற்சியின் பலனாகவே அமெரிக்க அதிபர் ட்ரம்பும், வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன்னும் கடந்த ஜூன் மாதம் சிங்கப்பூரில் சந்தித்துப் பேசியிருந்தனர். அப்போது கொரிய தீபகற்பத்தை அணு ஆயுத மற்ற பிரதேசமாக மாற்றுவதற்கு கிம் ஜோங் உன் உறுதி அளித்து, ட்ரம்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்பின், வடகொரியா அணுகுண்டுகளையோ, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையோ சோதித்து பார்க்கவில்லை. ஆனாலும், அணு ஆயுத ஒழிப்பில் வடகொரியா மெத்தனம் காட்டுவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது.



பின்னர் 3 நாள் பயணமாக வடகொரியாவுக்குச் சென்ற தென் கொரிய அதிபர் மூன் ஜே இன்னுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்தப் பயணத்தின் போது ட்ரம்ப்புக்கு, கிம் ஜோங் உன் எழுதிய இரகசியக் கடிதம் மூன் ஜே இன் வாயிலாக அமெரிக்க அதிபர் வாசஸ்தலமான வெள்ளை மாளிகைக்குக் கொண்டு சேர்க்கப்பட்டது. அதில், கிம் ஜோங் உன் டிரம்ப்பை மீண்டும் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் அடுத்த நகர்வாகவே அமெரிக்க அயலுறவுத் துறைச் செயலர் மைக் பாம்பியோ வருகின்ற ஞாயிற்றுக்கிழமை அன்று வட கொரியாவுக்குச் செல்லவிருக்கிறார். அங்கு அவர் அதிபர் கிம் ஜோங் உன்னைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என வெள்ளை மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# முகமூடி

ஒவ்வொருவர் முன்பும்
ஒவ்வொரு முகமூடி

அம்மணமாய் சிரிக்கிறது
உண்மை முகம்

முயற்சிகள் முளைத்தாலும்
சமூகம் விடுவதில்லை

எனக்கு மட்டுமே தெரிந்த என்முகம்
என்றாவது ஒருநாள்
எதிர்ப்படலாம் யாருக்கேனும்


அப்போது நான் மிகவும்
அழகாயிருப்பேன்.


ஆனால் உங்களுக்கு
என்னை பிடிக்காது.



# நடிகராக களமிறங்கிய செந்தில் கணேஷ்!

சூப்பர் சிங்கர் சீசன் 6 இல் வெற்றி பெற்றவர் நாட்டுப்புறக் கலைஞர் செந்தில் கணேஷ்.
இந்த வெற்றிக்குப் பின்னர் அவருக்குப் படங்களில் பாடும் வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. இந்தநிலையில், செந்தில் கணேஷ், நடிகராகக் களமிறங்கியுள்ளார். 'கரிமுகன்' என்ற படத்தில் நடித்து வருகிறார்.
இந்த படத்தின் முதல் ஒளிப்படம் வெளியாகியுள்ளதோடு வைரலாகியும் வருகிறது. நடிகை காயத்திரி ஐயர் இவருக்கு ஜோடியாக நடித்துள்ளார்.




# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | 7 | | 6 | | |
| 1 | | 7 | | | | | | 5 |
| | 6 | | 3 | 9 | 5 | | 7 | |
| | | 9 | | | | 1 | | |
| 8 | | | 6 | | 2 | | | 7 |
| | | 2 | | | 9 | 4 | | |
| | 7 | | 9 | 2 | 4 | | 1 | |
| 5 | | | | | | | | 9 |
| | | 1 | | 8 | | 2 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 1 | 4 | 8 | 6 | 3 | 9 | 5 |
| 4 | 8 | 9 | 7 | 3 | 5 | 6 | 2 | 1 |
| 3 | 6 | 5 | 1 | 9 | 2 | 7 | 4 | 8 |
| 8 | 1 | 7 | 3 | 2 | 9 | 4 | 5 | 6 |
| 2 | 5 | 4 | 6 | 7 | 1 | 8 | 3 | 9 |
| 6 | 9 | 3 | 5 | 4 | 8 | 2 | 1 | 7 |
| 5 | 7 | 8 | 2 | 1 | 3 | 9 | 6 | 4 |
| 1 | 4 | 2 | 9 | 6 | 7 | 5 | 8 | 3 |
| 9 | 3 | 6 | 8 | 5 | 4 | 1 | 7 | 2 |

நேற்றைய விடை



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உழைப்பினால் முன்னேற்றம் காண்பீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்:** கூடுதல் பணி உருவாகி மனதை சஞ்சலப்படுத்தும். தொழிலில் தேவையான மாற்றங்களை செய்வது அவசியம். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** இலட்சிய நோக்குடன் செயல்படுவீர்கள். இஷ்ட தெய்வ அருளால் தொழில் வியாபாரம் செழிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**கடகம்:** எளிதான பணி கூட சுமை போலத் தோன்றும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். இலாபம் சீராக இருக்கும்.

**சிங்கம்:** கடந்த கால உழைப்புக்கு தாராள நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தினர் அதிக அன்பு பாசம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் பொறுப்பை உணர்ந்து செயல்படுவீர்கள். சீரான ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் வளர்ச்சி காண்பீர்கள். லாபம் உயரும்.

**விருச்சிகம்:** உங்களுக்கு இடையூறு செய்பவரை அறிந்து விலகுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பிள்ளைகளின் வழியில் கூடுதல் செலவு ஏற்படலாம்.

**தனுசு:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். உறவினர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் செயல் திறன் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். ஆதாயம் அதிகரிக்கும்.

**கும்பம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழிலில் நிலுவைப்பணிகளை நிறைவேற்றுவது நல்லது. சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** பரபரப்புடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கு நண்பரின் ஆலோசனை உதவும். பணவரவில் இருந்த மந்தநிலை மறையும்.

சிந்திப்போம்...



# வேக வேகமா...

உணவைக்கூட வேக வேகமாச் சாப்பிட்டுவிட்டு எங்கே ஓடுறோம்...?
எங்கோ ஓடுறோம்! எல்லோரும் ஓடுகிறார்கள் நாமும் ஓடுவோம் என்ற மனநிலையில் திழைத்துப் பேசுகிறோம்.

நாம் எந்த வேலையைச் செய்கின்ற போதும் அவசரமும் அவதியும் கொண்டு செயற்படுகிறோம்.
அதனால் இந்த மண்ணைவிட்டும் அவசரமாகவே சென்றுவிடுகிறோம். ஆரம்பக் காலத்தில் ஒரே நேரத்தில் பல வேலைகளையும் செய்யக் கூடியவர்கள் இருந்தார்கள். ஒரே நேரத்தில் எட்டு வகையான செயல்கள் செய்பவர்களை 'அட்டாவதானி' என்றும் ஒரே நேரத்தில் நூறு வகையான செயல்கள் செய்தவர்களை 'சதாவதானி' என்றும் அழைத்தார்கள்.

உங்கள் வேலையை வேகமாக முடிக்க ஒரே வழி
ஒரு நேரத்தில் ஒரே வேலையை மட்டும் செய்வது

என்றொரு பொன்மொழி உண்டு. 'பதறாத காரியம் சிதறாது' என்ற பழமொழியும் இங்கு நோக்குதற்குரியது.

## நாளை

**05.10.2018**

வெள்ளிக்கிழமை

**புரட்டாதி 19**

திதி: ஏகாதசி மா. 5.28 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மா. 6.05
சுபநேரம்: 6.02 – 7.32 வரை
ராகுகாலம்: 10.32– 12.02 வரை



# எதிர்பாராத பதில்கள்

தனது சமயோசித புத்தியாலும், சாதுரிய மான பேச்சாலும் எல்லோரையும் கவர்ந்தவர் முல்லா நஸ்ருதீன். இதனால் இவரை அனைவரும் அறிவாளி என்று கூறுவர். ஆனால் அவரது இரு நண்பர்களும், "முல்லா ஒரு முட்டாள், ஆனால் அனைவரும் அவரை அறிவாளி என்று கூறுகிறார்கள். அவரை ஒரு சிக்கலில் மாட்டிவிடவேண்டும்'' என்று முயற்சி எடுத்து முல்லாவை மேடையில் பேச அழைத்தார்கள்.

முதலாவதாக முல்லா மேடையேறி "நான் என்ன பேசப்போகின்றேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். அனைவரும் தெரியாது என்று கூறினார்கள். "நான் என்ன பேசப்போகின்றேன் என்றே உங்களுக்குத் தெரியவில்லை. நான் எதற்காக உங்களிடம் பேசவேண்டும்?" என்று கூறிவிட்டு மேடையைவிட்டு இறங்கினார்.

இரண்டாவதாக, முல்லாவின் இரு நண்பர்களும் இப்படி முல்லா இறங்கிவிட்டாரே என நினைத்துவிட்டு மறுபடியும் முயற்சியெடுத்து முல்லாவை மேடைக்கு அனுப்பினர். மேடையேறியவுடன் முல்லா,

"நான் என்ன பேசப்போகின்றேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். அனைவரும், போனதடவை தெரியாது என்று சொன்னதால் முல்லா மேடையைவிட்டு இறங்கிவிட்டார். அதனால் இந்தமுறை அவரைப் பேசவைக்கவேண்டும் என்று சிந்தித்து அனைவரும் "தெரியும்" என்று சொன்னார்கள். அதற்கு முல்லா, "நான் என்ன பேசப்போகின்றேன் என்பது உங்களுக்கே தெரியும், மறுபடியும் நான் ஏன் பேசவேண்டும்" என்று கூறி மேடையைவிட்டு இறங்கினார்.

மறுபடியும் இவரைப் பேசவைக்கவேண்டும் என்று முயற்சித்து இரு நண்பர்களும், முல்லாவை மேடைக்கு அனுப்பினர். முல்லா முன்பு போலவே "நான் என்ன பேசப்போகின்றேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். தெரியாது என்று சொன்னாலும் சரி, தெரியும் என்று சொன்னாலும் சரி இவர் மேடையைவிட்டு இறங்கிவிடுகிறார் என்று மக்களெல்லாம் மிகவும் யோசித்துக் கொண்டிருந்தனர். அதனால் பாதிபேர் தெரியும் என்றும், பாதி பேர் தெரியாது என்றும் கூறினார்கள்.

இப்பொழுது முல்லா,

"தெரியாதவர்களெல்லாம், தெரிந்தவர்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு மேடையைவிட்டு இறங்கினார். முல்லா அறிவாளி என்று ஏன் எல்லோரும் சொல்கிறார்கள் என்பதை நண்பர்கள் இருவரும் உணர்ந்துகொண்டனர்.

அறிவியல்




## தமிழ் விக்கிப்பீடியா

எண்ணற்ற தகவல்களை அள்ளித் தரும் 'தமிழ் விக்கிப் பீடியா' கடந்த 2003 ஆம் ஆண்டு இதே நாளில் தான் தொடங்கப்பட்டது.

விக்கிப்பீடியா, 'ஜிம்மி வேல்ஸ்' மற்றும் 'லாரி சாங்கர்' ஆகியோரால் 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அனைத்து மனிதர்களுக்கும் இலவசமாக, மொழிகளைக்கடந்து தகவல்கள் கிடைக்கவேண்டும் என்பதே விக்கிப்பீடியாவின் உயரிய நோக்கமாகும்.

இலாப நோக்கமற்ற திட்டங்களில் ஒன்றாக விக்கிப்பீடியா பார்க்கப்படுகிறது. தமிழ் விக்கிப் பீடியாவில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகளுடன் சேர்த்து, மொத்தம் 24 மில்லியன் கட்டுரைகளும் உலகெங்கிலுமுள்ள தன்னார்வலர்களால் கூட்டாக எழுதப்பட்டுள்ளன.

பெரும்பாலும் இதன் எல்லாக் கட்டுரைகளும், இதைப் பயன்படுத்தும் எவராலும் தொகுக்கப்பட முடியும்.

மேலும் இது அண்ணளவாக ஒரு இலட்சம் முனைப்பான பங்களிப்பாளர்களையும் கொண்டுள்ளது. இந்தப் பக்கத்தில் எவர் வேண்டுமானாலும் எழுதலாம், கட்டுரைகளைப் பதிவிடலாம்.

ஆனால் நடுநிலையான தன்மையுடன் பதிவிட வேண்டும் என்பதே விக்கீப்பீடியாவின் கொள்கையாக அமைந்துள்ளது.



## வெற்றிக்கு அடிப்படை முயற்சிகள்

தோல்வியும் வெற்றியும் எப்படி உண்டாக்கின்றன? என்பதற்குப் பெர்னாட்ஷா ஒரு விளக்கம் சொல்லி இருக்கிறார்.

"நான் இளைஞனாக இருக்கும் போது பத்துக் காரியங்கள் செய்தால் அதில் ஒன்பது காரியங்கள் தோல்வியடைவதை நான் விரும்பவில்லை.

ஒன்பது தடவை வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?'' என்று யோசித்தபோது எனக்கு ஒரு உண்மை புலப்பட்டது.

தொண்ணூறு முறை முயன்றால் ஒன்பது தடவை வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. ஆகவே நான் முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேன்.



## பொன்மொழிகள்


ரூஸோ

**நாவடக்கம் –**
அமைதியாக வாழ வேண்டுமானால் கண்ணால் கண்டவை, காதால் கேட்டவை எதையும் வாயால் சொல்லக் கூடாது.
**கெஸ்டோரேமா**

**நன்கு உணர்–**
ஒரு நூல் முழுவதையும் மேலோட்டமாக வேகமாகப் படிப்பதை விட ஒரு பக்கத்தை நன்றாகப் படித்து உணர்ந்து கொள்வது மேலாகும்.
**மெக்கலோ**

**துன்பத்தின் காரணம்–**
பிறர் தன்னை விடவும் சுகமாக வாழ்கிறார்கள் என்ற எண்ணந்தான் எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமாக இருக்கிறது.
**டீரெஸ்ட்**

**ஆண்– பெண் பேச்சு**
தங்களுக்குத் தெரிந்தது பற்றி ஆண்கள் பேசுகிறார்கள். தங்களுக்குத் திருப்தி தருவது பற்றி பெண்கள் பேசுகிறார்கள்.
**ரூஸோ**

**ஆறுதல் பேச்சு–**
துன்பத்தில் இருப்பவனைப் போய்ப் பார். செல்வத்தில் இருப்பவன் அழைத்தால் மட்டும் போ.
**மகாபாரதம்**

**பணமும் நம்பிக்கையும்**
உன் நம்பிக்கையைப் பணத்தின் மீது வைக்காதே. பணத்தை நம்பிக்கையான இடத்தில் வை.
**ஹேராம்ஸ்**

## Google கூகுள்

'கூகுள்' 1995ஆம் ஆண்டு அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தில் உள்ள 'ஸ்டான்ட்ஃபோர்ட்' பல்கலைக்கழக பட்டதாரிகளான 'லேரி பேஜ்' மற்றும் 'செர்ஜி ப்ரின்' ஆகியோரால் தொடங்கப்பட்டது.

1998ஆம் ஆண்டுக்கு பின்தான் கூகுளுக்கு எனப்பிரத்தியேக சின்னம் உருவாக்கப்பட்டது. அதுவரையிலும் கூகுள் உலகில் உள்ள முக்கிய சின்னங்கள், நிகழ்வுகளையே தனது அடையாளமாகக் கொண்டு செயற்பட்டது.

'googol' என்ற வார்த்தையில் இருந்து தான் 'google' என்ற வார்த்தை கண்டுபிடிக்கப்பட்டது. 'Googol' என்பது ஒன்றுக்கு பக்கத்தில் 100 பூஜ்ஜியங்கள் கொண்ட எண்ணை குறிக்கும் சொல் ஆகும். ஆனால் இந்த வார்த்தை பெரும்பாலும் செயற்பாட்டில் இல்லை.

அதிலிருந்து கூகுள் படிப்படியான வளர்ச்சியை கண்டுவருகிறது. கூகுளில் கிடைக்காத தகவலென்று ஒன்று இல்லை என்று கூறும் அளவுக்கு அதன் வளர்ச்சி தற்போது நிலைபேறடைந்துள்ளது. அண்மையில் தகவல் கசியவிடப்பட்டது போன்ற குற்றச்சாட்டுகள் இருந்தும் பெரிய அளவான பாதிப்புகளை சந்திக்கவில்லை. அதன் பங்குகள் வீழ்ந்தாலும் அதிலிருந்து விடுபட்டு எழுந்து வெற்றிநடை போடுகிறது கூகுள்.

## சுத்தம் என்றும் சுகமே!

உடலில் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ
சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதை
நித்தம் நித்தம் பேணுகையில்
நீண்ட ஆயுள் பெறுவாயே
காலை மலை உலவி நிதம்
காற்றுவாங்கி வருவோரின்
காலைத்தொட்டுக் கும்பிட்டு
காலன் ஓடிப் போவானே!





"இன்று மூத்தோர் வாரத்தின் நான்காவது நாளாகும். முதுமை என்பது புதுமை அல்ல. இயற்கை ஈந்த அழகிய படைப்பார்ந்த வடிவமே முதுமையாகும். முதுமை யில் மனிதன் அழகுள்ளவனாகின்றான். அனுபவங்களின் சேர்க்கை வழியே இந்த முதுமை பரிணமிக்கின்றது. மூத்தோரின் நலன்கள், இயல்புகள் மற்றும் நடத்தைகள் சமூகத்துக்கு முன்னோடியானவை.
சமூகச்சிந்தனைகளின் நகர்விலும் மொழியிலும் புதுயுகம் தோன்றுகின்றது. இந்தப் புதுயுகத்தின் மாற்றங்களுக்கான விழுதுகளாய் மூத்தோர் திகழ்கின்றனர். இன்று இல்லறத்தின் சிறப்பு என்பது மூத்தோர்களின் இருப்பாக சிறந்திருக்கிறது. அனைவருக்கும் சொந்தமான இந்த முதுமை குறித்து சிந்திப்போம். செயலாற்றுவோம்."

# முதுமை என்பது புதுமை அல்ல!

மூத்தோர்கள் ஆசியாவில் மிகுந்த சவாலுக்குரியவர்களாக மாறி வருகின்ற நிலமை 1963 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு பின்னர் ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் மூத்தோர்களின் ஆயுள் காலம் அதிகரித்துள்ளது. உலக சனத்தொகையில் அறுபது வயதுக்கும் மேற்பட்ட முதியவர்களின் தொகை, கடந்த 2006ஆம் ஆண்டில் 700 மில்லியன்களாக காணப்பட்டது. இலங்கையில் ஆண்களின் சராசரி ஆயுள்காலம் 72 வருடங்களாகவும், பெண்களின் ஆயுள்காலம் 78.6 வருடங்களாகவும் காணப்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
முதியோர் சனத் தொகை அதிகரிப்பானது, 'பராமரிப்பு, சமூக பொருளாதார நிலை, தனிக் குடும்ப வாழ்வு, சமூகப் பாதுகாப்பு' என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் இருந்து விடுபடுவதற்கான வழிகளை கண்டுகொள்ளும் முயற்சியாக இந்தக் கட்டுரை அமைகின்றது. முதியோர் வாரம் ஐப்பசி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதி வரையான காலப்பகுதியில் நினைவு கூரப்படுகின்றது. இவ்வேளையில் எமது சிந்தனைகளில் பதிவேற்றுவதற்காக சில விடயங்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக முன்னிறுத்தப்பட்டுள்ளது.

**கூட்டுக் குடும்ப வாழ்வே சிறந்தது**

கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த எமது சமூகக் கட்டமைப்பில், 'பாதுகாப்பு, பராமரிப்பு, மகிழ்ச்சி, விட்டுக்கொடுப்புக்கள், பொறுப்புக்கூறும் தன்மை, மரியாதை, புரிந்துணர்வு' என்பவை தாராளமாகவே குடியமர்ந்திருந்தன. உயர்விலும் தாழ்விலும் சமநிலை காணப்பட்டது. சமூக அந்தஸ்து, குடும்பங்களில் நடக்க வேண்டிய காரியங்கள் என அனைத்துமே அந்தந்தக் காலப்பகுதியில் சிறப்பாக நடந்தேறின. ஆனால் இன்றைய தனிக் குடும்ப வாழ்வியல் முறையில் இவை அனைத்தையும் ஆச்சரியமாகத் தேட வேண்டிய அவசியப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, 'முதிர் கன்னிகள், விவாகரத்துப் பெற்றவர்கள், சமூகப் பாதுகாப்பின்றி வாழ்பவர்கள்' என்ற புதுப் பிரசவங்கள் ஆபத்தான அறிகுறிகளாக சமூக வெளியில் அந்தரிக்கத் தொடங்கியுள்ளன. குடும்பங்களுடன் மூத்தோரின் இருப்பு தக்கவைக்கப்படாமையே இதற்கான காரணங்களாக முன்னிலை பெற்றுள்ளன.

**மூத்தோரைப் பராமரிப்போம்**

மூத்தோர்கள் குடும்பங்களில் இருந்து விலகியமைக்கான காரணமாக, 'இயலாத நிலையில் பராமரிப்பு' என்ற விடயம் காணப்படுகின்றது. இன்று முதுமையடைவதற்கு முன்னரே முதுமையில் யாருடன் இருப்பது என்ற விடயம் இடர்பாடுகளைத் தரத் தொடங்கியுள்ளது. ஒரு பிள்ளையை ஆவது உள்நாட்டில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற சுயநல எண்ணம் பெற்றோரிடையே துளிர்விட ஆரம்பித்துள்ளது. ஆனால் உள்நாட்டில் இருக்கின்ற அந்த ஒரு பிள்ளை கூட எந்த அளவுக்கு பெற்றோர் மீதான கரிசனையைக் கொண்டுள்ளது என்பது தொடர்பில் கேள்விக் குறிகளே தொக்கி நிற்கின்றன.

உலகில் மூத்தோர்கள் அதிகமாக காணப்படும் நாடு ஜப்பான். உலகில் மூத்தோர்கள் மகிழ்வாக இருக்கும் நாடு டென்மார்க். இந்தநிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தங்கியிருப்போரில் 40 சிறுவர்களும், 20 முதியோர்களும் அடங்கியிருந்தனர். இந்தநிலமை எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் தலைகீழ் மாற்றம் கண்டுகொள்ளும். தனியார்துறையில் வேலை செய்யும் 70 வீதமானோரில், 25 வீதமானோரே சமூகப் பாதுகாப்பை முதுமையில் பெறுகின்றனர். இலங்கையில் தொழில் புரிவோரில் 50 வீதமானவர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. எனவே முதியவர்களுக்கு சமூகப் பாதுகாப்புக்கான வருமானம் அற்ற நிலை தங்கிவாழும் நிலையை ஏற்படுத்தப் போகின்றது.

**மனநிலையில் மாற்றம் வேண்டும்**

மூத்தோர்கள் தமது பழமை வாதங்களில் இருந்து விடுபடாத நிலை பாரிய சவால்களாக மாறியுள்ளது. விடாப்பிடியான நிலமைகள் தொடர்வதை தக்க வைக்கும் விதமாக அவர்கள் கொண்டுள்ள எண்ணப்பாடுகள் மூத்தோரை சமூகத்தில் இருந்து அந்நியப்படுத்தி விடுகின்றன. முதுமையில் அனுசரித்து வாழக்கூடிய மனப்பக்குவம் அவசியமாகின்றது. களம் பல கண்ட சந்ததிக்கு கலங்கரை விளக்கான மூத்தவர்கள் சமூகத்தில் சமாளிக்கும் நிலமையை தக்க வைக்கும் போது, இந்தநிலை மறைந்து சமூகத்துடனான ஒன்றிப்பு ஏற்பட்டுவிடும்.

**பாதுகாப்பு**

முதுமையில் பாதுகாப்பு என்பது அவசியமான விடயமாக அமைகின்றது. கீழே விழுதலை தவிர்த்துக் கொள்ளும் போது, சுகமான முதுமையை பூரணமாக அனுபவிக்க முடியும். முதியவர் எப்போது கீழே விழுகின்றாரோ அன்று முதல் அவரது இயக்கம் தடைப்பட்டுவிடுகின்றது. படுத்தபடுக்கையான நிலமையை நோக்கியதான பயணிப்பு ஆரம்பிக்கப்படுகின்றது. உடலை பேணுவதும், மனதைத் திடகாத்திரமாக வைத்திருப்பதும் முதுமையில் விழுதலை தவிர்க்கும் வழிகளாக அமைகின்றன.

**தேவை**

மூத்தோருக்கான தேவைகளில் சரியான நேரத்திற்கு உணவு உண்ணுதல் என்பதும் தேவையாக உள்ளது. அவை சுவையான உணவாக நேரத்திற்கு கிடைக்கும் போது இயல்பான மகிழ்வாக அமைகின்றது. முதலில் அன்பாகக் கொடுத்தல் என்ற விடயம் முன்னிலைப்படுத்தப்படும்போது, எதிர்பார்ப்பு நிறைவேறி குழந்தை மனம் படைத்த மூத்தவர்கள் மகிழ்வுறுகின்றனர். உணவுகளை போட்டு கோப்பைகளை தள்ளிவிடுவது, போட்டு சாப்பிடுங்கோ எனக் கூறுவது மூத்தவர்களை இம்சைப்படுத்துகின்றது. விரக்தியின் எல்லைக்கே அவர்களை அழைத்துச் செல்கின்றது. இதை புரிந்துகொண்டு மூத்தோரைப் பராமரிக்க முயற்சிப்போம்.

**பொறுப்புணர்வைக் கற்றுக்கொடுப்போம்**

இன்றைய காலநகர்வில் அனேகமான பெற்றோர்கள் பொறுப்பின்றித் திரியும் பிள்ளைகள் தொடர்பில் கவலை கொள்கின்றனர். வளர்ப்புச் சரியில்லையென அங்கலாய்க்க நேரிடுகிறது. உண்மையில் சமூகப் பொறுப்புப் தொடர்பான ஆரோக்கியமான ஊடாட்டங்கள் அவர்களுக்குக் கிடைக்காமையே இதற்கான காரணங்களாக அமைந்துள்ளன. உணர்வூட்டல் என்பதை சூழல் ஏற்படுத்த வேண்டும். 'முதியோர் பராமரிப்பு இடங்களைத் தரிசித்தல், நலிவுற்ற மக்களை காணுதல், அவர்களுக்கு உதவுதல்' போன்ற செயற்பாடுகளில் சிறுவர்களின் காலம் கரையும்போது நல்ல பெறுபேறுகளை சமூகம் அறுவடை செய்ய முடியும். சமூக வழிகாட்டல் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு செயற்பாடுகள் நிறைவாக வேண்டப்படுகின்றன.

**நவீனங்கள் ஆபத்தானவை**

உலகமாயமாக்கலின் வழி பல விதமான தேடல்களை மேற்கொள்வதற்கு வழியேற்பட்டாலும், நல்லது எது, கெட்டது எது என்பதை பகுத்தறிந்து உள்வாங்கும் அளவுக்கு



குடும்பச்சூழல் கட்டமைப்புப் பெறவில்லை. இப் பணியை முதியவர்கள் முன்பு செவ்வனே செய்து கொண்டிருந்தார்கள். வழிப்பாடுத்தினார்கள். தமது அனுபவங்கள் மூலம் துன்பங்களைக் கடந்து செல்ல வழிகாட்டினார்கள். இன்று துன்பங்களுக்குள் வீழ்ந்தவர்களை மீட்க முடியவில்லை. வாழ்க்கை முடிந்து விட்டதாக முடிவெடுத்து தத்தளிக்கின்றார்கள். தங்கள் துயரங்களை மூத்தவர்களுடன் பகிர்ந்துகொண்டவர்கள் தம்மை சமூகத்தில் மீளவும் நிலை நிறுத்தியுள்ளமை உய்த்துணரப்பட்டுள்ளது.

**சுகாதார நலனை மேம்படுத்துவோம்**

இலங்கையில் சுகாதாரத்துறை வளர்ந்துள்ளது. ஆயினும் முதியோரில் தொன்னூறு வீதமானோர் தொற்றாத நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். முதியோர் சனத்தொகையில் 55 வீதமானோர் ஏதோ ஒருவகையில் தீராத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களாக உள்ளனர்.
'நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், ஆர்த்திரைட்டஸ், ஆஸ்துமா' போன்ற நோய்கள் அதிகரித்துள்ளன. உணவுப் பழக்க வழங்கங்கள், கொழுப்பு, புற்றுநோய் போன்றவற்றாலும் முதுமையில் பலர் பாதிக்கப்படுகின்றனர். 'டிமென்சியா' எனும் மறதி வியாதி, கூறியதை திரும்பத் திரும்பக் கூறுதல் போன்றவை முதுமையில் சாதாரணமான நோய் அறிகுறிகளாக காணப்படுகின்றபோதும், அவர்களைப் பாராமரிப்போர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் முதியோர் தொகை அதிகரிப்புக்கு 100 ஆண்டுகள் தேவைப்பட்டது. ஆசிய நாடுகளில் முதியோர் தொகை அதிகரிப்புக்கு 25 வருடங்கள் மட்டுமே தேவையாக இருந்துள்ளது. இது 7 தொடக்கம் 14 வீத அதிகரிப்புக்கான கணிப்பீடாக காணப்படுகின்றது.

**காத்திரமான சமூக வலுவூட்டலைக் கட்டியெழுப்புவோம்**

அனுபவத்தின் பொக்கிசமான மூத்தோர் குடும்பங்களில் இருந்து அந்நியப்பட்டமையால் 'ஈகோ' என்ற புதிய வியாதி குடும்பங்களில் தொற்றியுள்ளது. இதன் விளைவாக குடும்பப் பிரிவுகள் தாராளமாக ஏற்படுகின்றன. சரியானவற்றையும் தவறானவற்றையும் முன்னைய காலங்களில் மூத்தவர்கள் பகுத்தறிந்தார்கள். கூட்டுக்குடும்பங்களை சிதைவின்றி கட்டிக் காத்தார்கள்.
இன்று இந்த நிலமை மாற்றம் கண்டுள்ளது. நிச்சயமாக உண்மையான அன்பின் இருப்பிடம் என்பது மூத்தோர் பராமரிப்பின் பிறப்பிடமாகவே காணப்படுகின்றது.
காத்திரமான சமூக வலுவூட்டலுடன் சமூகப் பாதுகாப்பு என்பது மூத்தோர் மத்தியில் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கு சமூகத்தில் வாழ்கின்ற குடும்ப அலகின் ஒவ்வொரு உறுப்பினரும் ஊன்று கோலாக இருக்க வேண்டும். முதுமை அனைவருக்கும் பொதுவான ஒன்று. அதிலும் இளமை மிளிரும் முதுமை என்பது சிறப்புக்குரியதாக அமையும்.
இந்தநிலையில் 'சிறப்பாக எதிர்கொள்ளத் தக்க நேரிடையான மனப்பக்குவம் வளர்த்தெடுக்கப்படுதல்' என்ற விடயத்தை அனைவரும் உள்வாங்க வேண்டும். இந்த நிலைப்பாடே காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. கற்றுணர்தல் என்ற விடயத்தை காலம் உணர்த்தி நிற்கையில், மெய் நிலையை ஜீரணித்து கொள்வதே இன்றைய தேவையாக அமைந்துள்ளது.

**கட்டுரையாளர்:**
**அத்தியட்சகர்,**
**அரச முதியோர் இல்லம், கைதடி.**

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி இராஜேஸ்வரி தனபாலசிங்கம் (இராசு)

தாயின் மடியில் 03.09.1945

இறைவன் திருவடியில் 14.10.2017

**திதி: தேய்பிறை தசமி [04.10.2018]**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



பேரன்புள்ள மனைவியாய் பிரியமுள்ள தாயாய்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
எமக்கெல்லாம் நல்வழி காட்டிய
- எங்கள் தீபமே
எம்மை விட்டுச்சென்று இன்று
- ஆண்டொன்று ஆகின்றது
ஆனால் உங்கள் நினைவுகள்
எம்மோடு என்றும் வாழ்கின்றது அம்மா!
உங்கள் சிரித்த முகத்தையும் உங்கள்
- அறிவுரைகளையும்
நினைத்த வண்ணம் உள்ளோம்
ஊரார் அயலவர்கள் போற்ற வாழ்ந்தீர்கள் அம்மா!
நீங்கள் அம்மன், முருகன் என்று திரிந்து
நல்ல வழியைக் கேட்டு காற்றோடு பறந்து விட்டீர்கள் தாயே!
எங்கள் கண்ணீர் பூக்களை காணிக்கையாக தருகின்றோம்

**உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(CS 202933) (13417)

இல.04, செட்டித்தெரு,
நல்லூர்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமலர் நடராஜா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமலர் நடராஜா நேற்று (03.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நடராஜாவின் (அதிபர், அண்ணா தொழிலகம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தில்லை நடராஜா - புஷ்பமலர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற புஷ்பராசாவின் பாசமிகு சகோதரியும் திவாகரன், கண்ணதாசன், தயாழினி ஆகியோரின் அன்புத்தாயும், அமுதா, தர்சினி, மதிமகன், கருணாகரன், மயூரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சாரதாமணிதேவி, விவேகானந்தன் மற்றும் புனிதவதி, அன்னபூரணம், அன்னலட்சுமி, மகாலட்சுமி, ஜெயலட்சுமி, யோகேஸ்வரி, பேரின்பநாயகி ஆகியோரின் அன்புமைத்துனியும், மதிதயனன், மதிதயனி, பிரணவன், ராகவி, நந்தீகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2018) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் (அண்ணா இல்லம், இணுவில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
021 720 0800

# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்



**தனது 36 ஆண்டுகால கல்விப்பணியில் இருந்து**
**இன்று (04.10.2018) வியாழக்கிழமையுடன்**
**ஓய்வுபெறும் எமது மணிவிழா நாயகி**

## திருமதி அன்னமலர் குணபாலசிங்கம்



கலைமகளின் பெரும் புகழை
தரணியிலே நிலைநிறுத்தி
களங்கமில்லாப்பணி புரிந்து
மனங்களிலே நிறைந்தவளே

செயலில் நேர்த்தியும் சீரியநோக்கமும்
முயலும் துறைகளில் முழுதானவெற்றியும்
புயலுக்கும் சரியாத பொன்னானமனதும்
புனிதப்பணியும் உந்தனது பண்புகள்

மணிவிழாக்கண்டு மகிழ்ந்திடும் வேளையில்
மனதார உம்மை வாழ்கவென வாழ்த்துகின்றோம்
நோய்நொடி எதுவுமின்றி நூற்றாண்டு நீங்கள் வாழ்க
கலைமகள் புகழைப்போன்று காலங்கள் போற்ற வாழ்க

**பாடசாலைச் சமூகம்**
**மு/ கலைமகள் வித்தியாலயம் – முள்ளியவளை**

(m.1678)

# சேவை நலன் பாராட்டு

Congratulations!



## திரு. கணபதிப்பிள்ளை சகாதேவன்

**(ஓய்வு பெற்ற செயற்பாட்டு முகாமையாளர் -**
**இலங்கை வங்கி, வடமாகாணம்)**

15.12.1980 அன்று இலங்கை வங்கியில் இணைந்து பல்வேறு பதவி உயர்வுகளைப் பெற்று இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளராய் பதவி வகித்து 02.10.2018 இல் ஓய்வு பெற்று 03.10.2018 அன்று தனது 60 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடிய **கணபதிப்பிள்ளை சகாதேவன்** அவர்களை தனது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes



**வாழ்த்துவோர் : உதவிப்பொது முகாமையாளரும்,**
**ஊழியர்களும், இலங்கை வங்கி வடமாகாண காரியாலயம்.**

# கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## சபைநிதி - 2018

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA), கட்டட நிர்மானத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)றகு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள், தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர் ,மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 04.10.2018 - 18.10.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 04.10.2018 திகதியில் இருந்து 18.10.2018 வரைகாலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 19.10.2018ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 நாள்களுக்கு (07.12.2018 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 12.10.2018 அன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை. | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/01/CF(B)/2018/73 | Construction of drainage canal work at Kanagaratnapuram road, Nayanmarkaddu, Ariyalai | 1.13 | 1 | C9/C8 | 12,000.00 | 04.01.2019 |
| 2 | JMC/WD/01/CF(B)/2018/74 | Reconstruction of Drainage canal work at Killner lane, Kasthuriyar Road | 0.47 | 1 | C9/C8 | 5,000.00 | 04.01.2019 |
| 3 | JMC/WD/01/CF(B)/2018/75 | Construction of Retaining wall work of ward -05 at Jaffna | 0.39 | 1 | C9/C8 | 5,000.00 | 04.01.2019 |

ஆணையாளர்,
பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

03.10.2018

(IN7980) (10)

# கண்ணீர் அஞ்சலி

## நல்லதம்பி சுப்பிரமணியம்



எமது சக நில அளவையாளர்
ந.சுப்பிரமணியம்
அவ்ர்களின் மறைவையொட்டி
எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த
இரங்கலை அன்னாரின்
குடும்பத்தினருக்குத்
தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**உத்தரவு பெற்ற**
**நில அளவையாளர்**
**சங்கம் - வடபகுதி.**

(e.14559)(13.17)

# மரண அறிவித்தல்

## பென்ஜமின் செல்லையா பாலசிங்கம்

*(சட்டத்தரணி, கரவெட்டி மத்தி)*

பெத்தேல், கரவெட்டி மத்தி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மருதனார்மடத்தினை தமது வாழ்விடமாகவும் கொண்டுள்ள பென்ஜமின் செல்லையா பாலசிங்கம் (சட்டத்தரணி) 03.10.2018 அதிகாலை இறையடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லையா மற்றும் பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற ரூத் மகேஸ்வரியின் கணவரும் காலஞ்சென்ற ராஜசிங்கத்தின் சகோதரனும் திருமதி சிந்தியா சாந்தினி சத்தியமூர்த்தி (லண்டன்), திருமதி செரினா சுனேத்திரா தேவநேசன் (ஆசிரியர் - உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை), சாமுவேல் தேவானந்தன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாமு சத்தியமூர்த்தி, அருட்திரு. தேவசகாயம் தேவநேசன் (தலைவர் - அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை), திருமதி செல்வினி தேவானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மகேந்திரன் செந்தூரன், எமி அர்ச்சனா செந்தூரன், போல் பிரசன்னா சத்தியமூர்த்தி, றெஜினோல்ட் றவின் தேவானந்தன், லிண்டா மரீனா தேவானந்தன், மோலி தேவசுதன் தேவநேசன், ஜோஆஷ் சுதர்சன் தேவானந்தன் ஆகியோரின் அன்புசால் பேரனும் ஈத்தன், மைக்கா, ஷோன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது உடலானது மக்கள் பார்வைக்காக கரவெட்டியிலுள்ள பெத்தேல் இல்லத்தில் வைக்கப்பட்டு எதிர்வரும் (06.10.2018) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லடக்க வழிபாடு நடைபெற்று நல்லடக்கத்திற்காக கரவெட்டியிலுள்ள மெதடிஸ்த சேமக்காலைக்கு கொண்டுசெல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**லிண்டா: 0777100324**
**மோலி: 0765475055**

**தகவல்: திருமதி செரினா எஸ். தேவநேசன் (மகள்)**



மைத்ரி ஆட்சி - நிலையான நாடு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக
இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட

# புனரோதயம்

சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம்
மற்றும்
"வனரோபா" தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றின்
மன்னார் மாவட்ட ஆரம்ப செயற்திட்டம்

**ஜனாதிபதி மேன்மைதங்கிய மைத்ரிபால சிறிசேன அவர்களின்**

தலைமையில்

**2018 ஒக்டோபர் 05 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு
மன்னார் நகர சபை விளையாட்டரங்கில் இடம்பெறும்.**



மைத்ரீ ஆட்சி
பேண்தகு யுகம்

சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்
ஜனாதிபதி செயலகம்

# குருப்பெயர்ச்சி 2018 பலன்கள்



4.10.2018 – 28.10.2019

குருபகவான்தெய்வீக அறிவுக்கும், வேதாந்த ஞானத்துக்கும் செல்வவளத்துக்கும் பொருள் சேமிப்புக்கும் காரணகர்த்தா. அந்த வகையிலே இன்று குருப்பெயர்ச்சி இடம்பெறுகிறது. வக்ர நிலாத்தி அடைகின்ற குருபகவான் துலாம் ராசியில் இருந்து விருச்சிக ராசிக்கு இடம்பெயர்கிறார். மேடம் முதல் மீனம் வரையான 12 ராசிகளுக்குமான குருப்பெயர்ச்சி பலன்களை இப்பகுதியில் நோக்குவோம்.




பிரச்சினைகளை சமாளிக்கும் மன தைரியம் கொண்ட நீங்கள், மனசாட்சிக்கு விரோதமாக எதையும் செய்யத் த்தயங்குவீர்கள். வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை அறிந்த நீங்கள், சோதனைகளையும் சாதனைகளாக மாற்றி முன்னேறத் துடிப்பவர்கள். இதுவரை உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் அமர்ந்து, ஓரளவுக்கு உங்களைச் சாதிக்க வைத்ததுடன், வசதி, வாய்ப்புகளையும் தந்த உங்கள் பாக்யாதிபதியாகிய குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 வரை உங்கள் ராசிக்கு 8ம் வீட்டில் மறைவதால் எதையும் சமாளிக்கும் சாமர்த்தியத்தையும், மனப்பக்குவத்தையும் தருவார். அலைச்சலுடன் ஆதாயமும் கிடைக்கும். பயணங்களும், தவிர்க்க முடியாத செலவுகளும் துரத்தும்.

மறைமுக எதிரிகளால் ஆதாயமடைவீர்கள். வேலைச்சுமையால் தூக்கம் குறையும். கனவுத் தொல்லைகளும் அவ்வப்போது வந்து நீங்கும். எல்லாப் பிரச்சினைகளுக்கும் மற்றவர்களை நீங்கள் காரணம் கூறுவது அவ்வளவு நல்லதல்ல. ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். சொத்துக்கான வரியை செலுத்தி சரியாகப் பராமரியுங்கள். வாகனத்துக்கான லைசன்ஸ், இன்ஸ்யூரன்ஸை குறிப்பிட்ட காலத்துக்குள் புதுப்பிக்கத் தவறாதீர்கள். அபராதம் கட்ட வேண்டி வரும். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். யாரை நம்புவது என்கிற குழப்பத்துக்கு ஆளாவீர்கள்.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்**

குருபகவான் 2ஆம் வீட்டை பார்ப்பதால் பணப்புழக்கம் கணிசமாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். அரசால் அனுகூலம் உண்டு. பூர்வீகச் சொத்து கைக்கு வரும். சுப நிகழ்ச்சிகளால் வீடுகளை கட்டும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். குரு உங்கள் சுக ஸ்தானத்தைப் பார்ப்பதால் தாயாரின் ஆரோக்கியம் சீராகும். அவருடனான மனத்தாங்கல் நீங்கும். தாய்வழிச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உறவினர், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்களுடைய படைப்புகள் தொலைக்காட்சி, வானொலி, செய்திதாள்களில் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். குரு 12ஆம் வீட்டை பார்ப்பதால் புகழ் பெற்ற புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். ஒரு சொத்தை விற்று மற்றொன்று வாங்குவீர்கள்.

**குருபகவானின் நட்சத்திரச் சஞ்சாரம்**

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் பாக்யவிரயாதிபதியான குருபகவான் தன் சாரமான விசாக நட்சத்திரத்தில் செல்வதால் அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக் கட்டும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். தந்தையார் ஆதரவாக இருப்பார். அவர்வழி உறவினர்களும் உதவி புரிவர். பிதுர்வழி சொத்து கைக்கு வரும். வழக்கு சாதகமாகும். புது வேலை கிடைக்கும். 21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்களின் ஜீவனாதிபதியும் லாபாதிபதியான சனிபகவானின் அனுஷ நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் வேலைச்சுமை, பணப்பற்றாக்குறை, இனந்தெரியாத கவலைகள், குடும்பத்தில் சலசலப்பு, உத்தியோகத்தில் எதிர்ப்புகள் வந்து செல்லும்.

வேற்றுமதத்தைச் சேர்ந்த நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். மூத்த சகோதரர்கள் உதவுவார்கள். 20.12.2018 முதல் 12.03.2019 வரை மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை உள்ள காலகட்டங்களில் உங்களின் சேவகாதிபதியும் சஷ்ட்மாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால் வீண் செலவுகள், சிறுசிறு விபத்துகள், உங்களைப் பற்றிய வதந்திகள், பழைய கடனை நினைத்து அச்சம், இளைய சகோதர வகையில் மனத்தாங்கல்கள் வந்து செல்லும். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்காதீர்கள்.

**குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்**

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்கு 9ம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூல நட்சத்திரத்தில் செல்வதால் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். பிதுர்வழிச் சொத்து கைக்கு வரும். தந்தையார் உறுதுணையாக இருப்பார். அவரின் உடல் நிலையும் சீராகும்.

**குருபகவானின் வக்ர சஞ்சாரம்**

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூல நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் செல்வதால் அக்காலக்கட்டத்தில் அரைகுறையாக நின்ற வேலைகள் முடிவடையும். குடும்பத்தில் ஓரளவு நிம்மதி உண்டு. பழைய கடனில் ஒரு பகுதியை செலுத்துவதற்கு உதவிகள் கிடைக்கும். குழந்தைப் பாக்யம் உண்டு. மனைவி வழியில் இருந்த மோதல்கள் விலகும். அரைகுறையாக நின்ற வீடு கட்டும் பணியை தொடங்குவீர்கள்.

வியாபாரத்தில் பழைய தவறுகள் நிகழ்ந்து விடாத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். சிறுசிறு நட்டங்கள் வந்துப் போகும். தரமான பொருள்களை விற்பனை செய்வதன் மூலமாக புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். வேலையாட்களுக்கு எவ்வளவு உதவினாலும் நன்றி மறந்த நிலையில் நடந்து கொள்வார்கள். அதை நினைத்து வருத்தப்படுவீர்கள். கடையை அவசரப்பட்டு வேறு இடத்துக்கு மாற்ற வேண்டாம். இருக்கின்ற இடத்திலேயே தொடர்வது நல்லது. இரும்பு, கடல் உணவுகள், ஹோட்டல், இரசாயன வகைகள் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி வகைகளால் இலாபம் அதிகரிக்கும். பங்குதாரர்களால் பிரச்சினைகள் வரும்.




பெருந்தன்மையும், சகிப்புத் தன்மையும் கொண்ட நீங்கள், இதமான பேச்சால் எல்லோரையும் கவர்ந்திழுப்பவர்கள். தன்கையே தனக்குதவி என்று வாழும் நீங்கள், கடின உழைப்பால் படிப்படியாக முன்னேறி வாழ்வின் சிகரத்தை எட்டிப்பிடிப்பவர்கள். இதுவரை ஆறாம் வீட்டில் அமர்ந்து உங்களை அவமானப்படுத்திய குருபகவான் பல கஷ்ட, நஷ்டங்களைத் தந்து, மறைமுக எதிர்ப்புகளால் உங்களை திணறடித்து, கடன் பிரச்சினைகளால் தூக்கத்தைக் குறைய வைத்த குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 வரை ராசிக்கு 7ஆம் வீட்டில் அமர்ந்து உங்களை நேருக்கு நேர் பார்க்க இருப்பதால் எதிலும் உங்கள் கை ஓங்கும். வாழ்க்கையின் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும்.

சிலர் வங்கி கடனுதவி கிடைத்து புது வீடு கட்டி குடிபுகுவீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் நல்ல விதத்தில் முடிவடையும். மனைவி உங்களுடைய புது முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பார். அவரின் ஆரோக்கியம் சீராகும். மனைவி வழி உறவினர்களுடன் இருந்த மோதல்களும் விலகும்.

தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மகளின் திருமணத்தை எல்லோரும் மெச்சும் படி நடத்துவீர்கள். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். அவருக்கும் எதிர்பார்த்த குடும்பத்திலிருந்த நல்ல பெண் அமைவார்.

இளைய சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். உறவினர், நண்பர்கள் வீட்டு நிகழ்வுகளை நீங்களே செலவு செய்து முன்னின்று நடத்துவீர்கள். புதுப்பதவிக்கு உங்களுடைய பெயர் பரிசீலிக்கப்படும்.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்**

குருபகவான் உங்களின் லாப வீட்டைப் பார்ப்பதால் பெரிய திட்டங்கள் கைக்கூடும். மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். சமுதாயத்தில் மதிக்கத்தகுந்த அளவுக்குப் பதவிகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. புண்ணியத் தலங்கள் சென்று வருவீர்கள். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். மூத்த சகோதரங்களுடன் இருந்த பிணக்குகள் நீங்கும். உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டை குரு பார்ப்பதால் சவால்களில் வெற்றி பெறுவீர்கள். பாதிப் பணம் தந்து முடிக்கப்படாமல் இருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப்பதிவு செய்வீர்கள். நவீன ரக வாகனம் வாங்குவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். பஜனைகளில் கலந்து கொள்வீர்கள்.

**குருபகவானின் நட்சத்திரச் சஞ்சாரம்**

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் அஷ்டமலாபாதிபதியான குருபகவான் விசாக நட்சத்திரத்தில் செல்வதால் வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. எதிர்மறை எண்ணங்கள் தலைதூக்கும். மூத்த சகோதர வகையில் சச்சரவு வரும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். புதுப் பதவிகள், பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது. 21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்களின் பாக்யாதிபதியும் ஜீவனாதிபதியுமான சனிபகவானின் அனுஷ நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் ஆரோக்கியம் சீராகும். சொந்தமாக வீடு கட்டுவீர்கள்.

வேலை கிடைக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். கல்யாணம் கூடி வரும். புதுத் தொழில் தொடங்குவீர்கள். 20.12.2018 முதல் 12.03.2019 வரை மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை உங்களின் தனபூர்வபுண்ணியாதிபதியான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால் தடைப்பட்ட வேலைகள் முடியும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பெரியோர்களின் அறிமுகம் கிடைக்கும். குழந்தைப் பாக்கியம் உண்டாகும். பிள்ளைகளால் சொந்தபந்தங்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். பூர்வீகச் சொத்து கைக்கு வரும்.

**குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்**

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்கு 8ஆம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால் மறைமுக எதிர்ப்பு, பணப்பற்றாக்குறை, இனந்தெரியாத கவலைகள் வந்து செல்லும்.

**குருபகவானின் வக்ர சஞ்சாரம்**

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூலம் நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் செல்வதால் இக்காலக்கட்டத்தில் மனக்குழப்பம், பூர்வீக சொத்துப் பிரச்சினை, வீண் மனக்குழப்பம் ஏற்படும். பிள்ளைகளை அன்பாக நடத்துங்கள். உங்களுடைய கனவுகளை அவர்கள் மீது திணிக்க வேண்டாம். கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். கோயில் கும்பாபிஷேகம் மற்றும் கல்யாண விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். மனைவி உங்களைப் புரிந்து கொள்வார். புது வாகனம் வாங்குவீர்கள்.

(நாளை)

## மணமகள் தேவை

1978 ஆம் ஆண்டு பிறந்த 8இல் சூரியன். செவ்வாய், கிரகபாவம் 45 உடைய விசாகம் நட்சத்திரம், 4ஆம் பாதம் கொண்ட அரச உத்தியோகத்தருக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை. **- 076 192 7030**

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ். நகரப் பகுதியில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு 50 வயதுக்குட்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**- 077 608 0938, 076 120 2765**

## தவறவிடப்பட்டுள்ளது

**மொஹமட் கலீல் பாத்திமா ரினோஷா** என்பவரது ஆள் அடையாள அட்டை **(975233340V)** NIC கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். 078 460 8427 **S.சதாசிவம், திருவீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.**

## இன்று முதல்

A Cinema Entertainments (Pvt) Ltd Release




வடக்கு, கிழக்கு

| | | |
|---|---|---|
| Majestic Jaffna 10.30/1.30/4.15/7.30 pm | | |
| Raja Jaffna 10.30/2.30/6.30 | Saru Cinema Point Pedro 10.30/2.30/6.30 | Shanthi Batticaloa 10.30/2.30/6.30/9.30 |
| Vijaya Batticaloa 10.30/2.30/6.30 | G.K.Cinemax Kalmunai 10.30/2.30/6.30 | Vasanthi Vavunia 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu 10.30/2.30/6.30 | Nelson Trinco 6.30 / 9.30 | SELLAM PREMIER Chenkalady 10.00/2.00/6.00/ 9.45 |
| Bala Chavakachcheri 10.30/2.30/6.30 | SARASWATHY Trinco 10.30/6.30 | |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1979, ரேவதி, 3இல் செவ், சூரி, புதன் குற்றமில்லை. MBA அரச தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சகல விவரங்களையும் Viber க்கு படத்துடன் அனுப்பிவைக்கவும்.

**Viber - 076 702 1622, T.P. - 076 827 7033**

உதயன்
விளம்பரத்தொடர்புகளுக்கு
advt@uthayan.com

## மரண அறிவித்தல்

### திருமதி கண்ணம்மா கந்தையா



187/ 2, மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், ஓட்டு மடம் செழியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கண்ணம்மா நேற்று (03.10.2018) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னாச்சி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புமனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சின்னமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவராசா (ஜேர்மனி), ஆனந்தராசா ஆகியோரின் அன்புத்தாயும் வசந்தி (ஜேர்மனி), மகாராணி ஆகியோரின் அன்புமாமியும் ஜீனுகா, செந்தூரன் (ஜேர்மனி), டக்சாயினி, பவதர்சன், குணதர்சன், பவசாயினி, துஸ்யந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2018) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

## பெயர் மாற்றம்

பருத்தித்துறை, தும்பளை கிழக்கு என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **சசிகரன் சச்பிரியா** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **சசிகரன் சசிப்பிரியா** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன் படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயகசோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகிறேன். **சசிகரன் சசிப்பிரியா**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
13 . 04 . 1944

மறைவு
03 . 10 . 2018

### திருமதி இராசமலர் நடராஜா

தோற்றமும் மறைவும் இயற்கை வகுத்த
நியதி யென்றாலும் இன்பமும் துன்பமும்
வாழ்வின் மேடையில் அரங்கேறும் நாடகமானாலும்
பார்த்துப் பழகிய கண்களும்
பேசிப் பழகிய வாயும் கேட்டு மகிழ்ந்த காதுகளும்
நினைவுகள் பதித்த நெஞ்சும்
ஐயகோ அன்னாரின் பிரிவுத்துயரால்
தவிக்கிறதே குடும்பம் ! காலமே
விரைந்து வந்து அவர்களுக்கு ஆறுதல் தாராயோ!

**அண்ணா தொழிலக ஊழியர்கள், இணுவில்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ
20 . 06 . 1976

கண் நெகிழ
14 . 10 . 2017

அமரர் செல்வி

### இராசையா சத்தியபாமினி (சத்தியா)

திதி: அபரபக்க தசமி (04.10.2018)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்திட்டாலும்
ஆறவில்லை எம் துயரம் எம் அன்பு மகளே!
புன்னகை பூத்த முகம் மறைந்து போனதெங்கே?
புவியிலே எங்கள் சோகம் ஆறவில்லையே - அம்மா
காற்றிலே ஆடும் உந்தன் கருங்கூந்தல் அழகும்
கனிவான உன் பார்வையும் மறைந்து போனதெங்கே?
மீண்டும் ஒருமுறை வந்து பிறந்திடம்மா

எமது அன்பு மகளின் ஆத்மா இறைவன் திருவடிகளில் சாந்திபெற புத்தூர் தேரம்பிள்ளை சித்தி விநாயகப் பெருமானின் பாதம் பணிகின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (cs.20300)

குடும்பத்தினர்




## 06ஆம் மாத நினைவலைகள்...



அமரர் தேவராசா

### பாலகிருஷ்ணன் (பசுவா)

தோற்றம்
08.01.1984

மறைவு
10.04.2018

கடந்த 10.04.2018 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பச் செல்வன்
**தேவராசா பாலகிருஷ்ணன்**
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
இன்று (04.10.2018) வியாழக்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில் அவரது
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்களும் வருகைதந்து
ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும்
அதனைத்தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

முதலியார் ஒழுங்கை,
கெருடாவில் சாவகச்சேரி

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### பத்மநாதன் ஆதவன்



கோப்பாயைப் பிறப்பிட மாகவும் இல. 220, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட பத்மநாதன் ஆதவன் கடந்த (02.10.2018) செவ்வாய்க்கிழமை இறை பதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரி யைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 220, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: க.பத்மநாதன் (பெற்றி) (தந்தை - உடுவில்)

---

பிறப்பு 28 . 12 . 1952



இறப்பு 28 . 09 . 2018

### திருமதி வசந்தராணி காளிங்கராசா

நெல்லியோடை, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நியூ சிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தராணி காளிங்க ராசா 28.09.2018 வெள்ளிக் கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சாந்தி தம்பதியரின் அன்பு மகளும், காளிங்கராசாவின் அன்பு மனைவியும், முரளி, வேந்தன், தர்சன், வவா, சுட்டா, செல்வி, வினோத், சிந்து, ஜனா, அர விந்தன், உதயந்தி, விஜயந்தி, நிவேதன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.10.2018) வியாழக்கிழமை நியூசிலாந்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(c7956)

தகவல்: குடும்பத்தினர்

---

## 31 ஆம் நாள் விழி நீர் அஞ்சலி




எமது கிராம உத்தியோகஸ்தர்
திரு. சசிகாந் அவர்களின்
அன்புத்தந்தை
அமரர் மாப்பாணபிள்ளை
யோகீஸ்வரதேவன் (Dr.தேவர்)

அவர்களுக்கு 31 ஆம் நாளாகிய இன்று (04.10.2018) வியாழக்கிழமை அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வதிரி புலவராவோடை கிராம அபிவிருத்தி சங்கம்,
நெல்லியடி வடக்கு, கமக்கார அமைப்பு
ஆலங்கட்டை மயான பராமரிப்பு சபை.

---

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 09.06.1935
உதிர்வு 02.10.2018

எமது கல்வி நிறுவனத்தின்
கணித பாட ஆசிரியர்
அசோகன்
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி
விசாலாட்சி பரமானந்தம்

நேற்று முன்தினம் (02.10.2018) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

துளிர் கல்வி நிலையம், கொடிகாமம்.

---

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டு முடிவுகள்

புனித அந்தோனியார் ஆலயம் தொண்டமான் நகர், கிளிநொச்சி.
கிளிநொச்சி 155 ஆம் கட்டை புனித அந்தோனியார் ஆலய கட்டுமான பணிக்காக கடந்த 30.09.2018 ஆம் திகதி அன்று நடைபெற்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கான முடிவுகள்.

| | |
|---|---|
| **முதலாம் இடம்** | 2891 கொக்குவில் |
| **இரண்டாம் இடம்** | 0134 கிளிநொச்சி |
| **மூன்றாம் இடம்** | 4015 கிளிநொச்சி |

**ஆறுதல் பரிசுகள்**

| | |
|---|---|
| 2346 பருத்தித்துறை | 4377 கிளிநொச்சி |
| 2107 கிளிநொச்சி | 2436 பலாலி |
| 4514 கிளிநொச்சி | 2862 குருநகர் |
| 4066 பாசையூர் | 2505 கிளிநொச்சி |
| 2380 பருத்தித்துறை | 2457 குடத்தனை |

*இச்சீட்டிழுப்புக்கு ஆதரவுதந்த அனைவருக்கும் நன்றிகள்.*
(புனித அந்தோனியார் ஆலய நிர்வாகிகள்)

---

வடக்கு...

அமர்வு சம்பிரதாய பூர்வ அமர்வாகவே நடைபெறவுள்ளது. வடக்கு மாகாண சபை யின் 133 ஆவது அமர்வு, கைதடியி லுள்ள பேரவைச் செயலகத்தில் இன்று நடைபெறவுள்ளது. இன்றைய அமர்வி லேயே, தீர்மான வரை வுகள், வாய்மூல வினாக்கள் என்பன எடுத்துக் கொள்ளப்பட வுள்ளன. மேலும் குறைநிரப்பு பாதீடும் இன்றைய அமர்வில் சமர்பிக்கப்படவுள் ளது.

வடக்கு மாகாண சபை யில், விவாதங்கள், கேள்விகள் சமர்பித் தல் என்பன இன் றைய அமர்வுடன் நிறைவுபெறும். எதிர் வரும் 23ஆம் திகதி சம்பிரதாய அமர்வே நடைபெறும்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடை பெற்றது. மாகாணச பையின் முதலாவது அமர்வு அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி இடம் பெற்றது. எதிர்வரும் 25ஆம் திகதியுடன் மாகாணசபையின் பதவிக் காலம் நிறை வுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

---

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள Hotel (உணவகம் ஒன்றிற்கு)

- காசாளர்
- உணவுபரிமாறுபவர்
- ரொட்டி மேக்கர்
- ரைஸ், கொத்து போடுபவர்

போன்றவற்றுக்கு வேலையாள்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
(மது பழக்கம் அற்றவர்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு - 077 330 7073

---

# தொழில்சார் கற்கைகள் நிறுவனம்

## திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

### உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கும் நூல் வெளியீடும்

- இடம் - TILKO - JAFFNA

(யாழ். பிரதம தபாலகம் அருகில்)

- திகதி - 07.10.2018
- நேரம் - 9.30 am - 11.30 am




★ பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குறுங்கால பட்டதாரி கற்கைகள் பட்ட மேற் படிப்புக்கள் தொடர்பான விளக்கங்கள்.
★ வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
★ மாணவர்களது ஆய்வுக்கட்டுரைகள் நூல் வெளியீடு என்பன இடம் பெறும்.

குறிப்பு - மாணவர்கள், உத்தியோகத்தர்கள் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை இலவசமாக முன்பதிவு செய்து கொள்ளமுடியும் மேலதிக விவரங்களுடன்.

தொடர்புகளுக்கு - 076 292 4387

முகாமைத்துவ நிர்வாக சபை தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 021 450 8489 Email - degreeinfo08@gmail.com

# துன்னாலையில் இருவர் கைது

யாழ்ப்பாணம் ஒக் 4

துன்னாலை பகுதியில் அனுமதியில்லாமல் மாட்டினை இறைச்சிக்காக வெட்டிய இரண்டு சந்தேகநபர்களை நெல்லியடி பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். துன்னாலை பகுதியில் உள்ள காணியொன்றில் ஐந்து வயது மதிக்கத்தக்க மாடொன்றினைச் சிலர் இறைச்சிக்காக வெட்டினர். இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. மாடு வெட்டி கொண்டிருக்கும்போது குறித்த பகுதியில் நுழைந்த பொலிஸார் அவர்களைக் கைதுசெய்தனர்.

மாடு வெட்டுவதற்கு அவர்கள் அனுமதி பெறவில்லை என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் இன்று நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப் பட்டது. (உ-7.26)

# நாட்டின் பொருளாதார நிலை அச்சம் வேண்டாம் மக்களே!

## கூறுகிறார் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி

கொழும்பு, ஒக். 4

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பில் மக்கள் அச்சமடைய வேண்டியதில்லை. தற்போது ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள நாணயமாற்று விகித சிக்கல் நிலை மற்றும் கடன் நிலை என்பவற்றை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கியினால் செயற்திறனான வகையில் முன்னெடுக்க முடியும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருளாதாரத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாணயமாற்று விகிதம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் போதிய தெளிவற்ற நிலையும் காணப்படுகின்றது.

நான் சுமார் 20 நாடுகளில் பணியாற்றியிருக்கின்றேன். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தால் நாட்டின் பொருளாதார நிலை முற்றாக தளம்பலடையும் என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால் எமது சேமிப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் என்பன அனுகூலமான நிலையில் உள்ளன. இத்தகையதொரு நிலையில் பொருளாதாரம் மோசமடைந்துள்ளது என்று எவ்வாறு கூற முடியும் என்று கேள்வி எழுப்பினார். (5)

## பெருங்குற்றப்...

நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைவாக இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தக நிலையத்தில் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவு போயுள்ளது. கடை உரிமையாளர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். அங்கு கடமையிலிருந்த சார்ஜன் தர அதிகாரி, பதிவேட்டுப் புத்தகத்தில் வெளியில் செல்வதற்கான பதிவுகள் எதனையும் மேற்கொள்ளாது சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளார். சம்பவ இடத்தில் விவரங்களை தனது குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

ஆனால் குற்றப் பதிவு புத்தகத்தில், தனது குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்ததை அவர் ஒட்டவில்லை. 26ஆம் திகதியே அதனை ஒட்டியுள்ளார்.

இரண்டு நாள்களாக விசாரணை செய்யப்படவில்லை என்பதும், கடை உரிமையாளர் விடயத்தை வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார். அவரின் பணிப்புக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. விசாரணை இடம்பெற்றது. விசாரணையின்போது, மேற்படி விடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே, பெருங்குற்றப் பிரிவினருக்கு கூண்டோடு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதற்கு முன்னரும் இவ்வாறான தவறுகள் இடம்பெற்றனவா என்பதை ஆராய யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (5.26)

## பாலியாற்று...

பையடுத்து கைவிடப்பட்டது. வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தின் ஊடாக, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் பிரேரிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையின், கீழ்ப்பாலியாற்று வடிநிலத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளும் திட்டம் தொடர்பில் கடந்த மாதம் 2ஆம் திகதி தேசிய வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. மாகாண நீர்பாசனத் திணைக்களம், வவுனிக் குளம் திட்டத்தின் கீழ்ப் பாலியாற்று வடிநிலத்தில் அண்ணளவாக 165 சதுரகிலோமீற்றர் அளவுடைய நீரேந்துப் பகுதியை குடாநாட்டுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்குரிய சாத்தியமான பகுதியாக அடையாளம் கண்டுள்ளது.

மாகாண நீர்பாசனத் திணைக்களத்தினால் நடத்தப்பட் ஆரம்பக்கட்ட சாத்தியப்பாடு ஆய்வின் அடிப்படையில், மன்னார் மாவட்டத்தின் பெரும்பரப்புக்குளத்தில் அண்ணளவாக 37 எம்.சி.எம். கொள்ளவுடைய நீர்த்தேக்கத்தை அமைப்பதன் மூலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்த் தேவையை அடையமுடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாக வைத்து, தீர்மான வரைவு வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் சமர்பிக்கப்படவுள்ளது. (5)

## ஏனையோருக்கு...

நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாகாண முதலமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகனச் சலுகையை விடக் குறைவான சலுகை வழங்கப்பட்டதால், வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அதை ஏற்க மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, அமைச்சர் பைஸர் முஸ்தபா, அனைத்து மாகாண முதலமைச்சர்களுக்கும் வழங்கப்பட்ட சலுகை போன்றே, வடமாகாண முதலமைச்சருக்கும் வாகன சலுகை வழங்கப்படவேண்டும் என்ற அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையை அமைச்சரவை ஏற்றுக்கொண்ட போதிலும், நிதியமைச்சர் மங்கள சமரவீர, வாகனக் கொள்வனவு தொடர்பான தன்னுடைய அறிக்கையை மீறும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கருத்தை வலியுறுத்தினார். அமைச்சர் மங்களவின் இந்த எதிர்ப்பையடுத்து, வடமாகாண முதலமைச்சருக்கான தீர்வையற்ற வாகனக் கோரிக்கையை, அமைச்சரவை நிராகரித்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் எதிர்வரும் 25ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## விமல்...

சிங்கள ஊடகவியலாளர்களுடன் வருகை தந்ததால் அங்கு சிறிது நேரம் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முண்ணணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்ம உதயசாந்த, ஜயந்த சமரவீர, ஊடகபேச்சளார் முகமட் முசம்மில் உள்ளிட்ட குழுவினர் வெடுக்குநாரி மலையை நேற்று பார்வையிட்டனர். 3 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிங்கள ஊடகவியலாளர்கள் என 10க்கும் மேற்பட்டவர்கள் வருகை தந்தனர்.

இவர்களின் வருகையை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்களும் அங்கு திரண்டனர். சர்ச்சைக்குரிய இடத்திற்கான அவர்களது வருகையின் நோக்கம் குறித்து விசாரித்துள்ளனர். அதற்கு அவர்கள், இந்த இடம் பௌத்த மத்ததிற்குரியது, குறித்த பகுதிக்கு பிக்குமார் சென்று தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தடை ஏற்படுத்தப்படுவதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்காகவே வந்துள்ளோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து தமிழ் இளைஞர்கள் அவர்களுடன் முரண்பட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களுடன் கூட வந்தவர்கைளையும் வாகனத்தில் ஏற்றிப் பாதுகாப்பாக அனுப்பிவைத்தனர்.

வருகை தந்தவர்கள் வெடுக்குநாரி மலையின் சில பகுதிகளைப் பார்வையிட்டபோதும் உச்சிக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுடன் வருகைதந்திருந்த பிக்குகள் வாகனத்தில் இருந்து கீழே இறங்கவில்லை. இந்தக் குழுவினர் சர்ச்சைக்குரிய மற்றொரு இடமான மத்தீவு குருந்தூர் மலைக்குச் சென்று பார்வையிட்ட பின்னரே வெடுக்குநாரி மலைக்கு வந்தனர் என்று சாட்சிகள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகையின்போது, இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் இந்த கோயிலை இந்த பகுதி மக்கள் வைத்திருக்கின்றனர், இங்குள்ள கல்வெட்டுக்கள் அனைத்தும் தேவநம்பிய தீஸன் காலத்தைச் சேர்ந்தது. 1977ஆம் ஆண்டு இந்த மலையில் புத்த விகாரை ஒன்று இருந்தது. இந்த விகாரையைப் பயங்கரவாதிகள் அழித்துள்ளனர். இந்த மலை முற்றுமுழுதாகப் பௌத்த மக்களுக்கே சொந்தம் இந்த மலைக்கு சிங்கள பெயர் ஒன்று இருக்கின்றது. நாங்கள ஆய்வு செய்ய மக்கள் தடையாக இருக்கின்றனர் எனத் தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பாகத் தாம் நாடாளுமன்றில் பேச இருப்பதாகவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7.110)

## 7 லட்சத்துக்கு...

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். 28 ஆவது தேசிய இணக்க தினம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இற்றைக்கு 28 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இணக்க முறைமை ஊடாக பெரிய சேவை இடம்பெற்றுவருவது தொடர்பில் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில் நாட்டிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நீதிமன்றத்தை நாடவேண்டி ஏற்பட்டால் சமூகத்துக்குள் எவ்வாறான நிலமை ஏற்படும் என்பதை நினைத்தும் பார்க்க முடியாது.

இன்று நீதிமன்றங்களில் 7 இலட்சத்து 50 ஆயிரம் வழக்குகள் விசாரிக்கப்படாமல் தேங்கியுள்ளன. இதுதொடர்பாக நாங்கள் கவனம் செலுத்தவேண்டும். வழக்குகள் பிற்போடப்படுவது தொடர்பில் எங்களால் மகிழ்ச்சியடைய முடியாது என்றார். (5)

## சிங்களக்...

அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தவும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண அரச தலைவர் சிறப்புச் செயலணியின் கூட்டம் அரச தலைவர் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள், மகாவலி எல் வலயத்தினால் அபகரிக்கப்பட்டு பெரும்பான்மையின மக்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்த விடயத்தை கடந்த கூட்டத்தில் சுட்டிக் காட்டியபோது, அப்படி எதுவும் நடக்கவில்லை என்று நீங்கள் (அரச தலைவர்) தெரிவித்திருந்தீர்கள். ஆனால் நீங்கள் பொறுப்பாக இருக்கின்ற மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அதற்கான ஆதாரத்தையும் காண்பித்தார்.

இதன்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. நாடாளுமன்ற உறுப்பினர் கூறுவது சரி என்றும், தனக்குத் தெரியாமல் இது வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்தச் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், எந்தவொரு காரணத்துக்காகவும் அனுமதிப் பத்திரம் வழங்கப்படக் கூடாது என்றும் அரச தலைவர் உடனடியாகவே பணிப்புரை விடுத்துள்ளார்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினாலேயே காணி உரிமப் பத்திரம் வழங்கவேண்டிய தேவை ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த வழக்கு மீளப் பெறப்பட வேண்டும் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி எல் வலயம் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி முடிவு எடுக்கும் வரையில் எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கவேண்டாம் என்று அரசதலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (5.105)

## 48 மணித்...

வர்கள் அரச நிலத்தை அனுமதியின்றி ஆக்கிரமித்து வாடி அமைத்துத் தங்கியிருந்தனர். கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற எல்லைக்குள் வாடி அமைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடலட்டை பிடிப்போரை வெளியேறுமாறு நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

வடமராட்சி கிழக்குப் பகுதியின் பருத்தித்துறை நீதிமன்ற எல்லைப்பரப்புக்குள் கடலட்டை பிடிப்பில் ஈடுபடும் பிற மாவட்ட மீனவர்கள் தொடர்ந்தும் அரச காணியில் அனுமதியின்றி தங்கியுள்ளனர். இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஏற்கனவே ஒரு தடவை அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்த நிலையில் நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் மேற்கு பகுதியில் இரண்டாவது அறிவித்தல் நேற்று ஒட்டப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் கனகசபாபதி கனகேஸ்வரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது,

அரச காணியில் அத்துமீறி குடியிருப்பதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் வகையில் முன் அறிவித்தலாகவும் அவர்களிற்கான இறுதிச் சந்தர்ப்பமாகவும் அறிவுறுத்தல் ஒட்டப்பட்டுள்ளது. 48 மணித்தியாலம் வெள்ளிக்கிழமையுடன் முடிவுறுகின்றபோதும் அங்கிருந்து அவர்கள் வெளியேறாத சந்தர்ப்பத்தில் எதிர்வரும் திங்கட் கிழமை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் - என்றார். (5.105)

## காணி...

அரச தலைவர் செயலகத்தில், வடக்கு கிழக்கு மாகாண அரச தலைவர் அபிவிருத்திச் செயலணியின் கூட்டம் இடம்பெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், செயலணியின் கடந்த கூட்டத்தில் என்னால் பல விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டன. அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக பதிலளிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலங்களை விடுவிக்குமாறு கோரி மக்கள் மேற்கொள்ளும் போராட்ட நிலம் விடுவிக்கப்படும் என்று நீங்கள் பதிலளித்திருந்தீர்கள். இருப்பினும் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை. அதேபோன்று வடக்கின் ஏனைய மாவட்டங்களில் உள்ள நிலங்கள் குறிப்பாக பாடசாலைகள் மற்றும் பண்ணைகள் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக கூறப்பட்டது. கடந்த கூட்டத்தின் பின்னர் எந்த முன்னேற்றமும் இடம்பெறவில்லை. மாறாக திணைக்களங்களின் பெயரில் நில அபகரிப்புத் தொடர்வதே பதிவு செய்யப்படுகின்றது என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், காணி விடுவிப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினர்.

இதன்போது பதிலளித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மக்களின் காணிகள் மக்களுக்குரியவை. அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்தச் செயன்முறை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்கள் தலைமையில், அமைச்சு அதிகாரிகள், அரச தலைவர் செயலக அதிகாரிகள் உள்ளடக்கிய குழு, காணி விடுவிப்புத் தொடர்பில் ஆராயும் - என்றார். (5.105)

## புலமைப்பரிசில்...

கடந்த ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி நடைபெற்றது. 3 இலட்சத்து 50 ஆயிரத்து 326 மாணவர்கள் தோற்றியிருந்தனர். (5)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம். ஒக். 4

**கால்ப்பந்தாட்டம்**

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கரப்பந்தாட்டம்**

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




# யங்ஹென்றிஸ் அணி இறுதிக்குச் சென்றது

யாழ்ப்பாணம். ஒக். 4

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வடக்கின் கில்லாடி வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல் பாதியில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவுசெய்தன. இரண்டாம் பாதியில் கோலெதுவும் பதிவாகவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் இளவாலை யங் ஹென்றிஸ் அணி வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# வென்றது விண்மீன் அணி

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பலாலி வீண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ரேஞ்சர்ஸ் அசத்தல்!

யாழ்ப்பாணம், ஒக். 4

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்று கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விளான் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ரேஞ்சர்ஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# டயமன்ஸ் முன்னேற்றம் கண்டது

யாழ்ப்பாணம். ஒக். 4

ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்தது டயமன்ஸ் அணி. ஆதிசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய டயமன்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. (ம-23)





# மனோகரா முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 4

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது. அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-23)

# கிரிக்கெட்டைப் பொறுத்தவரை தலைவருக்குத்தான் அதிகாரம்!

## பயிற்சியாளர் இரண்டாம் பட்சம்தான் என்கிறார் முன்னாள் வீரர் கங்குலி




"கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் அணித் தலைவருக்கே அதிகாரங்கள் அனைத்தும் உள்ளன. பயிற்சியாளர்கள் இரண்டாவது பட்சத்திலேயே இருக்க வேண்டும். ஆனால் சில பயிற்சியாளர்கள் அணித் தலைவருக்குரிய அதிகாரங்களைப் பறித்தெடுக்க முயல்கின்றனர்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.

இந்திய அணியில் அணித் தலைவர் கோக்லிக்கு உள்ள அதிகாரங்களை தலைமைப் பயிற்சியாளர் ஆக்கிரமிக்கிறார். வீரர்களின் அணித் தெரிவில் தலையிடுகிறார். என்ற பொதுவான கருத்துக் கணிப்புக்கள் நிலவுகின்ற நிலையில் கங்குலி இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு கிரிக்கெட் அணிக்கும் பயிற்சியாளர் என்பவர் மிகவும் முக்கியமானவர்தான். ஆனால். கிரிக்கெட் என்பது கால்பந்து விளையாட்டு அல்ல என்பதை ஒவ்வொரு பயிற்சியாளரும் புரிந்துகொள்ள வேண்டும். கால்பந்துப் போட்டியில் தலைவரை செயற்பட விடாமல், பயிற்சியாளர் களத்தில் இருந்துகொண்டே வழிமுறைகளையும், உத்தரவுகளையும் பிறப்பித்துக்கொண்டே இருப்பார். அணித் தலைவரை சுயமாக எந்தவிதமான முடிவும் எடுக்கவிட மாட்டார்கள். அதுபோல கிரிக்கெட் விளையாட்டிலும் செய்யக்கூடாது. ஆனால், எனக்குத் தெரிந்து ஏராளமான கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர்கள் கால்பந்து அணியைப் போல் கிரிக்கெட் அணியை நடத்தி வருகிறார்கள். கால்பந்து பயிற்சியாளர்கள் பெர்குசன்ஸ், மோரின்ஹோ, சிடேன் ஆகியோரைப் பார்த்து. கிரிக்கெட் விளையாட்டும் கால்பந்துபோல் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதுபோல் நடத்தப்பட வேண்டும் என விரும்புகிறார்கள்.

கிரிக்கெட் என்பது தலைவர்களின் விளையாட்டு. தலைவர் களத்தில் இறங்கிச் சுயமாகச் சிந்தித்து. சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுத்து விளையாடும் அற்புதமான விளையாட்டு. ஆனால். இதில் பயிற்சியாளர்கள் தலைவரின் அதிகாரத்தை. பதவியை ஆக்கிரமிக்க நினைக்கிறார்கள். இது நடக்கக்கூடாது. நான் இந்திய அணியின் தலைவருக்கு மட்டுமல்ல, அனைத்து அணியின் தலைவர்களுக்கும் கூற விரும்புவது. உங்களுடைய அணியில் உங்களைக் காட்டிலும் சிறந்த புத்திசாலித்தனமான வீரர்கள் இருக்கலாம். நீங்கள் கூட சிறந்த தலைவராக இருக்க அந்த நேரத்தில் தவறிவிடலாம், சில நேரங்களில் அந்த வீரர்கள் உங்களைக் காட்டிலும் நல்ல யுத்திகளைக் கொடுப்பார்கள். அதை 'ஈகோ' பார்த்துப் பின்பற்றாமல் இருந்துவிடக்கூடாது - என்றார். (ம)




## விமர்சனங்களை பொருட்படுத்தேன்

### ரவி சாஸ்திரி சொல்கிறார்

"என்னைப்பற்றி எழும் விமர்சனங்களைத் தூக்கிக் குப்பையில் போடுங்கள். அவற்றை நான் பொருட்படுத்துவதேயில்லை" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி.

இங்கிலாந்துக்கு எதிராக இந்திய அணி அடைந்த படுதோல்வியைத் தொடர்ந்து தலைமைப் பயிற்சியாளர் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நான் இப்போது நன்றாகத் தூங்குகிறேன். எனக்கு எந்தவிதமான கவலையும் இல்லை. நீங்கள் ஏதாவது சில செய்தித் தாள்களைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்து அவர் இப்படிப் பேசினார். இவர் இப்படி விமர்சித்தார். நீங்கள் படித்தீர்களா என்று கேட்கிறீர்கள். எனக்குத் தூங்குவதற்கு மட்டுமே நேரம் இருக்கிறது. இதுபோன்று என்னைப்பற்றி பேசி வரும் செய்திகளைப் படிக்க நேரம் இல்லை.

என்னைப் பற்றி பேசுபவர்களின் பேச்சையெல்லாம் குப்பையில் போடுங்கள். நீங்கள் உங்கள் மீது நம்பிக்கையாக இருந்தால், யார் என்ன சொன்னாலும் அதைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. உங்கள் வேலையை 100 சதவீதம் சரியாகச் செய்தாலே போதுமானது. என்னைப் பற்றி சிலர் பேசுவதையெல்லாம் நான் கவலைப்படுவதில்லை. அப்படி நான் கவலைப்படத் தொடங்கினால், நான் உருக்குலைந்து உட்கார்ந்துவிடுவேன். அதனால், அதுபோன்று பேசுபவர்களின் பேச்சையெல்லாம் பொருட்டாக மதிப்பதில்லை.

ஆசியக் கிண்ணத் தொடரில் விராட் கோக்லி இல்லாதது குறித்தும் விவாதம் ஓடுகிறது. விராட் கோக்லி என்ன சுமை இழுக்கும் மாடு என நினைத்தீர்களா? அவருக்கும் ஓய்வு தேவை. ஓய்வில்லாமல் தொடர்ந்து அவர் விளையாடி வருகிறார். அவர் களத்தில் விளையாடினால், குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறார் என்பது அனைவருக்கும் தெரியும். அப்படியென்றால், அதற்கு ஏற்றால்போல் மனதீரியான ஓய்வும் அவசியம்தானே. அதனால்தான் நான் அவருக்கு ஓய்வு கொடுத்தேன். இந்த ஓய்வுக்குப் பின் மனதளவிலும், உடலளவிலும் புத்துணர்ச்சியுடன் வருவார்" என்று ரவிசாஸ்திரி மேலும் தெரிவித்தார். (ம)

# டோனிக்கு அழுத்தம் கொடுக்காதீர்கள் அவர் விருப்பம்போல் விளையாடட்டும்!

## கும்ளே வலியுறுத்தல்

இந்திய அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரரான டோனிக்கு நெடுக்கடியையும், அழுத்தத்தையும் எவரும் கொடுக்கக்கூடாது என்று கோரிக்கையை முன்வைத்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கும்ளே. ஆசியக் கிண்ணத் தொடரில் டோனிசிறந்தமுறையில்விளையாடவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் நிலவுகின்ற நிலையில் இவ்வாறானதொரு கருத்தை அவர் முன்வைத்தார்.

"இந்திய அணி தற்போது நடுவரிசையில் சரியான வீரர் அமையாமல் திண்டாடி வருகிறது. ஆனால், ஒரு காலத்தில் டோனி நடுவரிசையில் களமிறங்கி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தார் என்பதற்காகத் தொடர்ந்து இனி அவரை நம்பியிருக்க முடியாது. டோனிக்கு இதுபோன்ற நெருக்கடிகளையும், அழுத்தங்களையும் வழங்காமல் அவரைச் சுதந்திரமாகவும், அழுத்தங்கள் இல்லாமலும் விளையாடச் செய்ய அணி நிர்வாகம் முயற்சிக்க வேண்டும். டோனி களமிறங்கினால், அவர்தான் வெற்றிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற சுமையை ஏற்றாதீர்கள். வெற்றிக்கு அணியில் உள்ள அனைவருக்கும் சம பொறுப்பு இருக்கிறது. இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுத்து அவர்களைச் சிறந்த வீரர்களாக மாற்றுங்கள். டோனி கிரிக்கெட்டை மகிழ்ச்சியாக உணர்ந்து விளையாட அனுமதியுங்கள்'' என்று கும்ளே மேலும் தெரிவித்தார். (ம)






## கெர்பர் அசத்தல் ஆட்டம்

சீனத்து ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது செற்றுக்குத் தகுதி பெற்றார் ஜேர்மனிய வீராங்கனை கெர்பர்.

பீஜிங் நகரில் தற்போது இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. கெர்பரை எதிர்த்து ஸ்பெய்ன் வீராங்கனை நவாமி ஒசாகா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 7:6, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றார் கெர்பர். (ம)



## ஒசாகா அதிரடி

சீனத்து ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது செற்றுக்குத் தகுதி பெற்றார் ஜப்பான் வீராங்கனை நவாமி ஒசாகா.

ஒசாகாவை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை டேனியல்ஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:1, 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் ஒசாகா. (ம)

## விற்பனைக்கு

யாழ். நகர பகுதியில் பாவித்த சட்டரிங் பலகை, தடிகள் என்பன விற்பனைக்கு உண்டு. விறகு தேவைகளுக்கும் பயன்படுத்தக்கூடியது.

தொடர்பு - 0718475531

## உதவிக் குருக்கள் தேவை

கொழும்பு, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு

**பிராமண உதவிக் குருக்கள்**

தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தங்குவதற்கு வீடு வசதி செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி

98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.
Phone: 011 2433881 / 011 2431406 / 0777 261 777 / 0722 447606
Email : muruganginthupitiya@gmail.com

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

AL, OL பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான

## இலவசக்கணினிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 2000ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் மாணவர்களிற்கு பயிற்சியினை வழங்கிய நிறுவனம்.

18 வது ஆண்டு நிறைவில் உலகின் தரமானதும் அதிக வேலைவாய்பினை உடைய நிறுவனங்களாகிய Oracle Campus, Microsoft IT academy, Cisco Academy, CIMA மற்றும் கொழும்பு பல்கலைககழக தகவல் தொழில்நுட்ப பிரிவு என்பனவற்றுடன் இணை நிறுவனாக தொழிற்படும் MCS IT CAMPUS இலவசக்கணினிப்பயிற்சி த்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள்

Type<FREE><Name><DOB><District>sendTo772395895

**MCS IT CAMPUS**

34 Sir Pon Ramanathan Rd, near University of Jaffna
சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகம், Microsoft,CIMA-UK விருதுகளை வென்ற நிறுவனம்






## குருநகர் பாடும்மீன் - றோயல் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 4

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று இடம்பெறும் அரையிறுதி ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி இன்று மோத வுள்ளது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இந்த அரையிறுதி ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)

## இந்திய அணி பெரும் சவால்

தீவுகளின் பயிற்சியாளர் ஸ்ருவேட் லா தெரிவிப்பு

இந்திய அணி மிகப் பெரும் சவாலானது என்று தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்ருவேட் லா.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையி லான டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பிக்கும் நிலையில் இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் லா. (ம)

# இந்தியா மே.தீவுகள் டெஸ்ட் தொடர் இன்று



இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.


மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. ராஜ்கோட் மைதானத்தில் இன்று முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

டெஸ்ட் தரப்படுத்தலில் இந்தியா 115 புள்ளிகளுடன் தற்போது முதலிடத்தில் உள்ளது.

தொடரை 2:0 என்ற அடிப்படையில் இந்திய அணி தனதாக்கினால் அந்த அணியின் புள்ளிகள் 116ஆக அதிகரிக்கும். 1:0 என்ற அடிப்படையில் இந்திய அணி தொடரை வென்றால் அந்த அணியின் புள்ளிகளில் எந்த மாற்றமும் ஏற்படாது. அதே நேரம் 0:2 என்ற அடிப்படையில் இந்திய அணி தொடரை இழந்தால் இந்திய அணியின் முதலிடத்துக்கு ஆபத்து ஏற்படும். (ம)

## மரண அறிவித்தல்

# இளையவி நடராஜா



பிறப்பு 1948.03.02 இறப்பு 2018.10.03

டச்சு வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி நடராஜா நேற்று (03.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி கண்மணி தம்பதியரின் அன்புமருமகனும் வேவிமலரின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் றொபின் காலஞ்சென்ற ஜெசின் மற்றும் ஜெகன், சுரேன், இராஜகருணா, ஸ்ரீபன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

இன்று (04.10.2018) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12 மணிக்கு உடுவில் செபமாலை மாதா கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில். தகவல் : குடும்பத்தினர். 077 6906 600, 021 224 2327


ராசி அதிர்ஷ்டம்

திகதி 03.10.2018 | வெற்றி வாரம் 2376 | வர்ணம் பச்சை

தனுசு | வெற்றி இலக்கங்கள் 19 20 29 44 | வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 12, 747, 584/=

2018.10.05 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

DLB CAR PLUS

சீட்டிழுப்பு வாரம் 078 சீட்டிழுப்பு திகதி 03.10.2018

வெற்றி இலக்கங்கள் 21 51 54 X புதன் 01 14 42, 98, 960/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3091 திகதி:2018.10.03 புதன்கிழமை ஊதா

SATURDAY FORTUNE

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 36 43 56 66 G போனஸ் இலக்கம் 09 அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 44,600,610/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 392 வர்ணம் : பச்சை சீட்டிழுப்பு திகதி: 2018.10.03

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,787,545/-

வெற்றி இலக்கங்கள் 01 37 42 51 ஆங்கில எழுத்து D

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.